
கல்கி
KALKI பிப்ரவரி 5, 1956
4 அணா


"இந்த அழகு தரும் சோப் தனிவிதமானது"
புதியது! நறுமணமுள்ளது!
ப்ரீஸ்
BREEZE
"ஆக்டமர் கலந்துள்ளது"
* உடலிலுண்டாகும் துர்கந்தத்தை நீக்குகிறது
உங்களை புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
* சருமத்திலுள்ள கிருமிகளை கொல்லுகிறது
சருமத்தை ஆரோக்கியத்துடனிருக்க பாது காப்பளிக்கிறது!
ஆக்டமர் (பைதியோனல்) மான்ஸான்டோவின் புதுமையான பாக்டீரியோஸ்டாட். அது கிருமிகளை கொல்லக் கூடிய சிறந்த சக்தியை உடையதாயிருந்தாலும், சருமத்திற்கு மென்மையைத் தரக்கூடிய ரசாயனப் பொருள்.
விலை 8 அணாதான்
உள்ளூர் வரிகள் நீங்கலாக
BREEZE TOILET SOAP
ப்ரீஸ்-ஆக்டமர் கலந்த அழகு தரும் சோப்
BZ. 1-50 TM

பிப்ரவரி 5 1956
மலர் 15
இதழ் 47
மன்மத வரு
தை 23

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 15
இதழ் 27

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

மன்மத ஆண்டு
தை மீ 23

தக்ஷிணப் பிரதேசம்

எஸ். ஆர். ஸி கமிட்டியின் அறிக்கை வந்தாலும் வந்தது. அதைத் தொடர்ந்து, தேசம் எங்கும் புதிது புதிதாகக் கிளர்ச்சிகளும் குழப்பங்களும் படம் எடுத்து ஆட ஆரம்பித்தன! இந்தக் கொந்தளிப்பை யெல்லாம் பார்த்தபோது, "இதைக் கொஞ்ச காலத்துக்கு ஊறுகாய் போட்டு வைத்துவிட்டால் என்ன! இப்பொழுது என்ன அவசரம் வந்தது!" என்று எண்ணினோம். கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சுதந்திரத்திற்கும் நல்ல பெயருக்கும், அகில உலகச் செல்வாக்கிற்கும் இழுக்கு ஏற்பட்டு விடக்கூடாதே என்று கவலைப்பட்டோம். இந்தச் சந்தர்ப்பத்திலே, விஷத்திற்குப் பின் தோன்றிய அமுத உதயமாக வந்தது, மேற்கு வங்காள அறிக்கை! பிஹார்ப் பிரதமரும் மேற்கு வங்கப் பிரதமரும் சேர்ந்து, பிஹாரும் மேற்கு வங்காளமும் ஒரு ராஜ்யமாக ஒன்று சேர விரும்புவதாக, அறிக்கை வெளியிட்டுப் பாரத நாட்டுக்கே வழி காட்டினார்கள். இதையடுத்துச் சென்ற வாரம் தக்ஷிணப் பிரதேச யோசனையையும் முழுமனத்தோடு ஆதரித்துப் பல தலைவர்களும், பிரமுகர்களும் அபிப்பிராயம் வெளியிட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சி தருகிறது.

திருவனந்தபுரத்தில் அகில இந்தியத் தொழில், விவசாயக் கலைக் கண்காட்சி மகாநாட்டில் பேசிய மத்திய அரசாங்க உற்பத்தி இலாகா மந்திரி கே. ஸி. ரெட்டி அவர்கள் "தக்ஷிணப் பிரதேசம் அமைக்க வேண்டும் என்னும் யோசனையை தீர்க்கமாகக் கவனிக்க வேண்டும்" என்று சொன்னார். இதே கருத்தை மக்கள் சபையின் திருவாங்கூர் அங்கத்தினர் ஸ்ரீ கேளப்பன் அவர்களும் மற்றும் பலரும் தெரிவித்திருக்கிறார்கள். திருவாங்கூர்–கொச்சி பிரதேச காங்கிரஸ் கமிட்டியும், காங்கிரஸ் சட்டசபைக் கட்சியும் ஒன்று கூடி தக்ஷிணப் பிரதேச யோசனையை ஆதரித்திருக்கிறார்கள். சென்னை வக்கீல்கள் சேர்ந்து கையெழுத்துச் செய்து வெளியிட்டுள்ள அறிக்கையிலும், பிறகு ஒன்றுகூடிச் செய்த தீர்மானத்திலும் தக்ஷிணப் பிரதேச யோசனையையே உறுதியோடு ஆதரித்திருக்கிறார்கள். பிரதேசங்களை ஒன்றாக இணைத்து ராஜ்யங்கள் அமைப்பதன் நன்மைகளைத் திருவாங்கூர் - கொச்சி முதன் மந்திரி கோவிந்த மேனன் அவர்களும் விளக்கிப் பேசி யிருக்கிறார்.

அகில இந்தியத் தராசில் தெற்குத் தட்டு பாரம் இழந்துபோய் நின்று விடாமல் காக்க வேண்டும் என்று 'கல்கி'யில் பல தடவை சொல்லிவந்தோம். "ஒரு நாட்டின் சரித்திரம் போகும் போக்கில் அவ்வப்போது ஏற்படும் நிலைமைக்குத் தகுந்தவாறு இயற்கை வேகங்களை அலசி ஆராய்ந்து, தைரியத்துடன் புதுக் கருத்துக்களை உட்கொண்டு நிறைவேற்றுவதுதான் அரசியற் புலமையாகும்" என்று அக்டோபர் 23உ இதழில் குறிப்பிட்டிருந்தோம். தெற்குப் பேரிராஜ்யம் ஒன்று அமைந்தால்தான் தென்னாட்டு மக்களின் செல்வாக்கு பாரத சமுதாயத்தில் குறைவின்றி விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த தக்ஷிணப் பிரதேசத்து யோசனைக்கு ஆதரவு ஏற்பட்டு வருவது நாட்டின் எதிர்காலத்துக்கு ஒரு நல்ல அறிகுறி. தென்னாடு சிதறிப் போகுமோ என்ற பயம் இப்பொழுது குறைந்து வருகிறது. வங்காளமும் பிஹாரும் காட்டிய வழியைப் பின்பற்றி நம்முடைய தென்னாட்டுத் தலைவர்களும் இந்த தக்ஷிண ஐக்கியத்துக்கு ஊக்கத்தோடு முயற்சி எடுக்க வேண்டும் என்றும், நமது தென்னாடு செல்வாக்கிலும் கௌரவத்திலும் ஒன்றுபட்டுச் சிறந்து நிற்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம்.

பிரதேசத்தில் தாய்பாஷையாக வழங்கி வரும் பாஷைகள் ஒன்றோ இரண்டோ மூன்றோ அவ்வளவும் தக்ஷிணப் பிரதேசத்தில் அரசியல் பாஷைகளாக இருக்க

வேண்டியது. இரண்டு மூன்று பாஷைகள் அரசியல் பாஷைகளாக இருப்பதற்கு ஒரு இடையூறும் இல்லை. அந்தந்த மக்களுக்கு அந்தந்த பாஷை பயன்படுமாறு நிர்வாகம் நடப்பதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. ஆனால் பாஷை ஒன்றாக நிற்க வேண்டும் என்பதற்காக ராஜ்யத்தைக் குறுக்கி நஷ்டம் அடைய வேண்டியது இல்லை. மக்களின் முன்னேற்றத்துக்காகச் செய்ய வேண்டிய பெருந் திட்டங்களுக்குத் தென்னாடு ஒன்றாக இருந்தால்தான் சௌகரியம். இல்லாவிடில் பெருந்திட்டங்கள் எல்லாம் விவாதங்களில் சிக்கி நின்று போகும்.

சர்க்கார் நிர்வாகத்தில் இன்ஷ்யூரன்ஸ்

நமது பாரத அரசாங்க மத்திய நிதி மந்திரி ஸ்ரீ தேஷ்முக் அவர்கள் சமீபத்தில் ஒரு மகத்தான அதிசயம் நிகழ்த்தினார். அவர் செய்த ராஜிநாமாவை நாம் குறிப்பிடவில்லை. உண்மையிலேயே அவர் நாம் அனைவரும் திகைப்படையும்படியான ஒரு பெருஞ் செயலைச் செய்து தீர்த்து விட்டார். நமது பாரத தேசத்திலுள்ள இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் அனைத்தையும் ஓர் இரவில் தேசியமயம் ஆக்கி விட்டார்!

கடைசி நிமிஷம் வரை, அதாவது ரேடியோவில் நிதி மந்திரி அறிவிப்புச் செய்யும் வரை இந்த விஷயம் யாருக்கும் தெரியாத ஒரு பெரிய இரகசியமாக இருந்தது! மறு நாள் காலை நாடெங்கிலும் உள்ள இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் நிர்வாகப் பொறுப்பை ஸர்க்காரே மேற்கொண்டார்கள். அங்கங்கே ஸர்க்கார் அதிகாரிகள் உரிய உத்தரவுகளோடு சென்று கம்பெனிகளின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

பல அயல் நாடுகளில் ஸர்க்காரே இன்ஷ்யூரன்ஸை எடுத்து நடத்துகிறார்கள். அதைப் போல இனி நமதுநாட்டிலும் இன்ஷ்யூரன்ஸ், ஸர்க்காரின் நிர்வாகத்தில் இருக்கும்.

இது விஷயமாக வியாபார வட்டாரங்களில் பலத்த சர்ச்சை நடந்து வருகிறது. இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகத்தை ஸர்க்கார் ஏற்றுக் கொண்டது சரியா, அல்லது தவறா என்று இரு கட்சிகள் பலமாக விவாதிக்கிறார்கள்.

"தபால் இலாகாவின் இன்ஷ்யூரன்ஸைப் போல் இனி எல்லா இன்ஷ்யூரன்ஸிலுமே, கட்டணத் தொகை குறையும்; அதனால் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை ஸர்க்கார் ஏற்றுக்கொண்டது நல்ல காரியம்'' என்கிறார்கள் சிலர்.

"இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் தனி முதலாளிகளின் நிர்வாகத்தில் இருந்து வந்ததால் இதுவரை இந்தக் கம்பெனிகளில் குறைந்த படிப்புக்காரர்களுக்கும் உத்தியோகம் கிடைத்து வந்தது. இனி இதுவும் ஸர்க்கார் நிர்வாகத்தில் ஆகிவிட்டால், குறைந்த படிப்புக்காரர்களுக்கு வேலை கிடைக்காமல் போய் விடும். மற்றச் சர்க்கார் இலாகாக்களைப் போல இங்கும் பெரிய படிப்புக்காரர்களே இடம் பெறுவார்கள்'' என்கிறார்கள் வேறு சிலர். இதுவும் உண்மைதான்.

"அநியாயமாகச் சில தனிப்பட்ட மனிதர்கள் லாபம் சம்பாதிப்பது இனி நின்று போகும். எனவே சர்க்கார் செய்தது சரிதான்'' என்பது சிலருடைய கட்சி. இதுவும் உண்மைதான். "படிப்படியாக எல்லாத் தொழில் துறைகளையும் சர்க்காரே எடுத்துக் கொண்டு விட்டால், பிறகு ஸர்க்கார் வேலை கிடைக்காத, ஸர்க்கார் உத்தியோகங்கள் அல்லாத, பொது மக்களுக்கு எதுதான் மிஞ்சும்! பிறகு ஸர்க்கார் யாருக்கு வரி போடுவது என்கிற கஷ்டமும் உண்டாகும் அல்லவா'' என்கிறார்கள் சிலர். பேராசைப் பட்டுத் தங்க முட்டை இட்ட கோழியையே தீர்த்த கதையாக முடிந்து விடுமோ என்று ஐயப்படுகிறார்கள். இந்தச் சந்தேகத்துக்கும் காரணம் உண்டு.

ஜனங்கள் ஏதாவது சம்பாதித்தால், அதாவது மிச்சம் பண்ணக் கூடிய வகையில் சம்பாதித்தால்தானே, அந்த மிச்சத்திலிருந்து இன்ஷ்யூர் செய்து பணம் கட்டி வாழ முடியும். எல்லாத் தொழில்த் துறைகளையும் ஸர்க்கார் எடுத்துக் கொண்டு விட்டால் நிலைமை எப்படியாகும் என்று பலர் கவலைப்படுகிறார்கள். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் தனிப்பட்ட நிர்வாகப் பொறுப்பில் இருந்தால்தான் சுறுசுறுப்பாக வேலை நடக்கும் என்றும், இறந்து போனவர்களின் குடும்பங்களுக்குத் தாமதம் இன்றிப் பணம் போய்ச் சேரும் என்றும், பல கம்பெனிகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு தங்கள் கடமைகளை விரைவாகச் செய்து காட்டி மக்களிடம் ஆதரவு தேட முயற்சிக்கும் என்றும், அப்படியல்லாமல் ஸர்க்கார் கைக்கு மாறி விட்டால், இப்பொழுது வயது கடந்துவிட்ட பள்ளி ஆசிரியர்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய ப்ராவிடென்ட் பண்ட் தொகைகளை விநியோகிப்பதில் ஸர்க்காரைப் பற்றிப் பல புகார்கள் இருப்பது போல, இன்ஷ்யூரன்ஸ் விஷயத்திலும் இனி ஆவலாதிகளுக்கு இடம் ஏற்படும் என்றும் வேறு சிலர் கூறுகிறார்கள்.

இன்ஷ்யூரென்ஸ் தொழில் ஸர்க்காரின் கைக்கு மாறி விருப்பதனால், இத்தனை வாதப் பிரதிவாதங்களும் நடைபெறுகின்றன. எந்த ஒரு தொழிலிலும் மோசம் அதிகமாகிவிட்டால் அந்தத் தொழில் திருத்தமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாட்டை உடனடியாகச் செய்ய வேண்டியது, மக்கள் அரசாங்கத்தின் கடமையே யாகும். இதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனாலும், மோசத்தைத் திருத்துவதற்காக அந்தத் தொழிலையே ஸர்க்கார் மேற்கொண்டு ஒரு ஸர்க்கார் இலாகாவாகவே அதை மாற்றி விட வேண்டுமா என்பதுதான் கேள்வி.

அட்டைச் சித்திரம்

இந்த இதழ் அட்டைப் படத்தில் வரும் காட்சி அமரதாரா தொடர் கதையில் வரும் ஒரு கட்டத்தைச் சித்திரிக்கிறது.

சர்வோதய ஒலிபரப்பு

ராஜாஜி

முப்பத்தேழு வருஷத்துக்கு முன்பு நான் காந்தி மகானை நேரில் கண்டேன். பேஸின் ப்ரிட்ஜ் ஸ்டேஷனில் அவரை ரயிலிலிருந்து இறக்கிச் சென்னையில் என் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். இப்போது ஐம்பது வயதுக்குக் கீழுள்ளவர்கள் யாரும் அப்போது பிறந்திருக்கவில்லை. அல்லது குழந்தைகளாகத் தான் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அன்று முதல் நான் அவருக்கு ஆப்த நண்பராகி விட்டேன். முப்பது வருஷம் நாங்கள் இருவரும் கூடிய காலத்திலெல்லாம் சிரிப்புத் தவிர வேறு ஒன்றுமில்லை. காந்தியைப்போல் சிரித்து விளையாடுகிறவர்கள் வேறு யாருமில்லை. எனக்கு அவர் அரசியல் தலைவர், குரு என்றெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். பிறரும் அப்படியே எண்ணுவார்கள். ஆனால் அவருடைய சிரிப்பும் நட்பும்தான் என்பெருஞ்செல்வமாக இருந்தன.

அது போகட்டும்.

அவரை நான் முதன்முதலில் சந்தித்த காலத்தில் மிதவாதிகள் தீவிரவாதிகள் என்று இரண்டு அரசியல் கட்சிகள் இந்தியாவில் வேலை செய்து வந்தார்கள். வேலைசெய்து வந்தார்கள் என்றால் பேசிப் பிரசங்கங்கள் செய்து வந்தார்கள்.

முதன் முதலில் தீவிரவாதிகள் மகாத்மாவை சந்தோஷமாக வரவேற்றார்கள். ஆனால் பிறகு தீவிரப் பேச்சுக்காரர்களை "நீங்கள் தீவிரமாகப் பேசுவதை நிறுத்திவிட வேண்டும். தீவிரமாகத் தியாகம் செய்ய வேண்டும்" என்று சொல்ல ஆரம்பித்ததும், தீவிரவாதிகளுக்கும் அவருக்கும் வித்தியாசம் ஆரம்பித்துவிட்டது. "திட்டுவதும் தாக்குவதும் பயனில்லை, சிறை செல்ல வேண்டும், துப்பாக்கிக்கு இரையாவதற்கும் தயாராக இருக்க வேண்டும், உங்கள் குடும்பங்களைக் கவனிப்பதும் விட்டுவிட வேண்டும்" என்றெல்லாம் சொன்னபோது, தீவிரவாதிகளின் உற்சாகம் குறைந்து போயிற்று. அந்தக் காலத்தில் ஆங்கில உத்தியோகஸ்தர்களைச் சமயம் வாய்த்த போது சுட்டுத்தள்ளி சுயராஜ்யம் சம்பாதிக்கலாம் என்று சிலர் எண்ணியும் வேலை செய்தும் வந்தார்கள். அவர்களுடைய தைரியத்தையும் தியாக புத்தியையும் கண்டு மகாத்மாவுக்கு அவர்களிடம் மிக அன்பு. அவர்களைத் தம் வழிக்கு இழுக்கப் பெரு முயற்சி செய்தார். வெற்றியும் பெற்றார்.

மற்ற நாடுகளைப் போலவே நம்முடைய நாட்டிலும் குறைவு இல்லை, மிகப் பெரிய மகான்கள் அவ்வப்போது பிறந்து மறைந்திருக்கிறார்கள். சத்தியமும் தர்மமும் ஓங்கி வளர வேண்டும் என்கிற ஆசையிலேயே ஈடுபட்ட காந்தி மகான், இந்திய நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்கிற காரியத்தில் கலந்து மூழ்கி விட்டார். அவருடைய பற்று எல்லாம் தர்மத்தில். ஆனாலும் அவர் அரசியலில் ஈடுபட வேண்டியதாயிற்று. சுதந்திரம் அடைவதற்கு அதர்ம மார்க்கங்களைச் சிலர் கையாண்ட காலத்தில் மகாத்மா காந்தி திடீரென்று பிரவேசித்து, "அந்த மார்க்கங்கள் வேண்டாம். அவற்றை விட நிச்சயமாகப் பலன் தரும் சக்தி உங்களுக்குள் இருப்பதை அறியாமல் வீண் யோசனைகள் செய்கிறீர்கள்" என்று மக்களுக்குச் சொன்னார். அந்த சக்தி என்னவென்று இப்போது அனைவரும் அறிவார்கள். அந்த சக்தியின் பயனையும் அனைவரும் கண்டார்கள்.

அப்பொழுது யாரும் எதிர்பாராத பூரண அரசியல் சுதந்திரத்தை இப்போது அடைந்து விட்டோம். அதையும் கண்டு விட்டு அவர் மறைந்தார்.

மறைந்த தேதி இன்று.

மக்கள் விலங்குகளின் நிலையில் இருந்து, மேல்நிலை அடைந்தது எப்படி? ஒருவருக்கு ஒருவர் உதவி, ஒன்றுபட்டு, தனிப்பட்ட லாபங்களை மறந்து பொது நன்மையை உத்தேசித்து வேலை செய்து வந்ததால், மானுட குலம் மானுட நிலை அடைந்திருக்கிறது. உலகத்தை ஆள்கிறது. இல்லாவிடில் ஒழிந்தே போயிருப்போம். வியாதி ஓரளவு தீர்ந்தபின், நோயாளி பத்தியக் கிரமத்தை மறந்து விட்டுத் தவறு செய்து புது வியாதி சம்பாதித்துக் கொள்வது போல், ஒற்றுமைத் தத்துவத்தை மறந்து, இப்பொழுது ஊர்ச் சண்டையும் ஜாதிச் சண்டையும் வளர்த்து வருகிறோம்.

1920-ம் ஆண்டுக்கு முந்தி, "இத்தகைய சண்டைகள் நமக்குள் இல்லவே இல்லை, செய்ய மாட்டோம்" என்று ஆங்கிலேயருக்கு நாம் சொல்லி வந்தது, வெறும் பொய்ப் பேச்சா? அவற்றையெல்லாம் ஒழித்து மறுபடியும் பத்தியக் கிரமத்தை அநுசரிப்போம் என்று தீர்மானித்துக் கொள்ளும் நாள், இந்த சர்வோதய தினம்.

பாரத நாட்டுக்கு சம்பிரதாய பீடங்களை வகுத்துக் கொடுத்த நாடு, தென்னாடு. விவேகாநந்தருக்கு ஆதரவும் பக்தியும் முதலில் செலுத்திய நாடு தென்னாடு. திலகருடைய முக்கிய சீடர்கள் தோன்றிச் சிறைப்பட்ட நாடு தென்னாடு. காந்தியடிகளின் கருத்துக்களை நன்றாக முதலில் உணர்ந்த நாடு தென்னாடு. அந்தக் கௌரவத்தைக் காப்பாற்றுவோமாக!

இப்போதும் நாம் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் பல உண்டு. திடீரென்று இப்பொழுது மகாத்மா காந்தி நமக்குள் தோன்றி, இங்கே இப்போது நடக்கும் விஷயங்களைப் பார்த்து விட்டால், அவர் என்ன சொல்லுவார் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். பொய் வேஷங்களை ஒழித்து நல்வழியில் நடப்போமாக.

1919-ம் ஆண்டில் மகாத்மா காந்தி தென்னாட்டுக்கு வந்து திரும்பிய காலத்தில் இந்தப் பிரதேசத்து மக்களிடத்தில் அவருக்கு உண்டான அபார நம்பிக்கையையும் அன்பையும் அறிந்தவர்களில் நான் ஒருவன். அவருடைய இதயத்தில் நாம் தனியிடம் பெற்றிருந்தோம். அதை நினைவில் வைத்து இப்போதும் நாம் நடந்து கொள்ள வேண்டும். நம்மை நடத்திய நாயகன் தீர்ந்து போனான் என்று எண்ண வேண்டாம். ஈசுவரன் மறைந்து இருந்தாலும், இருக்கவே இருக்கிறான் அல்லவா? அப்படியே மகாத்மாவும் இருக்கவே இருக்கிறார். பயந்து நடப்போமாக!

[இந்த ஆண்டு சர்வோதய தினத்தன்று சென்னை அகில இந்திய ரேடியோவில் நிகழ்த்திய சொற்பொழிவு.]

தக்ஷிண ரெயில்வே

கும்பகோணத்தில்

மகத்தான மஹா மக வைபவம்

16-2-1956 முதல் 25-2-1956 வரை

மஹா மகம் - ஸ்நான தினம் - 25-2-56 சனிக்கிழமை

நிகழ்ச்சி விவரங்கள் :

துவஜாரோஹணம்	16-2-56	(காலை)	கைலாச வாகனம்	21-2-56	(இரவு)
சேஷ வாகனம்	17-2-56	(இரவு)	குதிரை வாகனம்	22-2-56	(இரவு)
பூத வாகனம்	18-2-56	(இரவு)	தேர் விழா	23-2-56 & 24-2-56	
யானை வாகனம்	19-2-56	(இரவு)	ரிஷப வாகனம்	25-2-56	(காலை)
ரிஷப வாகனம்	20-2-56	(இரவு)	தீர்த்தவாரி (மஹா மகக் குளத்தில்)	25-2-56	

மேற்படி திருவிழாவை யொட்டி 2வது, 3வது வகுப்பு ரிட்டர்ன் டிக்கட்டுகள், இரு ஒற்றைப் பிரயாண சார்ஜுகளில், சாதாரண வண்டிகளுக்குக் கும்பகோணத்திலிருந்து 100 மைல்கள் அல்லது அதற்குட்பட்ட எல்லா ஸ்டேஷன்களிலிருந்தும் வழங்கப்படும்.

திரும்பும் பிரயாணத்தை முடித்துக்கொள்ள செல்லுபடியாகக் கூடிய தேதி

(i) கும்பகோணத்திலிருந்து 29 மைலிலும் அதற்குட்பட்ட ஸ்டேஷன்களிலிருந்தும் வழங்கப்பட்ட டிக்கட்டுகள்.	டிக்கட் வழங்கிய தேதிக்கு இரண்டாம் நாள் அல்லது டிக்கட் முன் கூட்டியே வழங்கப்பட்டிருந்தால் பிரயாணம் தொடங்கிய தேதிக்கு இரண்டாம் நாள் இரவு 12 மணிக்குள்ளாகத் திரும்பும் பிரயாணத்தை முடித்துக்கொள்ள வேண்டும்.
(ii) கும்பகோணத்திலிருந்து 30வது மற்றும் 100வது மைல்களுக்கு இடையில் உள்ள ஸ்டேஷன்களில் வழங்கப்பட்ட டிக்கட்டுகள்.	டிக்கட் வழங்கிய தேதியிலிருந்து மூன்றாவது தினம் அல்லது டிக்கட் முன் கூட்டியே வழங்கப்பட்டிருந்தால் பிரயாணம் தொடங்கிய தேதியிலிருந்து மூன்றாவது தினம் இரவு 12 மணிக்குள்ளாகத் திரும்பும் பிரயாணத்தை முடித்துக் கொள்ள வேண்டும்.

அரை சார்ஜ்—3 வயதிற்கு மேற்பட்ட ஆனால் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு.

மேற்படி ரிட்டர்ன் டிக்கட்டுகள் **16-2-56 முதல் 29-2-56 வரையில்** வழங்கப்படும்.

இரண்டாவது வகுப்பில் இடத்திற்கு ரிசர்வேஷன் செய்வதற்கு வழக்கமான விதிகளையே அனுசரிக்க வேண்டும்.

போக்கு வரத்து நெருக்கடியைச் சமாளிப்பதற்கு சாத்தியமான வரையில் விசேஷமான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும்.

கும்பகோணத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் இவ் வைபவத்திற்கு விஜயம் செய்யுங்கள். மஹா மக குளம் புண்ணிய தீர்த்தத்தில் புனித நீராடுங்கள்

சென்னை

சீப் கமர்ஷியல் சூப்பரின்டென்டெண்ட்

என்ன சேதி?

திருப்பணியில் பங்கு

திருவையாற்றில் தியாகய்யர் திருவிழா சிறப்புடன் ஆரம்பமாகி, அமோகமாக நடைபெற்று வருகிறது. நாதவெள்ளம் பொங்கிப் பெருகி சங்கீத ரஸிகர்களின் செவிகளில் நிரப்பி அவர்களை ஆனந்தக் கடலில் மூழ்கடித்து வருகிறது.

கர்நாடக சங்கீத பரம்பரையில் வந்த வித்வான்கள் மிகப் பெரும்பாலோர் தியாகய்யர் திருவிழாவில் கலந்து கொண்டு கச்சேரிகள் செய்கிறார்கள். தியாகய்யரின் திருவிழாவில் கலந்து கொள்வதுடன் தியாகய்யரின் தீஞ்சுவைக் கீர்த்தனங்களை மெய்யுருகப் பாடிப் பரவச மடைவதால் அவ்வளவு பேரும் பாரம்பரியமான உயர் தரக் கர்நாடக சங்கீத வித்தையைச் செல்வமாக அடைந்தவர்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது.

கிடைத்தற்கரிய இந்தச் செல்வத்தை அவர்கள் பெற்று மகிழும்படி செய்தவர்கள் சங்கீத மும்மூர்த்திகள் என்று புகழ் பெற்ற தியாகய்யர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மகான்கள் அல்லவா? அவர்களுக்கு அவர்கள் பிறந்த புண்ணிய க்ஷேத்திரமாகிய திருவாரூரில் ஞாபகார்த்த மண்டபம் கட்டுவதற்கு முயற்சி நடந்து வருவது "கல்கி" நேயர்கள் அனைவரும் அறிந்ததே. அந்த உத்தமத் திருப்பணிக்கு அள்ளிக் கொடுத்து உதவ வேண்டும் என்று சங்கீத உலகில் பிரபல மடைந்துள்ள முப்பத்து நாலு சங்கீத வித்வான்கள் கையொப்பம் இட்டு விடுத்துள்ள வேண்டுகோளை இந்தக் 'கல்கி' இதழில் வேறு பக்கத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம்.

சங்கீத வித்வான்கள் திருவாரூர் சங்கீத மும்மூர்த்திகள் நினைவு மண்டபத் திருப்பணியில் உற்சாகமாக ஈடுபட்டு வேண்டுகோள் விடுத்திருப்பது ரஸிகத் தமிழ்ப் பெருமக்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

இந்தப் புனித கைங்கரியத்தில், நமது பங்கும் சேர வேண்டும் என்று ஆர்வம் கொள்ளாத தமிழர் யார் இருக்க முடியும்?

தமிழ்நாட்டின் பெருமைக்கு அறிகுறியாக விளங்கப் போகும் தலைசிறந்த இந்தத் திருப் பணிக்கு அபரிமிதமான ஆதரவு அளிக்க வேண்டுமாய்த் தமிழ்ப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

லேவாதேவி ஒழுங்கு மசோதா

லேவாதேவியை ஒழுங்கு படுத்தும் நோக்கத்துடன் விவரமாகப் பரிசீலனை செய்து தங்கள் சிபார்சுகளைச் சமர்ப்பிக்கும் பொருட்டு ஒரு கமிட்டி நிறுவப்பட்டு ஆலோசித்து வருகிறதென்பதை நேயர்கள் அறிவார்கள். லேவாதேவிச் சட்டம் முக்கியமானதுதான். ஆனால் அது கடன் கொடுப்பவர் - வாங்குபவர் இரு சாராருக்கும் நியாயமானதாக இருக்க வேண்டியது அவசியம். சாதாரணமாகக் கடன் கொடுப்பவர் தமக்கு வரும் வட்டி வரும்படியால் ஜீவிக்கிறார். கடன் வாங்குபவர் கடன் வாங்கும் தொகையால் தன் ஜீவனோபாயத்தை விருத்திசெய்து கொண்டு ஜீவிக்கிறார். இவர் அவருக்கு முக்கியம். அவர் இவருக்கு முக்கியம். நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா என்ற சம்பந்தம்.

நமது நாட்டில் ஒரு பேர்வழிக்கு வருஷ வருமானம் சராசரி ரூ. 274 தான். இதில் 80 சத விகிதத்துக்கு அதிகமாக அவர் தம்முடைய உணவில் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதனால் ஒருவருக்குச் சதா பணமுடை இருக்கத்தான் செய்யும். கடன் வாங்குவதைவிட வேறு வழி இல்லாத நிலையில் சந்தர்ப்பங்கள் எப்பேர்ப்பட்ட புத்திசாலிகளையும் கட்டாயப்படுத்தி விடுகின்றன. பாங்குகள், கோவாப்ரேட்டிவ் சொஸைட்டிகளில் கடன் வாங்க வசதிகள் இருக்கின்றன வெனினும் அவசரத்தில், பிரசவம், நோய் போன்ற சங்கட நிலைமைகளில் ஏழை மக்கள் திடீரென லேவாதேவிக்காரரிடம் தான் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவரும் வட்டி வாங்கிக் கொண்டால்கூட சமயத்திற்குச் சஞ்சீவியாக உதவி செய்கிறார். ஆகையால் இந்த இரு சாராருக்கிடையில் ஒரு தர்ம நியாயம், தெய்வ நீதி இருந்து கொண்டே இருக்க வேண்டும். அந்த நியாயத்தைச் சட்டம் மூலமாக ஒரு கட்டுப்பாடு வைப்பது இரு சாராருக்கும் நல்லதுதான். முக்கியமாக வட்டி விகிதம், வசூலிக்கும் காலம், விதம், முறை, இவைகளை இரு சாராருக்கும் நியாயமாக நிர்ணயிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

குடியரசு தின விழா

குடியரசு தின விழாவை நாடெங்கும் மக்கள் குதூகலமாகக் கொண்டாடினார்கள். திருச்சி டெலிபோன் எக்சேஞ்ச் காரியாலயத்தினரும் சிறப்பாகக் கொண்டாடினர். காலையில் டிவிஷனல் இன்ஜினியர் திரு கே. கே. பிச்சுமணி சுதந்திரக் கொடியைப் பட்டொளி வீசப் பறக்க விட்டார்.

அன்று மாலையில் ஸ்ரீமதி ருக்மிணி பிச்சுமணி அவர்கள் பெண்களுக்கென ஒரு பொழுது போக்குச் சங்கத்தைத் துவக்கி வைத்தார். தேநீர் விருந்துக்குப் பின் குமாரி பிரேமாவின் இன்னிசைக் கச்சேரி நிகழ்ந்தது. பக்கவாத்தியமாகத் திரு சுந்தரேசன் பிடிலும், திரு பி. சீனிவாசன் மிருதங்கமும் வாசித்தார்கள். விழாவுக்குத் தலைமை வகித்த திரு பிச்சுமணி, பொழுது போக்குச் சங்கத்தைப் பற்றியும், இன்னிசைக் கச்சேரியைப் பாராட்டியும் பேசினார். காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் குடியரசு தின விழா கோலாகலமாக நடந்தேறியது.

மாதர் சங்க ஆண்டு விழா


குழந்தைகளுக்காகப் பள்ளி திறவிப் பெரும் சேவை செய்து வரும் திருவல்லிக்கேணி சீனிவாச சங்கத்தார் தங்கள் ஆண்டு விழாவை ஜனவரி மாதம் 29ந் தேதி 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். அநாதைப் பெண்களுக்குப் புனர் வாழ்வளித்து அருந் தொண்டாற்றி வரும் சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள், தலைவரை வரவேற்றுப் பேசினார். ஆண்டு விழாக் கொண்டாட்டத்தை யொட்டி, குமாரி மாலதி, வனமாலா ஆகியோரின் பரத நாட்டியம் ஜனரஞ்சகமாக நடந்தது. நடனமாடிய இரு குமாரிகளும் 'நடனமாடினார் வெகு நாகரிகமாகவே' என்னும் கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடலுக்கு அழகாக அபிநயம் பிடித்தனர். 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்கள் தமது சொற்பொழிவில், "கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடலில் வரும் வெகு நாகரிகமாக என்னும் வரியைக் கருத்தில் கொண்டு, நடனமாடும் எல்லாக் கலைஞர்களும் தமிழ்ப் பண்பாட்டுக்கும், பெண் குலத்தின் பெருமைக்கும் இழுக்கு வராத முறையில் வெகு நாகரிகமாக நடனமாட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். சகோதரி அம்புஜம்மாள் அவர்கள் நன்றியுரை கூற மாதர் சங்க ஆண்டு விழா இனிது நடந்தேறியது.

குடந்தையில் கும்பாபிஷேகம்

பல நூறு ஆண்டுகளாகக் கால வெள்ளத்தை எதிர்த்து நின்று பெருமை பெற்ற பெரிய பெரிய கோயில்கள் நம் தமிழகம் முழுவதும் விளங்குகின்றன. மேற்படி ஆலயங்களில் பல சிதில மடைந்தும் பாழ்பட்டும் இருக்கின்றன. அவ்வாலயங்களைப் பல பக்தர்களின் முயற்சியால் மீண்டும் புதுப்பிக்கும் பணியும் ஆங்காங்கு நடைபெற்று வருகிறது.

அத்தகைய பணியின் சிறப்பைக் குடந்தை சக்கரபாணி ஆலயத்தில் யாவரும் கண்டு களிக்கலாம். ஆழ்வார்களால் தெய்வத் தமிழில் மங்களாசாஸனம் செய்யப்பட்டு தெய்வ மணம் கமழும் மேற்படி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகமும் மகா சம்புரோக்ஷணமும் ஜனவரி 31ம் தேதி முதல் துவங்கி, ஹோமங்கள், வேத பாராயணம், திவ்யப் பிரபந்தம், இதிகாச புராண படனம் முதலிய வைபவங்களுடன் சிறப்பாக நடைபெறுகிறது. இந்த மகா கும்பாபிஷேக விழாவுடன் மகாமக உற்சவமும் சேர்ந்து குடந்தை நகரத்தைக் குதூகல நகரமாக்குகிறது.


வருகிறது...
நாகபூஜையின் மகாத்மியத்தை
விளக்கும் நல்லதொரு
தமிழ் சித்திரம்...
நாகபஞ்சமி
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனி தயாரிப்பு....
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம் · வசனம்: உதயகுமார்
அஞ்சலிதேவி · கண்ணாம்பா · எஸ். வரலக்ஷ்மி ·
ருஷ்யேந்திரமணி · லக்ஷ்மிபிரபா ·
வி. நாகையா · தங்கவேலு ·
வரதன் · நடராஜன் ·
நடித்தது...


விவாக ரத்து
வர்மா

செலுத்தினார். அந்த அன்பின் காரணமாக மறு விவாகத்துக்கு அவர் இசையவில்லை. குழந்தை லீலாவை வளர்க்கத் தன் விதவை சகோதரி செல்லம்மாவைத் தன் வீட்டோடு வைத்துக் கொண்டு அவள் மகன் ரங்கசாமியின் படிப்பையும் தாமே ஏற்றுக் கொண்டார்.

லீலாவுக்கு விவாகத்துக்குரிய காலம் வந்த போது அவளை ரங்கசாமிக்கு விவாகம் செய்து கொடுத்து மகளைத் தம் வீட்டோடு வைத்துக் கொள்ள எண்ணினார் கேசவன். ஆனால் லீலாவோ அவனை மணந்து கொண்டு அவனைக் கஷ்டத்திற்குள்ளாக்க விரும்பவில்லை. தன் காலேஜ் காதலன் மூர்த்தியைத்தான் மணம் செய்துகொள்வேன் என்று பிடிவாதமாகக் கூறியதும் கேசவனும் தம் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டார். லீலாவின் அத்தை மட்டும் முகத்தைச் சுளித்தாள்.

"அப்பா! என்ன யோசனையில் இருக்கிறீர்கள்! எங்கள் விவாகத்தின் ஞாபகமாக ஏதாவது வாங்க வேண்டுமென்று கடைக்குச் சென்றோம். இதோ பார்த்தீர்களா! இந்த மோதிரங்களை வாங்கினோம்" என்று கூறிக் கொண்டே காரிலிருந்து இறங்கித் தன் விரலைக் காட்டினாள் லீலா. அவள் கையில் சிறிய முத்து மோதிரம் இருந்தது. மூர்த்தியின் விரலிலும் ஒன்று பிரகாசித்தது.

"சரிதான் காந்தர்வ விவாகம் ஆகிவிட்டதா! சந்தோஷம். சம்பந்திகள் வருமுன்பு வீடு வந்து சேர்ந்தது அதைவிடப் பெரிய சந்தோஷம்" என்று கூறிய கேசவன் மற்ற ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்றார். மறுநாள் விவாகம் வெகு விமரிசையாக நடந்தது.

கேசவன் எவ்வளவோ கூறியும் மூர்த்தி மாமனார் வீட்டோடு வசிக்க மறுத்து விட்டான். அவன் ஒரு வேலையில் அமர்ந்து லீலாவுடன் தனிக் குடித்தனம் சென்றான்.

2

லீலாவும் மூர்த்தியும் இன்பமாகத்தான் வாழ்க்கையை ஆரம்பித்தனர். சிறிது காலம் ஒருவரில்லாமல் ஒருவர் வாழ்வதே கடினம் என்ற நிலையில் இருந்தது. ஆனால் வெகு சீக்கிரம் இந்த இணைபிரியா வாழ்க்கை மூர்த்தி வரையில் மிகவும் கசந்து விட்டது. நடு நடுவில் சிநேகிதர் வீடு சென்று அவர்களுடன் உல்லாசப் பொழுது போக்கிப் பழைய வாழ்க்கை நடத்த அவன் மிகவும் விரும்பினான். அதனால் அவளைத் தினமும் அவள் இஷ்டப்படி சினிமாவுக்கோ நாடகத்துக்கோ அழைத்துச் சென்று வர முடியவில்லை. மேலும் அவளுடைய செலவுக்கு அவன் வருமானம் போதவில்லை. இதனால் லீலாவுடன் அடிக்கடி தகராறு நேர்ந்தது.

லீலா அவனுக்குச் சளைக்கவில்லை. அவன் அழைத்துப் போகாத சினிமா நாடகங்களுக்கு அவள் தன் சிநேகிதிகளுடன் செல்ல ஆரம்பித்தாள். நாளடைவில் வீட்டுப் பொறுப்பில் அவள் கவனம் செலுத்தாமல் சதா சிநேகிதிகளுடன் ஊர் சுற்றுவதில் நேரம் கழிந்தது.

அவள் செல்வதை மூர்த்தி அவ்வளவாகப் பொருட் படுத்தியிருக்க மாட்டான். ஆனால் தான் ஆபீஸிலிருந்து திரும்பி வரும்போது அவள் வீட்டில் இல்லாமலிருப்பது ஒரு பக்கம் வாட்டியது; மறு பக்கம் இரவு வெகுநேரம் கழித்து அவள் வீடு திரும்புவதை அவன் வெறுத்தான். இதைப் பற்றிக் கேட்டால், "நீங்கள் ஆண்கள். எப்போது வேண்டுமானாலும் வீட்டுக்குத் திரும்பலாம், நாங்கள் பெண்கள் மட்டும் அம்மாதிரி வரக்கூடாதா! உங்கள் உரிமை எங்களுக்கும் உண்டு. எங்களை அடக்கி ஆள உங்களுக்கு ஒருவித உரிமையும் கிடையாது" என்று கூறுவாள். அதிகம் வளர்த்துவானேன்! ஆரம்பத்தில் தேனையும் கற்கண்டையும் விட இனித்த அவர்கள் வாழ்க்கை எட்டிக்காயைவிடக் கசப்பாக மாறியது. லீலா கோபத்தோடு தன் தகப்பனார் வீடு தேடி வந்து விட்டாள். மூர்த்தியும் தடுக்கவில்லை.

லீலா தகப்பனாரிடம் மூர்த்தி மீதுள்ள குற்றங்கள் ஒன்று பாக்கியில்லாமல் விவரித்தாள். கேசவனுக்கு மகளின் ஒவ்வொரு வார்த்தையும் வழக்கம்போல் நியாயமாகப்பட்டது. அத்தைக்குப் பாதி புரிந்தும் புரியாமலிருந்தது. ரங்கசாமிக்கு மட்டும் எதிர்க் கட்சி நியாயத்தையும் அறிய விருப்பம். ஆனால் தான் இவ்விஷயத்தில் பிரவேசித்துப் பலனில்லை என்று மௌனமாக இருந்து விட்டான்.

"லீலா! நீ சும்மா இரு. நான் அந்த மூர்த்தியை வரவழைத்து அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்" என்றார் கேசவன்.

"அப்பா அவருக்கு வைரம் பாய்ந்த நெஞ்சு. பிச்சை எடுத்தாலும் உங்களுக்கு மசியமாட்டார், தெரியுமா!" என்றாள் லீலா.



"பின் என்னதான் செய்வது! நீ அவனுடன் வாழ வேண்டாமா!"

"இனி அவனோடு என் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க விவாகரத்து செய்து கொள்ளப் போகிறேன். நல்ல வேளையாக நம் நாட்டிலும் விவாக ரத்துச் சட்டம் வந்திருக்கிறது" என்றாள் லீலா.

"விவாக ரத்தா!" என்று கேசவன் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆமாம். இதில் உங்களுக்கு என்ன ஆச்சரியம் அப்பா! நீங்களே விவாகரத்தை ஆதரித்து எவ்வளவு புத்தகங்கள் எழுதியிருக்கிறீர்கள்!"

"இதென்னடி கூத்து!" என்று அத்தை தோளை இடித்துக் கொண்டாள். கேசவன் தலையைத் தடவி விட்டுக் கொண்டே உட்கார்ந்து விட்டார். விவாக ரத்து விஷயமாக அருமையாகப் பிரசங்கம் புரிந்திருக்கிறார். ஆனால் தன் வீட்டிலேயே தன் அருமை மகளுக்கே விவாக ரத்துச் சட்டம் பிரயோசனப் படும் என்று அவர் நினைக்கவில்லை.

"அப்பா என்ன யோசனை! நாளைக்கே வக்கீலை வரச் சொல்லுங்கள்" என்றாள் லீலா. கேசவன் வேறு வழியில்லாமல் வழக்கப்படி 'சரி'யென்று தலையை யாட்டினார்.

வழக்கு சாதகமாக அமைந்தது. லீலா மூர்த்தியை சட்டப்படி ரத்து செய்து விட்டாள். அக்னிக்கு எதிரில் தம்பதிகளான இருவரும் இனி கணவன் மனைவி இல்லையென கோர்ட்டார் அறிவித்து விட்டனர்.

3

"அப்பாடி! என்ன களைப்பாக இருக்கிறது! இந்த மானேஜர் வேலையைக் கொடுத்து வாட்டி விடுகிறார்.. காலையில் ஆபீஸில் நுழைந்ததிலிருந்து வேலை உயிரை வாங்கி விட்டது" என்று கூறிக்கொண்டே வீட்டினுள்ளே நுழைந்தாள் லீலா.

"ஏம்மா இப்படி உடம்பைச் சிரமப்படுத்திக்கணும்! உனக்கு வேண்டிய பணம் காசு இருக்கு. வீணாக வேலைக்குப் போய் உடம்பை அலட்டிக் கொள்ளாதே" என்றார் கேசவன்.

ஆனால் லீலாவோ வீட்டில் பொழுதைக் கழிப்பது கஷ்டமாக இருக்கிறதென்று வேலை தேட ஆரம்பித்தாள். போனபோது படிப்பும் யோக்கியதையும் இருந்ததால் ஒரு பெரிய கம்பெனியில் உதவி மானேஜராக அமர்ந்தாள்.

வேலைக்கு அமர்ந்த புதிதில் லீலா உற்சாகமாகத்தான் இருந்தாள். ஆனால் நாளடைவில் வேலையில் லீலாவுக்கு ஒரு கசப்புத் தட்டியது. மானேஜர் பெண்கள் விஷயத்தில் மட்டுமல்ல, எல்லார் விஷயத்திலும் கண்டிப்பாகத்தான் இருந்தார்.

லீலாவுக்குப் பல தடவை மானேஜர் கோபத்துக்கு ஆளாகும்படி நேரிட்டது. இதனால் அவள் பல தடவைகள் மனம் நொந்ததுண்டு. ஆனால் இவ்வளவு பெரிய வேலை கிடைப்பது கஷ்டமாதலால் வேலையை விடவும் முடியவில்லை.

"லீலா! பேசாமல் வேலையை உதறிவிட்டு வீட்டிலேயே சுகமாக இரு. உழைக்கணும்னு உனக்கென்ன தலையெழுத்து! கண்ட பசங்கள் கோபத்துக்குப் பயந்து அடங்கி, நடக்து நாம் ஏன் கஷ்டப்படணும்!" என்றார் கேசவன் மறுபடியும்.

"ஆமாம் லீலா, மாமா சொல்றதைக் கேள். தாலி கட்டின புருஷன் மூர்த்தி நம்மிடம் கோபித்துக் கொண்டாலே, அவனுக்கு அடங்கி நடக்க நமக்குப் பிடிக்காமல் அவனை உதறித் தள்ளி விட்டோம். அவ்வளவு மானிகளான நாம் கண்ட பயல்களுக்கு அடங்கி அவர்கள் கோபத்தைச் சகிப்பதா! பேசாமல் ஒரு கால் கடுதாசியை நீட்டிவிட்டு வீட்டோடு இரு" என்றான் அருகிலிருந்த ரங்கசாமி.

"'ஷட் அப்' எனக்கு எல்லாம் தெரியும்" என்றாள் லீலா. ரங்கசாமியின் பேச்சிலுள்ள பரிகாசத்தை அவள் அறிய மாட்டாளா!

"அப்பா, நீங்கள் கவலைப்படாதீர்கள். இந்த மானேஜருக்கு மாற்றலாகி விட்டது. நாங்கள் ஆபீஸ் சிப்பந்திகள் சேர்ந்துதான் இந்த யோசனை செய்தோம். அடுத்த வாரம் வேறு மானேஜர் வந்து விடுவார்" என்றாள் லீலா. அன்று அத்துடன் அச் சம்பாஷணை முடிந்தது.

அன்று லீலாவின் ஆபீஸ் புது சோபையுடன் விளங்கியது. புது மானேஜர் வந்து விட்டார். லீலா அவரைக் கண்டு அறிமுகம் செய்து கொள்ளத் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு மானேஜர் அறைக்குச் சென்றாள். மானேஜர் ஸ்தானத்தில் மூர்த்தியைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள். தன் பழைய வேலையை ராஜிநாமா செய்துவிட்டு மூர்த்தி அக் கம்பெனியில் மானேஜர் பதவியில் அமர்ந்திருப்பதை அவள் அறிவாளா!

மூர்த்தி அவளைப் பார்த்தான். ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு "ஓஹோ!



நீங்கள்தான் உதவி மானேஜர் ஸ்தானத்தில் இருக்கும் மிஸ் லீலாவா!'' என்றான். அவன் கையிலிருந்த மூத்து மோதிரம் ஒளி வீசியது. விவாகத்தின் அடையாளமான அதை அவன் கழற்றவில்லை. லீலா தன் கையைப் பார்த்தாள். ஆம், அவளும் மறதியினால் அதைக் கழற்ற வில்லை. இப்போது வெறுப்புடன் அதைக் கழற்றித் தன் கைப் பையில் போட்டுக் கொண்டாள்.

ஒரு வாரம் கழிந்தது. மூர்த்தி சிப்பந்திகளிடம் இனிக்க இனிக்கப் பேசி அவர்கள் அன்புக்குப் பாத்திரமானான். அவர்களைப் பிழிந்து வேலை வாங்க வில்லை.

லீலாவிடமும் மூர்த்தி ஒரே விதமாகத்தான் நடந்து கொண்டான். என்றோ ஒரு நாள் தன்னுடன் வாழ்ந்து விட்டு மறைந்தவள் என்பதை அவன் வெளிக் காட்டிக் கொள்ள வில்லை. அவளிடமும் அன்பாகத்தான் நடந்து கொண்டான். லீலாவுக்கு மட்டும் சிறிது கஷ்டமாக இருந்தது.

ஆறு மாதங்கள் வெகு கஷ்டத்துடன் தள்ளினாள். அவள் மேலும் சகிக்க முடியாமல் அன்று ராஜிநாமா கடிதத்தைக் கொடுத்து விட்டு வந்து விட்டாள். வாழ்க்கையை விட்டு விலகினை அவன், வேலையை விட்டும் விலக்க வந்து விட்டானே என்று அன்று முழுவதும் அவள் மனம் உறுத்தினாலும் அவன் இனிப்பான பேச்சும் அவன் முகமும் மனத்தை விட்டு அகல வில்லை.

4

கணேஷ் நர்ஸிங் ஹோமில் ஒவ்வொரு நோயாளியாகப் பார்த்துக் கொண்டே வந்தாள் டாக்டர் லீலா. சுதந்திரமான தொழிலைத் தேடிய லீலா உதவி மானேஜர் பதவியை ராஜிநாமா செய்த அன்றே டாக்டருக்குச் சேர்ந்து படித்தாள். மிகவும் புத்திசாலியான அவள் ராஜதானிக்கே முதன்மையாகத் தேறினாள். பிராக்டிஸ் செய்ய ஆரம்பித்த சில நாட்களிலேயே அவளுடைய பெயரும் புகழும் பரவியது. டாக்டர் கணேஷும் லீலாவும் ஒரு புதிய நர்ஸிங் ஹோம் ஆரம்பித்தனர். அதன் மேற்பார்வை முழுவதும் லீலா தானே ஏற்று நடத்தினாள்.


லீலா இன்று எவ்வளவோ மாறி விட்டாள். நோயாளிகளுடன் பழகிப் பழகி அவள் பொறுமையின் பூஷணமாகி விட்டாள். நோயாளிகளுடன் இனிமையாகப் பேசி அவர்களுக்கு வலி தெரியாமல் சிகிச்சை செய்தாள். ஓழிந்த நேரங்களில் லீலா கணேஷின் வீட்டுக்குச் சென்று அவர் மனைவி சங்கரியுடன் பொழுதைக் கழிப்பாள்.

அன்றும் லீலா சங்கரியுடன் பேசிக் கொண்டிருந்தாள். இரண்டு மாதங்களுக்கு முன்பு வேலைக்கு வந்த நர்ஸ் பாலமும் தன் வேலை முடிந்து விட்டதால் அங்கு அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

"இப்போ பச்சாதாபப்பட்டு மனத்தை ஏன் அலட்டிக் கொள்கிறாய்! எல்லாவற்றையும் மறந்து சந்தோஷமாக இருக்கக் கற்றுக் கொள்'' என்றாள் சங்கரி பாலத்தினிடம்.

"எப்படியம்மா மறக்க முடியும்! அன்று க்ஷயரோகத்தில் அடிக்கும் கணவனை விவாகரத்து செய்து ஓடி வந்தேன். இன்று பலதரப்பட்ட நோயாளிகளுக்குச் சேவை செய்கிறேன். அன்று அவர் எவ்வளவோ சொன்னார். 'விட்டுத் தனியாக வேண்டுமானாலும் இரு. ஆனாலும் மனைவி என்ற ஸ்தானத்திலிருந்து சட்டப்படி அகன்று விடாதே. என்றாவது ஒரு நாள் என் வியாதி தீர்ந்தால் வாழ வழியிருக்கட்டும்' என்றார். ஆனால் என் மனம் பேதலித்தது. பொறுமைக் குணம் படைத்த பெண்கள் தான் நர்ஸ் வேலைக்குத் தகுதி என்று எல்லோரும் கூறுகிறார்கள். ஆனால் வெளி நோயாளிகளுக்குச் சேவை செய்யும் பெண்கள் கட்டின கணவனுக்குச் சேவை செய்ய விரும்ப வேண்டாமா! அசட்டுப் புத்தியால் விவாகரத்து செய்தேன். அதிசயமாகப் பிழைத்து அவர் ஐந்தாறு வருடங்கள் உயிருடன் இருந்து பிறகு வேறு காரணத்தால்தான் இறந்தார். என்னை இழந்த துக்கம் அவரை மிகவும் வாட்டியது என்று பலர் சொல்கிறார்கள். ஆனால் நானே அவருக்குத் தீங்கு செய்து விட்டேன். சுக துக்கத்தில் பங்கெடுப்பேன் என்று அக்னி சாட்சியாகச் சொல்லி விட்டு அவர் துக்கத்தில் பங்கெடுக்க விரும்ப வில்லை. இப்போது விதவை என்ற பட்டம் விவாகரத்தினால் கிடைக்காவிடினும் என் மனம் என்றுமே தவிப்பில் இருக்கிறது'' என்று பாலம் தன் சோகக் கதையைக் கூறினாள்.

அவளுடைய ஒவ்வொரு பேச்சும் லீலாவின் மனத்தில் பலவிதக் கிளர்ச்சிகளை உண்டு



பண்ணின. அவன் முகம் சோர்வடைந்தது. அவ்விடத்தில் அவளால் இருக்க முடியவில்லை.

ஒரு நோயாளியை உதறித் தள்ளிப் பல நோயாளிகளுக்குப் பாலம் உதவி செய்வது போல், ஒரு புருஷன் கோபத்துக்காக அவனை அவமானப்படுத்தி உதறி விட்டு லீலா உத்தியோகத்தில் எவ்வளவு பேர்களுடைய கோபத்துக்கு ஆளாகி விட்டிருந்தாள்! முன் பின் தெரியாதவர்களுக்குச் சேவை செய்யவோ அடங்கி நடக்கவோ நம் மனம் விரும்பும் போது உற்றாருக்குச் சேவை செய்து அடங்கி நடக்க ஏன் மனம் ஒப்புவதில்லை என்பது புரியாத புதிராக இருந்தது. 'பெரிய தப்பு செய்து விட்டாய்' என்று மனம் உறுத்த விசித்து அழ ஆரம்பித்து விட்டாள்.

"டாக்டர், லீலா! ஓடி வாருங்கள்; ஒரு விபத்து நடந்திருக்கிறது" என்று ஓடி வந்தாள் பாலம். லீலாவும் எழுந்து ஓடினள்.

இவள் சென்ற போது விபத்துக்குள்ளான ஆசாமிக்கு டாக்டர் கணேஷ் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தார். லீலா நோயாளியைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டாள். மூர்த்தி அல்லவோ அவன்.

"மிஸ் லீலா! இவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அடி பலமாகப் பட்டிருக்கிறது. நான் பிறகு வருகிறேன்" என்று கூறின கணேஷ் வெளியே சென்றார்.

லீலாவுக்குப் பழைய நினைவுகள் ஒன்றன் பின் ஒன்ருக வந்தன. அன்போடு அவளை அரவணைக்கும் அவன் கைகள் இன்று துவண்டு விழுந்து கிடந்தன. அன்புடன் அவளை மனம் குளிரப் பார்க்கும் கண்கள் இன்று மூடிக் கிடந்தன. நினைவு தப்பிக் கிடந்தான் மூர்த்தி.

லீலா இரவு முழுவதும் விக்கி விக்கி அழுதாள். அவன் பிழைக்க அவள் வேண்டாத தெய்வம் இல்லை. மறுநாள் தானே முன் வந்து ரத்த தானம் செய்தாள். இரவு பகல் பாராமல் உழைத்தாள். அவளது நிராத முயற்சியால் மூன்றும் நாள் சற்றுக் கண் திறந்தான் மூர்த்தி.


எதிரில் லீலாவைத் தவிர யாரும் இல்லை. கண்ணெதிரில் லீலாவின் முகத்தைப் பார்த்ததும் மூர்த்தி ஆச்சரிய மடைந்தான். "லீலா, நீயா!" என்ருன். அவன் கண்களில் கண்ணீர் முட்டியது.

லீலா அன்புடன் அவன் கண்ணீரைத் துடைத்தாள். பிறகு சிரித்த முகத்துடன், "உடம்பை அலட்டிக் கொள்ளக் கூடாது. இனி உங்களுக்கும் எனக்கும் சுக வாழ்க்கை தான். நான் இனி உங்களுடையவள்தான்" என்ருள்.

"லீலா, நிஜமாகவா! அப்படியாளுல் நான் பாக்கியசாலிதான்" என்றபடி அவன் அவள் கரங்களை அன்புடன் பற்றினன். அச்சமயம் உள்ளே எட்டிப் பார்த்த கேசவன் மிகக் குதூகலத்துடன் வந்த வழியே திரும்பிச் சென்ருர்.

* * * *

அன்று தம்பதிகளாக அக்னியைச் சாட்சியாகக் கொண்டனர், பிறகு பிரிந்து போக கோர்ட்டார் சாட்சியாக அமைந்தனர். ஆனால் இன்றே மறுபடி சேர்ந்த வாழ்க்கைக்கு அவர்கள் தங்கள் மனசாட்சியையும் நம்பிக்கையையும் துணையாகக் கொண்டனர். லீலா நர்ஸிங் ஹோமிலேயே இருந்து கொண்டு மூர்த்தியுடன் இனிது வாழ்கிருள். விவாக அடையாள மோதிரம் மறுபடி அவள் கையை அலங்கரித்தது.



56. கருவூர்

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் ஓர் அங்கமாய்த் திகழ்வது கொங்கு நாடு. மலைவளமும் நிலவளமும் வாய்ந்த அந்நாட்டிலே கொல்லி மலை உண்டு: வெள்ளிமலை உண்டு; ஆனைமலை உண்டு; நீலமலை உண்டு; பாலை மலை உண்டு; பழனி மலை உண்டு. இதனை அறிந்தே,

"வெள்ளிமலைக் குறவன்மகன்
பழனிமலைக் குறவனெங்கள்
வீட்டிற் கொண்ட
வள்ளிதனக்கே குறவர்
மலையாட்சி சீதனமாய்
வழங்கி னரால்"

என்று பாடினன் ஒரு குறவஞ்சி.

இத்தகைய பெருமை வாய்ந்த கொங்கு நாட்டிலே காவேரியாறு பரந்து பாய்கின்றது. அவ் ஆற்றின் பெருக்கத்தையும் மேட்டூர்த் தேக்கத்தையும் அந் நாட்டிலே காண்பது ஓர் ஆனந்தம். கவிஞர் பாடும் புகழுடைய காவிரி யாற்றிலே சேரும் பேறு பெற்ற கொங்கு நாட்டுச் சிற்றாற்றங் கரையில் கருவூரும் பேரூரும் காட்சி அளிக்கின்றன. அமராவதி யாற்றின் கரையில் அமைந்துள்ளது கருவூர்; நொய்யல் என்னும் காஞ்சி யாற்றின் கரையில் நின்று நிலவுகின்றது பேரூர். "கருவூரிலே பிறந்தேன்; பேரூரை நோக்கிப் போகின்றேன்" என்று பொருள்படப் பாடினார் ஒரு பெரியார். "ஆதியிலே எங்கள் ஊர் கருவூர் ஆகும்; அந்தத்தில் போய் அடைவோம் பேரூர் தன்னில்" என்பது அவர் திருவாக்கு. அவ்வாக்கிலே ஒரு சிறந்த உண்மை உண்டு. கருவிலே உருவாகிப் பிறந்தோர் அனைவரும் கருவூரைச் சேர்ந்தவரே யாவர்; பிறவித் துயர் ஒழித்துப் பேரின்ப நலந் தரும் இடமே எல்லோரும் சென்றடையும் பேரூர் ஆகும்.

பழங் காலத்தில் கருவூர் ஒரு விரிநகராக விளங்கிற்று. "உறையூரிற் பெரிது கருவூர்" என்று அக் கடிநகரைப் பாடினார் திருமங்கை மன்னன். அந்நகரம் பழங் காலத்தில் சேர மன்னர்க்கு உரியதாய் இருந்தது. அதனாலேயே,

"கடும் பகட்டு யானை
நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர்"

[பகட்டு யானை - ஆண் யானை; கோதை - சேரன்; வியனகர் - சிறந்த நகர்]

என்ற அகநானூற்றுப் பாடல் எழுந்தது. அந் நாளில் வஞ்சி என்னும் பெயரும் கருவூர்க்கு உண்டு. சேர மன்னன் அந் நகரில் எழுந்தருளிய சிறந்த காட்சியை,

"காமன்காண் என்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை வருவானை—யாமும்
இருகுடங்கை யானைநீர் கூப்பித் தொழக்
கண்டு
ஒருகுடங்கை யாயின கண்"

[தாமம் - மாலை; குடங்கை - உள்ளங்கை]

என்று எழுதிக் காட்டினார் ஒரு பழம்புலவர்.

சோழ மன்னர்க்கு உரிய பெரு நகரங்களுள் ஒன்று கருவூர் என்று அருளிப் போந்தார் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார். புகழ்ச் சோழன் என்னும் மன்னன் உறையூரில் அரசு வீற்றிருந்து ஆண்ட போது ஒரு நாள் குடபுல மன்னரிடம் கப்பம் பெறுவதற்காகக் கொங்கு நாட்டுக் கருவூருக்கு எழுந்தருளினான். அவ்வூரை,

"மன்னிய அநபாயன் சீர்
மரபின்மா நகரம் ஆகும்
தொன்னெடுங் கருவூர் என்னும்
சுடர்மணி வீதி மூதூர்"

[அநபாயன்-ஒரு சோழன்; மரபு-குலம்]

என்று பாடினார் சேக்கிழார் பெருமான். அந் நகரின் மதில்களிலே மஞ்சு தவழும்; சோலைகளிலே நறுமணம் கமழும்; ஆற்றிலே யானைகள் நீராடும்; அரங்கிலே நடன மாதர் குழலாடும். இத்தகைய வளநகரில் அமைந்த மாளிகையில் சில நாள் தங்கியிருந்தான் புகழ்ச் சோழன்.

அந் நகரில் 'ஆனிலை' என்னும் பெயருடைய பழமையான திருக்கோயில் ஒன்று உண்டு. அங்குள்ள ஈசனார்க்குப் பூமாலை புனைந்து சாத்தும் பணியை முறையாகச் செய்து வந்தார் ஒரு திருத்தொண்டர். அவர் நாள் தோறும் அதிகாலையில் எழுவார்; ஆற்றிலே முழுகுவார்; பூக்கூடை கொண்டு பூந்தோட்டத்திற் புகுவார்; பழுதற்ற மலர்களைப் பறிப்பார்; கூடையை நிறைப்பார்; திருக்கோயிலிற் போந்து மாலை தொடுப்பார்; அதை ஈசன் திருமேனியில் அணிந்து திளைப்பார்.

இவ்வாறு திகழ்ந்து வருகையில் ஒரு நாள் கருமலை போன்ற யானை யொன்று மதங் கொண்டு வீதியில் அவரைப் பின்தொடர்ந்தது; பூக்கூடையைப் பற்றி இழுத்தது; மலர்களை மண்ணிலே சிதறி விட்டுச் சென்றது; முதியவராகிய திருத்தொண்டர் பதறி விழுந்தார்; பதை பதைத்தார். கண்ணீர் வடித்தார்; தலையில் அடித்தார்; சிவனே சிவனே என்று ஓலமிட்டுத் துடித்தார்.

"களியானையின் ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா"

என்று அழுதார்.

"ஆறும் மதியும் அணியும் சடைமேல்
ஏறும் மலரைக் கரிசிந் துவதோ"

(ஆறு-கங்கை; மதி-சந்திரன்; கரி-யானை)

என்று கதறினார். "நின் திருமுடியில் ஏறுதற்குரிய நறுமலரைத் தெருவிலே சிந்தி விட்டதே செருக்குற்ற வேழம்!" என்று மனம் உருகினார்.

அந்த வேளையில் அவ்வழியாக வந்தார் எறிபத்தர் என்னும் பெரியார். அவர் ஒரு வன் தொண்டர்; அடியார்க்கு அடியவர்; திருத்தொண்டர்க்குத் தீங்கிழைக்கும் தீயோரை மழுப்படையால் அறுப்பவர். அவர் தெருவிலே சிதறிக் கிடந்த மலர்களையும் சிவனடியார் கதறிச் சொரிந்த கண்ணீரையும் கண்டார்; சீற்றம் தலைக் கொண்டார்; மதங் கொண்ட யானையைப் பின் தொடர்ந்தார்; மழுப்படையால் அதன் துதிக்கையை அறுத்தார். கையிழந்த வேழம் கடல் போல் இரைந்து தரையில் விழுந்தது. அது கண்டு சீறி எழுந்த பாகர் ஐவரையும் எறிபத்தர் படைக்கலத்தால் கொன்றுமுடித்தார்; கொலைக்களத்தில் அஞ்சாது நின்றார்.

சோழ மன்னனுக்குரிய பட்டத்து யானையையும் பாகரையும் எறிபத்தர் கொன்றார் என்ற செய்தி கருவூரெங்கும் பரவியது; அரண்மனைக் காவலாளர் அச் செய்தியைப் புகழ்ச் சோழனிடம் போந்து அறிவித்தார்கள்; "பட்டவர்த்தனம் வெட்டி வீழ்த்தப்பட்டது; பாகரும் கொல்லப் பட்டார்" என்று கேள்வியுற்ற சோழன் சீற்றத்தால் கண் சிவந்தான்; "அது மாற்றார் செய்கை" என்றெண்ணி மறப் படையோடு எழுந்தான். குதிரை மீது ஏறிக் கொலைக் களம் போந்தான். குருதி வெள்ளத்திற் கிடந்த அருமை வேழத்தைக் கண்டு மனம் உருகினான்; பாகர் கிடந்த நிலை கண்டு துயருற்றான். "கொலை புரிந்த கொடியவர் யார்?" என்று கடுகடுத்து வினவினான். அப்போது தூய வெண்ணீறு துதைந்த மேனியராய் அங்கு நின்ற எறிபத்தர் முன்வந்து "மன்னவ! இந்த யானை சிவனடியார் ஒருவர்க்குச் சிறுமை செய்தது. ஆதலால் நானே இதனைக் கொன்றேன்" என்றார்.


"மன்னவன் தன்னை நோக்கி
வானவர் ஈசர் நேசர்
சென்னி! இத் துங்க வேழம்
சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணர்ச் சாத்தக்
கொடுவரும் பள்ளித் தாமம்
தன்னைமுன் பறித்துச் சிந்தத்
தரைப்படத் துணித்து வீழ்த்தேன்"

[சென்னி-சோழனே; வேழம்-யானை; சிவகாமியாண்டார்-பூப்பணிவிடை செய்த பெரியாரின் பெயர்; பன்னகாபரணர்-பாம்பணிந்த ஈசன்]

என்று அவர் பேசிய நேர்மையான வாசகத்தைக் கேட்டு நெஞ்சம் திடுக்கிட்டான் அரசன். "பட்டத்து யானை செய்த குற்றத்திற்கு உரியவன் யானே! என்னையும் உமது திருக் கரத்தால் முடித்திடுக" என்று தலை வணங்கி நின்றான் மன்னவன். காவலன் நிலை கண்ட கருவூர் மாந்தரெல்லாம் கண்ணீர் விட்டு அழுதார்கள். அந் நிலையில் ஈசன் அருளால் இறந்த யானை எழுந்தது; பாகரும் உயிர்பெற்றனர் "தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே" என்னும் உண்மைக்கு ஒரு சான்று கண்டது கருவூர் நகரம்.



PUBLIC LIFE...
– the TIME FACTOR
பொது வேலையில் ஈடுபடுபவர்களுக்கு நேரம் மிக முக்கியமானது. வேலைகளை சுலபமாகச் செய்ய ஒரு ஒழுங்கான திட்டத்தை மிகக் கவனமாக வகுத்தல் வேண்டும். திட்டப்படி வேலை செய்ய ஒரு நம்பகமான மணிகாட்டி மிக்க அவசியம். தொழில்களில் ஈடுபடும் மனிதர்கள் ஒரு "வெஸ்ட் - எண்ட்" கடிகாரத்தின் மதிப்பை நன்குஅறிவர். அவர்களின் அன்றாட அலுவல்களை நேரப்படி செய்து முடிக்க அதன் நம்பகத் தன்மையே நிச்சயப்படுத்துகிறது.
12
9
3
The NEW KEEPSAKE
Everbright Steel ... Rs. 140
Rolled Gold ... Rs. 165
WEST END WATCH Co.
BOMBAY
CALCUTTA






காந்தி மண்டபத் திறப்பு விழா

சென்னை ராஜபவன் தோட்டத்தில் நிர்மாணித்துள்ள காந்தி மண்டபத்தின் திறப்பு விழா ஜனவரி 27உ கோலாகலமாக நடைபெற்றது.

விழாவுக்கு கவர்னர், மந்திரிகள், நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், ஆயிரக் கணக்கான பொது ஜனங்கள் விஜயம் செய்து சிறப்பித்திருந்தனர். மங்களகரமான நாகஸ்வர இசையுடன் விழா ஆரம்பமாகியது. காந்தி மகானுக்குப் பிடித்தமான ''ரகுபதி ராகவ ராஜா ராம்'' என்ற பாடலை ஸ்ரீமதி எம். எஸ். அவர்களும் குமாரி ராதாவும் பாடினார்கள். அவர்களுடன்



சேர்ந்து பொது மக்களும் பாடியபோது காந்தி மகானே மேடைமீது தோன்றிப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தியது போலிருந்தது. காந்தி மண்டபக் கமிட்டித் தலைவர் திரு ஜே. ஷெண்முகம் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்திய பின் திரு எஸ். ராமசாமி நாயுடு வாழ்த்துச் செய்திகளை வாசித்தார். டாக்டர் பி. வி. செரியன் காந்தி மண்டபக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார். கவர்னர் கனம் ஸ்ரீபிரகாசா காந்தி மண்டபத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டதும் தலைவர் ராஜாஜி மக்களின் கரகோஷ ஆரவாரத்துக்கிடையே மண்டபத்தைத் திறந்து வைத்தார். 1. காந்தி மணிமண்டபத்தின் தோற்றம். 2. ஸ்ரீபிரகாசா ராஜாஜியை வரவேற்கிறார். 3. திருவாவடுதுறை திரு டி. என். ராஜரத்தினம் பிள்ளையின் நாகஸ்வரக் கச்சேரி. 4. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களும், குமாரி ராதாவும் பஜனைப் பாடல்களைப் பாடுகிறார்கள். 5. கர்நாடக சங்கீதக் கல்லூரி மாணவிகளின் பிரார்த்தனை கீதம். 6. ஷெண்முகம் பிள்ளையின் வரவேற்புரை. 7. கவர்னரின் சொற்பொழிவு. 8. தலைவர் ராஜாஜி மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசுகிறார். 9. விழாவில் மக்கள் கூட்டம். 10. ஸ்தபதி ஸ்ரீ வைத்தியநாத ஆச்சாரிக்கு ராஜாஜி தங்கத் தோடா வழங்குகிறார்.





பிப்ரவரி 3உ முதல்
முதன் முறையாக
சென்னை
நியூ குளோப்
(இரண்டு வாரங்கள் மட்டும்)
ஸ்டார் - ராக்ஸி
மற்றும் தென்னாடெங்கும்
10-2-56 முதல் சென்னை
கிரௌனிலும்
விக்ரம் புரொடக்ஷன்ஸ்
தெனாலிராமன்
தமிழ்
வசனம், பாடல்கள்......
டைரக்ஷன்.........
கவிஞர் கண்ணதாசன் • B.S.ரெங்கா
சங்கீதம் - விஸ்வநாதன் - ராமமூர்த்தி • ஆர்ட் - கங்கா & வாலி
பூரண உரிமையாளர்கள்
கோல்டன் பிலிம்ஸ் லிமிடெட்
விஜயராகவாச்சாரி ரோடு, தி.நகர், மதராஸ்-17.

திருவாரூர் சங்கீத மும்மூர்த்திகள் நினைவு மண்டபத் திருப்பணி

சங்கீத வித்வான்களின் வேண்டுகோள்

நாதமே பரப்பிரும்மம் என்று அல்லும் பகலும் வழிபட்டு நாதவடிவமான கடவுளைக் கண்டு மோட்ச இன்பத்தை அடைந்த மகான்கள் எத்தனை எத்தனையோ பேர்.

அவர்களில் கர்னாடக சங்கீதத்துக்குப் புத்துயிரும், புது உணர்ச்சியும் அளித்தவர்கள் சங்கீத மும்மூர்த்திகள் என்று பக்தியோடு கொண்டாடப்படும் ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாம சாஸ்திரிகள் ஆகிய மகான்கள்.

இவர்கள் மூவரும் ஒரே காலத்தில் ஒரே ஊரில் தோன்றி நாதமயமான ஆண்டவனை வழிபட்டு வந்தார்கள். தங்கள் இஷ்ட தெய்வங்களின் மீதும், நாடெங்கிலும் உள்ள ஸ்தலங்களில் கோயில் கொண்டிருக்கும் மூர்த்திகளின் மீதும், தீஞ்சுவைக் கீர்த்தனைகள் இயற்றித் திருவருள் பெற்றார்கள். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையில் அனேக ராகங்களில் அற்புதமான தாளக் கட்டுடன் கூடிய அருமையான கீர்த்தனைகள் இயற்றி, நம் கர்னாடக சங்கீதம் சிரஞ்சீவியாக விளங்கும் வண்ணம் மகத்தான தொண்டு செய்திருக்கிறார்கள். இவர்களது கீர்த்தனைகளில் பக்தி ரஸம் ததும்பும்; சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்து கிடக்கும். ஒரே ராகத்தில் பல பல கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்கள்; ஆனாலும் அவைகள் ஒவ்வொன்றும் தனித்தனி எழிலுடன் விதம் விதமான வர்ண மெட்டுகளுடன் ஒளி வீசிப் பிரகாசிப்பதைக் காண்கிறோம்.

கர்னாடக சங்கீதம் என்னும் தெய்வ விருட்சம் சங்கீத மும்மூர்த்திகளின் கான வெள்ளத்தால் தளிர்த்து, தழைத்து, பூத்துக் குலுங்கி, நாடெங்கும் மணம் வீசித் திகழ்கிறது.

'கமலையில் பிறந்தார்க்கு முக்தி' என்ற ஆன்றோர் வாக்குக்கு இணங்க மும்மூர்த்திகளும் ஸ்ரீ புரம், ஸ்ரீ நகரம், கமலா நகரம் என்று பல நாமங்களால் வழங்கப்படும் திருவாரூரில் ஒரே காலத்தில் தோன்றினார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் தெய்வத் தமிழ்ப் பாடலைக் கேட்டுச் சிந்தை மகிழ்ந்த திருவாரூர்ப் பெருமான், மீண்டும் இசை மயமான தீஞ்சுவைப் பாடல்களைக் கேட்பதற்காகவே மும்மூர்த்திகளையும் திருவாரூரில் தோன்றும்படி செய்தாரோ என்று எண்ணி வியக்கத் தோன்றுகிறது.

கர்னாடக சங்கீதத்தின் மூலம் நம் நாட்டின் பண்பாட்டையே உயர்த்தி விட்ட சங்கீத மும்மூர்த்திகளுக்குத் திருவாரூரில் அம் மும்மூர்த்திகள் பிறந்த மனைகளிலேயே ஞாபகார்த்த மணி மண்டபம் எழுப்பவும், அவர்களது பிறந்த நாட்களை, அவர்கள் பிறந்த ஊரிலேயே சிறப்பாகக் கொண்டாடவும் "சங்கீத மும்மூர்த்தி ஞாபகச் சின்னக் கமிட்டி" ஒன்று சென்னை நகரில் ஏற்பட்டு வேலை செய்து வருவது நமது பாக்கியமாகும்.

இந்த ஞாபகார்த்தக் கமிட்டியில் வடபாதி மங்கலம் ஸ்ரீ தியாகராஜ முதலியார், சிம்ஸன் கம்பெனி அதிபர் ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணன், டி. ஐ. சைக்கிள்ஸ் டைரக்டர் ஸ்ரீ ஏ. எம். எம். அருணாசலம், சென்னை சர்வகலாசாலைப் பேராசிரியர் டாக்டர் ராகவன், 'கல்கி' ஸ்தாபனத்தின் அதிபர் ஸ்ரீ சதாசிவம் ஆகியவர்கள் அங்கம் வகித்துத் தொண்டாற்ற முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய காரியம்.

கர்னாடக சங்கீதத்தையும், இந்தக் கலையைப் பயின்று பணிபுரிந்து வரும் சங்கீத வித்வான்களாகிய எங்களையும் அன்புடன் ஆதரித்து வந்துள்ள ரசிகப் பொது மக்கள், நமது வழிபாட்டுக்குரிய சங்கீத மும்மூர்த்திகளுக்குத் தங்களுடைய பக்திக் காணிக்கையைச் செலுத்த முன் வருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பாரத நாடெங்கும் உள்ள கர்னாடக சங்கீத அபிமானிகள் இந்த உத்தம கைங்கரியத்தில் உற்சாகமாகக் கலந்து கொண்டு, சங்கீத மும்மூர்த்திகள் ஞாபகச் சின்ன நிதிக்குத் தாராளமாய்ப் பொருளுதவி செய்து இத் திருப்பணியை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

நன்கொடை அனுப்புவோர் இந்தக் கமிட்டியின் பொக்கிஷதாரரான ஸ்ரீ சதாசிவம், 'கல்கி' காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம் :—

வீணை சாம்பசிவ ஐயர், வாசுதேவாச்சார், அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், பல்லடம் சஞ்சீவி ராவ், மூசிரி சுப்பிரமணிய ஐயர், செம்பை வைத்தியநாத பாகவதர், முடிகொண்டான் வெங்கடராம ஐயர், மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், செம்மங்குடி சீனிவாச ஐயர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, ஆலத்தூர் வெங்கடேச ஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம், மதுரை மணி ஐயர், ஆலத்தூர் சகோதரர்கள், எம். எம். தண்டபாணி தேசிகர், டி. என். சுவாமிநாத பிள்ளை, ராஜமாணிக்கம் பிள்ளை, பாப்பா வெங்கடராமய்யா, சௌடய்யா, மருங்காபுரி கோபாலகிருஷ்ண ஐயர், பரூர் சுந்தரம்ஐயர், மாயூரம் கோவிந்தராஜ பிள்ளை, பாலக்காடு மணி ஐயர், பழனி சுப்பிரமணிய பிள்ளை, உமையாள்புரம் கோதண்டராம ஐயர், திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, திருவீழிமிழலை சகோதரர்கள், வீருசாமி பிள்ளை, அண்ணாசாமி பாகவதர், பாபநாசம் சிவன், ருக்மிணி தேவி, ஜெயம்மாள், டி. கே. பட்டம்மாள், எம். எஸ். சுப்புலக்ஷ்மி.



Finest
Musk
Soap
MADE IN INDIA BY
Dralle
Dralle
TALC
Powder
" டிராலி மஸ்க் ஸோப், டிராலி டால்க் பவுடர் இவை ஈடற்ற அழகு சாதனங்கள் என நான் அனுபவ பூர்வமாகக் கூறுகிறேன். இவை சருமத்திற்கு ஒரு நவ சௌந்தரியத்தையும் பாதுகாப்பையும் அளிப்பவை".
— "சௌகார்" நக்ஷத்திரம் ஸ்ரீமதி எஸ். ஜானகி
S. Janaki.

குடியரசுத் திருநாள்



ஜனவரி 26வ. பாரதநாடெங்கும் மக்கள் குடியரசுத் திருநாளைக் குதூகலமாகக் கொண்டாடினார்கள். கொடியேற்றினார்கள். ''பாரத நாடு வாழ்க! வாழ்க!'' என்று வாழ்த்தி வணங்கினார்கள்.

பாரதத்தின் தலைநகரான புது தில்லியில் ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத் முன்னிலையில் படைவீரர்கள் அணிவகுத்துச் செல்வதை மேலேயுள்ள படத்தில் காணலாம். கீழே: சென்னையில் கவர்னர் கனம் ஸ்ரீ பிரகாசா கொடி வணக்கம் செய்கிறார். குடியரசுத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற விதம் விதமான ஊர்வலங்களை கவர்னரும் முதல் மந்திரி காமராஜரும் பார்த்து மகிழ்கின்றனர்.





வட இந்திய யாத்திரை 28

தீர்க்கதரிசியாகிய காந்தி மகான் அந்த காலிலேயே இந்தியா வளருவதற்குக் கிராமங்கள் வளரவேண்டும் என்று வற்புறுத்திவந்தார்.

கிராமங்கள் வளம்பெற வேண்டும், கிராம வாழ்வு சிறந்திட வேண்டும், கிராமக் கைத் தொழில்கள் செழித்திட வேண்டும், கிராம மக்கள் சந்தோஷமாக வாழ்வதற்கு வகை செய்ய வேண்டும் என்று இடைவிடாமல் போதித்து வந்தார்.

மற்றத் தலைவர்கள் மனத்தில் இது நன்றாகப் பதிய வேண்டும் என்பதற்காகக் காங்கிரஸ் மகாசபையைக் கிராமங்களில் நடத்த வேண்டும் என்று வற்புறுத்தினர். அவ்வாறே பல காங்கிரஸ் மகா சபைகள் கிராமங்களில் நடைபெற்று வந்தன.

தாமும் சிவக்கிராமம் என்னும் மிகச் சிறிய கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே சிறு குடில்கள் கட்டிக்கொண்டு வாழ்ந்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்று, காந்திமகான் அமரரான பிறகு அவருடைய போதனைகள் பலவற்றை மறந்தாலும் பஞ்சாப் சர்க்காரும், பஞ்சாப் தலைவர்களும் காந்திமகான் "கிராமங்கள் வளர வேண்டும்" என்று வற்புறுத்தி வந்ததை மட்டும் மறக்கவில்லை. இதைப் பஞ்சாபின் கிராமங்களில் பஞ்சாப் கம்யூனிட்டி பிராஜெக்ட் அதாவது பஞ்சாப் சமூக நல ஸ்தாபனத்தார் செய்து வரும் தொண்டைப் பார்த்த போது நன்றாக உணர முடிந்தது.

பாரத நாட்டின் ஜனத்தொகையில் நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் வசித்து வருவது கிராமங்களில் தான். இந்த உண்மையைப் பரிபூரணமாக உணர்ந்து கிராமங்களை வளப்படுத்துவதில் பஞ்சாப் சர்க்காரும், பஞ்சாப் மக்களும், அவர்கள் தலைவர்களும் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்.


பஞ்சாபின் கிராமங்களைத் தூரத்திலிருந்து பார்த்தபோது நாளுக்கு நாள் மெலிந்து நலிந்து வரும் தமிழ் நாட்டுக் கிராமங்களுக்கு எந்த விதத்திலும் சளைத்ததில்லை என்று தோன்றும். திருமகளின் பெருமை வாய்ந்த மூத்த தமக்கையார் சம்பிரமமாகக் கொலுவீற்றிருக்கிறார் என்று தான் சொல்லும்படி இருக்கிறது.

ஆனால் ஒரு சின்ன வித்தியாசம். தமிழ் நாட்டில் நமது தலைவர்கள் கிராமங்களையும், கிராம மக்களையும் அவ்வளவாகக் கவனிப்பதில்லை என்பதை ஆயிரக்கணக்கான தமிழ் நாட்டுக் கிராமங்கள் இன்றும் சாட்சி கூறிக் கொண்டிருக்கின்றன. எத்தனை எத்தனையோ கிராமங்களுக்குச் சாலைகள் கிடையா. கிராமங்களில் சுகாதார வசதிகளே கிடையா. பள்ளிக்கூடம் ஆஸ்பத்திரி என்று பெயருக்குக் கூடக் கிடையாது. சிதைந்து போன கூரை வீடுகளும் அவற்றின் சோகமும் சூரிய வெளிச்சத்தில் சோபிதமாகத் தெரிகின்றன. தமிழ் நாட்டுக் கிராமங்களில் காணும் தரித்திரத்தின் சின்னங்கள் மனித இதயம் படைத்தவர்களின் கண்களில் நீரைப் பெருக்கி விடும்.

ஏறக்குறையப் பஞ்சாப் கிராமங்களும் இவ்வாறு இருந்தவைகள்தான். இன்றையதினம் நிலைமை அடியோடு மாற்றப்பட்டு வருகிறது. தரித்திரத்தைத் தடிகொண்டு அடித்து ஓட்டுகிறார்கள். திருமகளின் தமக்கையார் கிராமங்களில் வாசம் செய்ய முடியாமல் ஓடுகிறாள். அப்படிப்பட்ட பஞ்சாப் கிராமங்களுக்கு இப்போது செல்வோம்.

இதுதான் படீப் என்ற கிராமம். வாருங்கள், கிராமத்துக்குள் நடந்து செல்வோம். ஒரு கணம் 'கிராமத்துச் சாலைகளில் நடக்கிறோமா! இல்லை, ஏதாவது பெரிய மாளிகை வராந்தாவில் நடக்கிறோமா!' என்று பிரமை ஏற்படுகிறது. கிராமத்துச் சாலைகளில் செங்கற்களைக் கொண்டு தள வரிசையே போடப்பட்டிருக்கிறது. செங்கற்களை உயர வாட்டத்தில்





பஞ்சாப் கிராமங்கள்

நெருக்கி வைத்து உறுதி வாய்ந்த சாலைகள் அமைத்திருக்கிறார்கள்.

"கிராமத்துச் சாலைகள் எல்லாமே இப்படி இருக்கின்றனவா? இல்லை, இந்தச் சாலைமட்டும் இவ்வாறு இருக்கிறதா?"

"சந்தேகமே வேண்டாம். கிராமங்களில் சுமார் தொண்ணூறு ஆயிரம் சதுர அடி செங்கல் சாலைகள் போட்டிருக்கிறார்கள். எல்லாச் சாலைகளும் இதேபோல்தான் இருக்கும்."

"சாலையின் இரு புறமும் தண்ணீர் ஓடுவதற்கு வசதியாக ஸிமெண்ட் கால்வாய் கட்டியிருக்கிறார்களே! இதுவும் எல்லாத் தெருக்களிலும் இருக்கிறதோ?"

"இரண்டரை லட்சம் அடி நீளம் சாலைகளின் ஓரத்தில் சாக்கடை கட்டியிருக்கிறோம்."

"இதற்கு ஏராளமாக ரூபாய் செலவாகியிருக்குமே!"


"செலவு அப்படி ஒன்றும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு அதிகமில்லை."

"என்ன, உண்மையாகவா!"


"ஆமாம், கிராமத்து நிலங்களில் களிமண் இருக்கிறது. செங்கல் அறுப்பவர்கள் தங்கள் உழைப்பைக் கிராம வளத்துக்குத் தானமாகத் தந்து செங்கல் அறுத்துக் கொடுத்தார்கள். செங்கல் சூளைக்கு வேண்டிய எரிமரங்களைக் கிராம மக்கள் தங்கள் தங்கள் தோட்டத்திலிருந்து தானமாகக் கொடுத்தார்கள். தெருக்களை ஒழுங்கு படுத்திச் செங்கற்களைக் கொண்டு சாலைகளைச் செப்பனிடும் வேலையையும் கிராம மக்களே மனமுவந்து செய்தார்கள். சமூக நல ஸ்தாபனத்தார் தெருக்கள் அமைப்பதற்கு வேண்டிய யோசனைகள் கூறும் இன்ஜினியர்களை மட்டும் கொடுத்து உதவினார்கள். அவ்வளவுதான்."

"என்ன ஆச்சரியம்! இதற்கு மட்டும் பணம் கொடுத்து கண்டிராக்ட் மூலம் சாலை போட்டிருந்தால் எவ்வளவு ஆகியிருக்கும்!"

"பல லட்சம் ரூபாய்கள் செலவாகியிருக்கும். சாலைகளும் இது போல் உறுதியாக இருக்காது. மக்களும் இவ்வளவு சந்தோஷமாக இருக்க மாட்டார்கள். தாங்களே கஷ்டப்



பகீரதன்



பட்டுப் போட்ட சாலைகள் ஆனதால் அதை எவ்வளவு ஜாக்கிரதையாக அவர்கள் பராமரிக்கிறார்கள் தெரியுமா !''

இதைக் கேட்டதும் எனக்குத் தலையைச் சுற்ற ஆரம்பித்து விட்டது. அடாடா ! சர்க்கார் அதிகாரிகளும், பொதுஜனத் தலைவர்களும் உண்மையாகவே கிராம மக்களுக்குத் தொண்டாற்ற முனைந்து விட்டார்களானால் கிராம மக்களைக் கொண்டே கிராமங்களை எவ்வளவு உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர முடிகிறது என்னும் உண்மையைப் பார்த்துப் பிரமித்துப் போனேன்.

அந்தக் கிராமத்தில் உள்ள வயது முதிர்ந்த ஒரு பெரியவரைப் பார்த்து, ''உங்கள் நாளில் கிராமங்கள் எப்படி இருந்தன !'' என்றேன்.

அவர் ஒரு தரம் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்து விட்டுக் கூறினார். ''அந்த நாளில் நீங்கள் இந்தக் கிராமத்தில் நுழைந்து விட முடியுமா ! எல்லார் வீட்டுச் சாக்கடையும் வீதியில் தாராளமாக ஓடும். குண்டும் குழியும் சேறுமாக இருக்கும். வழியெல்லாம் எருமைகள் படுத்துக் கிடக்கும். கொசுக்கள் தாராளமாகக் குடியிருக்கும். கொசுக்கடியைத் தாங்கிக் கொண்டு, எருமை மாட்டைத் தாண்டிக் கொண்டுதான் சாலைகளில் வரவேண்டும். இப்பொழுது அதை நினைத்தாலே வயிற்றைக் குமட்டுகிறது'' என்றார்.

''சுகாதார வசதிகளுக்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா !''

''இனிமேல் தான் செய்யப் போகிறார்கள்.''

சுகாதார வசதி மட்டும் சரியாகச் செய்யவில்லை. தமிழ் நாட்டுக் கிராமங்களைப் போலவே வெளியிடங்களில் அசுத்தம் செய்திருக்கிறார்கள். இதனால் கெட்ட நாற்றம் உண்டாகிக் காற்றின் புனிதம் கெட்டு விடுகிறது. ''விரைவில் இந்தக் குறையையும் அடியோடு நீக்கி விடுவோம்'' என்றார் சமூக நல அதிகாரி.

பமப் கிராமத்திலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள தர்மகோட்லா என்ற கிராமத்துக்குச் செல்வோம். இந்தக் கிராமத்துச் சாலைகளும் செங்கற்களைக் கொண்டே உறுதியாகப் போடப் பட்டிருக்கின்றன. சென்னை நகரின் சாலைகளைவிடச் சுத்தமாகத் தூசி துப்பட்டை இல்லாமல் இருப்பதை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும்.

''கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதிக்கு என்ன செய்திருக்கிறீர்கள் !''

''முக்கியமாகக் கவனம் செலுத்துவது குடிதண்ணீர் வசதியைத்தான். இங்குள்ள கிராமங்களில் குடிதண்ணீர் வசதிக்காகச் சுமார் மூன்னூற்று ஐம்பது கிணறுகள் புதிதாக வெட்டி யிருக்கிறோம்'' என்றார் சமூக நலத் திட்ட அதிகாரிகளில் ஒருவர்.

''அந்தக் கிணறுகளைப் பார்க்கலாமா !''

''வாருங்கள் போகலாம் !''

பஞ்சாப் கிராமங்களில் வீட்டுக்கு வீடு கிணறு கிடையாது. ஆனால் வீதிக்கு ஒரு கிணறு வெட்டி யிருக்கிறார்கள். கிணற்றைச் சுற்றித் தண்ணீர் தேங்காமல் உயரமான மேடை கட்டி வீணாகும் தண்ணீரை வெகு தூரத்துக்கு அப்பால் போகும்படி சிமெண்ட் கால்வாயும் கட்டி யிருக்கிறார்கள்.

''அதென்ன ஒவ்வொரு கிணற்றுக்கு அருகிலும் அறைகள் இருக்கின்றனவே!''

''கிராம மக்கள் குளிப்பதற்காக இருக்கும் அறைகள். ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று என்று தனித்தனியாக இருக்கிறது.''

''கிணற்று மேடைமீது என்ன சக்கரம் !''

''கிணற்றில் இருந்து தண்ணீர் இறைப்பதற்கு உபயோகிக்கும் சக்கரம்.''

''தண்ணீர் இறைப்பதற்கா !''

''ஆமாம் !'' என்று கூறிவிட்டு அந்தச் சக்கரத்தின் மூலம் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும் விதத்தைக் காண்பித்தார்.

தமிழ் நாட்டில் கிணற்றின் கைப்பிடிச் சுவரில் இரண்டு தூண்களை எழுப்பி அதன் மத்தியில் சட்டம் போட்டு அதில் சக்கரம் பொருத்தி அதன் மூலம் தண்ணீர் இறைக்கிறோம். அதற்குப் பதிலாகப் பஞ்சாப் கிராமங்களில் 'கல்டி' என்னும் நவீன இயந்திரத்தின் மூலம் தண்ணீர் இறைக்கிறார்கள். சைக்கிளில் பல் சக்கரத்தைச் சுற்றுவதற்குச் சங்கிலி இருக்கிறதல்லவா ! அதுபோல் இரண்டு சங்கிலிகளுக்கு மத்தியில் ஒரு அடிக்கு ஒரு வாளி வீதம் அமைந்த வாளி மாலை இருக்கிறது. கிணற்று மத்தியில் அதன் தண்ணீர் வரையில் அந்த வாளி மாலை நீளமாகத் தொங்குகிறது. அந்தச் சங்கிலி வாளி மாலை கிணற்றுக் கரையில் இருக்கும் சக்கரத்துடன் இணைக்கப்பட் டிருக்கிறது. சக்கரத்தைக் கையினால் சுழற்றினால் வாளி மாலை சுழல்கிறது. வாளி மாலை சுழலச் சுழல ஒவ்வொரு வாளியும் தண்ணீரை நிரப்பிக் கொண்டு மேலே வந்து இடைவிடாமல் தண்ணீரைக் கொட்டிக் கொண்டே இருக்கின்றது. கிணற்றின் ஓரமாகக் கட்டி யிருக்கும் தொட்டியில் தண்ணீர் அருவி போல வந்து விழுகிறது. இதைச் சாதாரணமாக ஒரு கையினாலேயே சுற்ற முடிகிறது. மாட்டைப் பூட்டிக் கவலை ஏற்றம் போல் ஓட்டியும் தண்ணீர் இறைக்கலாம். அபாயம் துளிக் கூட இல்லை. இது போன்ற தண்ணீர் இறைக்கும் 'கல்டி' இயந்திரங்களைக் கிராமங்களில் உள்ள எல்லாக் கிணறுகளிலும் சமூக நல ஸ்தாபனத்தார் வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு 'கல்டி' இயந்திரத்தின் விலை சுமார் எண்ணூறு ரூபாய்.

''இவ்வளவு ரூபாய் மதிப்புள்ள 'கல்டி' இயந்திரம் போட்டு, குளிக்கும் அறைகளும் கட்டிக் கொடுத்திருக்கிறீர்களே ! இந்தச் செலவெல்லாம் சர்க்காருடையதா !''

''இல்லை. பாதிச் செலவு கிராம மக்களுடையது. கிராம மக்கள் முதலில் தங்கள் பங்கு ரூபாயைக் கொடுக்கா விட்டாலும் கிணற்றுக்கு 'கல்டி' இயந்திரத்தைப் பொருத்திக் கொடுத்து விடுகிறோம். பிறகு கிராம மக்கள் அதன் சௌகரியத்தை உணர்ந்து தங்கள் பங்கு ரூபாயைக் கொடுத்து விடுகிறார்கள்.''

தமிழ் நாட்டில் சர்க்கார் உதவியைப் பெறுவதற்குக் கிராம மக்கள் படும் கஷ்டத்தையும், பஞ்சாபில் பஞ்சாப் சர்க்கார் அதிகாரிகள் பஞ்சாப் கிராம மக்களுக்குச் செய்து கொடுக்கும் சௌகரியத்தையும் பார்த்தபோது ஏதோ அதிசயத்தைப் பார்ப்பதுபோல்தான் இருந்தது.

அது எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும். வாருங்கள், இன்னொரு கிராமத்துக்குச் செல்வோம். இதுதான் சைனிலால் கிராமம்.



கூந்தல் மற்றும் மூளை
அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபகசக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில் ரூ. 3-8-0
சிறிய பாட்டில் ரூ. 2-0-0

எங்கும் கிடைக்கும்

ஆயுர்வேத மருந்து

ராம்தீர்த்

பிராம்மி எண்ணெய்

ராம்தீர்த் யோகாஸ்ரமம்
பம்பாய்-14. (C. Rly.)


ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க யோகாசனங்களை விளக்கும் எங்கள் அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள் தபால் செலவு உள்பட ரூ. 1-12-0. மணிஆர்டரில் தொகை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களை சுலபமாகப் பழகலாம்.

பிரதி தினம் காலை 7-30 முதல் 9.30 வரையிலும் மாலை 6 முதல் 7-30 வரையிலும் வழக்கமாக யோகாசன வகுப்புகள் மேற்கண்ட விலாசத்தில் நடைபெறும். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் காலை 10 மணிக்கு யோகாசன சம்பந்தமான சொற்பொழிவு நடைபெறும்.



பிரபலமானவர்கள்

அதன்
நுரையை
விரும்புகிறார்கள்!



படான்வாலாவின்

ஷேவிங்

ஸ்டிக்
மற்றும்
ரவுண்டு
சோப்

Patanwala
PERFUMES & COSMETICS

வெடிப்புகள், துவாரம் விழுதல் இவற்றினின்று விசேஷ பாதுகாப்பை


எவ்வித அதிகச் செலவின்றி பெறுங்கள்!

Firestone

பயர்ஸ்டோன்

டியூபில்லாத

டயர்களால்



கிழிந்து விடுதல் அல்லது வெடித்துவிடக் கூடிய டியூப் இல்லாத இந்த டயர் ஈடு இணையற்ற பாதுகாப்பு அளிக்கிறது. இந்த டயருக்குள் ஒரு ஆணி நுழைந்தால் உள்ளிருக்கும் பாதுகாப்பு உறுப்பு அழுத்திப் பிடித்து, காற்று வெளியேறாமல் பார்த்துக் கொள்ளுகிறது. அதனால் உங்கள் வண்டியை நிறுத்தாமல் மேலே செலுத்திக் கொண்டு போக முடிகிறது. இந்த அதிகப்படி வசதிக்கும் பாதுகாப்புக்கும் பொருள் என்னவென்று நினைத்துப் பாருங்கள்! பாதுகாப்பு சக்தி பொருந்திய கம்-டிப்டு கார்டுகளினால் செய்யப்பட்ட இந்த டயர்கள் மிக உறுதியாக இருப்பதோடு அதிக மைல்களும் ஓடக் கூடியன. அதனால் நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு அணுவுக்கும் அதிக பலன் கிடைக்கிறது. இத்தனை விசேஷ அம்சங்கள் பெற்றிருப்பினும் இந்த டயர், சாதாரண டயருக்கும் டியூபுக்கும் ஆகும் விலையைவிட அதிகமில்லை. உடனே உங்கள் பயர்ஸ்டோன் வியாபாரியைப் பாருங்கள். பயர்ஸ்டோன் டியூபில்லாத டயர் தான் வேண்டுமென்று கேளுங்கள்.



இந்த டயர்கள் மிக நன்றாக இருப்பதால் எல்லா மோட்டார் உற்பத்தியாளர்களும், தங்கள் புது மாடல் கார்களுக்கு நிச்சயமான பாதுகாப்புக்கு பயர்ஸ்டோன் டயர்களையே பொருத்தி வருகிறார்கள்.

பாதுகாப்பு மிகுந்த, விசேஷ கம்-டிப்டு கார்டுகளினாலும் டியூபில்லாமலும் செய்யப்பட்ட புது டயர்கள் மிகுந்த சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன. துவாரம் விழாமல், வெடிப்புகள் நேராமல் பாதுகாக்கின்றன!

இன்று சிறந்தது — நாளை மேலும் சிறந்தோங்குவது

"BEST TODAY—STILL BETTER TOMORROW!"

இந்தக் கிராமத்திலும் சாலைகள், கிணறுகள் எல்லாம் மற்றக் கிராமங்களைப் போலவே சிறந்த முறையில் செய்திருக்கிறார்கள். அவைகளைத் தவிர வேறு என்ன விசேஷங்கள் இந்தக் கிராமத்தில் இருக்கப் போகின்றன என்று நினைக்கும்போது, "கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களை நாங்கள் இன்னும் பார்க்கவில்லையே!" என்றார் ஒரு பத்திரிகையாளர்.

"அதோ அரசமரத்துக்கு அடியில் பிள்ளைகள் வரிசையாக உட்கார்ந்திருக்கிறார்களே! அதுதான் பள்ளிக்கூடம்."

அந்தப் பள்ளிக்கூடம் இருக்குமிடத்துக்குச் செல்வோம். மரங்களுக்கு அடியில் பிள்ளைகள் உட்கார்ந்திருக்கிறார்கள். மரப் பலகையில் கறுப்பு மசியால் எழுதியிருக்கும் எழுத்துக்களைப் படிக்கிறார்கள். எல்லாம் உருது எழுத்துக்கள்தான். உருதுவைத்தான் முக்கியமாகப் படிக்கிறார்கள். பள்ளிக்கூடம் கட்டுவதற்குப் பணம் செலவழிக்காமல் அதே சமயத்தில் பிள்ளைகளுக்கு எவ்வளவு சிக்கனமாகப் பள்ளிக்கூடம் நடத்தலாம் என்பதைப் பஞ்சாப் கிராமங்களில் பார்க்க முடிகிறது.

ஒரு காலத்தில் எழுத்தறிவே இல்லாத பஞ்சாப் கிராமங்களில் எல்லாம் இப்பொழுது எல்லாப் பிள்ளைகளும் எழுத்தறிவைப் பெற்று வருகின்றனர். பஞ்சாபில் எழுத்தறியாமைப் பேயைப் பல வழிகளில் அடித்து விரட்டி வருகிறார்கள். தேசம் சுதந்திரம் பெற்ற பலனை அனுபவித்து வருகின்றனர்.

கிராமத்தில் உள்ள ஒரு வீட்டுக்குள் செல்வோம். அவர்கள் எப்படிச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள் என்பதையும் பார்ப்போம்.

வீடுகள் சாதாரண மண் வீடுகள் தான். ஆனால் வீட்டில் மின்சாரம் பொருத்தப்பட்டிருக்கிறது. வீட்டுக்குள் மின்சார விசிறிகள் இருக்கின்றன. ரேடியோ இருக்கிறது. இவ்வளவு நவீன வசதிகளையும் மண் குடிசை வீடுகளிலேயே செய்து கொண்டிருக்கிறார்கள்.

வீட்டுக்கு வெளியிலேயே சமையல் நடக்கிறது. அந்தப் பெண்மணி அடுப்பில் சப்பாத்தி சுட்டுக் கொண்டிருக்கிறாள். ஆனாலும் அடுப்பில் இருந்து புகையே வரவில்லை.

"இது என்ன அடுப்பு!"

"இது புகையில்லாமலும், அதிக விறகு செலவாகாமலும் சிக்கனமாகவும் அதே சமயத்தில் மற்ற அடுப்புகளைப் போல் தீ வீணாகாமலும் இருக்கும்படி செய்துள்ள புதுமாதிரி அடுப்பு."

"வீட்டுக்கு வீடு இதே அடுப்புதானா!"

"ஆமாம். சமூகநலத்திட்ட ஸ்தாபனத்தின் மூலம் பத்தாயிரம் வீடுகளுக்கு இதுபோன்ற அடுப்புகள் வைத்துக் கொடுத்திருக்கிறோம்."

இந்த அடுப்பினால் பஞ்சாப் கிராம மக்கள் அடைந்து வரும் பலனைச் சொல்லி முடியாது. கோடை காலத்தில் பஞ்சாபின் கொடிய வெய்யிலில் அடுப்படியில் வேலை செய்வதைவிட நரகவேதனை ஒன்றும் இருக்க முடியாது. இந்தப் புதுமாதிரி அடுப்பு வந்த பிறகு அந்த வேதனை குறைந்து விட்டது. கோடை காலத்தில் வீட்டுக்கு வெளிப் புறத்தில் காற்றோட்டமாக நின்று சமைக்கிறார்கள். மழைக் காலத்தில் அதே அடுப்பின் இன்னொரு பகுதியில் வீட்டுக்குள் சமைக்கிறார்கள்.

கிராமத்து மக்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் உள்ள குறைகளைக் கண்டு நிவர்த்தி செய்ய அரும்பாடு பட்டுவரும் பஞ்சாப் சமூக நல ஸ்தாபனத்தாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

பஞ்சாப் கிராமத்து வீடுகள் பார்ப்பதற்கு மண்ணால் ஆன கோட்டைகள் போல் காட்சி அளிக்கின்றன. நாலுபுறமும் மண் சுவர் எடுத்து அதன்மீது கோதுமை வைக்கோலையும் சிறு சிறு விறகுக் குச்சிகளையும் பரப்பி அவைகள் மீது சேற்றைப் பூசி மூடி விடுகிறார்கள். சிமெண்ட் போட்டு ஒட்டிய மாடி வீடு போலவே 'ஜம்'மென்று களிமண்ணைக் கொண்டே கட்டிவிடுகிறார்கள். அதன் மேல் தளத்தில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுக் கொண்டு இரவில் தூங்குகிறார்கள். பஞ்சாபில் கோடை காலத்தில் வீட்டுக்கு உள்ளே யாரும் படுப்பதில்லை. எல்லோரும் வீட்டின் மேல் தளத்திலோ அல்லது வீட்டுக்கு வெளியிலோ கயிற்றுக் கட்டிலில் படுத்து உறங்குகிறார்கள்.

பஞ்சாப் கிராமங்களின் வீடுகளுக்கு அந்தக் காலத்தில் ஜன்னலே இருப்பதில்லை. அது போன்ற ஜன்னல்கள் இல்லாத வீடுகள் இன்னும் இருக்கின்றன. இப்போது சமூக நல ஸ்தாபனத்தார் எல்லா வீடுகளிலும் ஜன்னல் வைத்துக் கொடுத்துக் கோடை காலத்தில் வீட்டுக்கு உள்ளே கூடப் படுத்து உறங்குவதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். "இது வரை 15,000 ஜன்னல்கள் வைத்திருக்கிறோம்" என்று கணக்குச் சொன்னார்கள்.

மண்ணாலான வீடுகளானாலும் எல்லா வீடுகளும் பெரிய பெரிய வீடுகள். மூன்று கட்டுக்கு, நாலு கட்டுக்குக் குறைந்த வீடுகளே இல்லை. நாலைந்து வீடுகளுக்கு மத்தியில் பெரிய அரச மரம் இருக்கிறது. வெய்யில் வேளையில் அரசமரத்துக்கு அடியில் உட்கார்ந்து ஹுக்கா பிடித்துக் கொண்டும், வம்பளந்து கொண்டும் காலம் கழிக்கிறார்கள் மக்கள்.

முன்பெல்லாம் வீடுகளுக்கு உள்ளேயே மாடுகளையும் கட்டிக் கொள்வார்களாம். இப்பொழுது சமூக நல ஸ்தாபனத்தார் பெரும் முயற்சி செய்து மாடுகளுக்குத் தனிக் கொட்டகை கட்டிக் கொடுத்து வருகிறார்கள்.

கிராமத்து மக்கள் எல்லாரும் ஆஜானுபாகுவாகத் திடகாத்திரத்துடன் தோன்றினாலும், குழந்தைகள் என்னவோ பலஹீனமாகத்தான் காட்சி அளிக்கின்றன. அதிலும் குழந்தைகளுக்கு அதிகமான கண் நோய்கள் வருகின்றனவாம். அதற்கு வேண்டிய சிகிச்சைகளையும் சர்க்கார் செய்து வருகிறார்கள் என்பதை அறிந்தோம். டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று குழந்தைகளைப் பரிசோதனை செய்து வேண்டிய மருந்து கொடுத்து வருகிறார்கள்.

நம்முடைய ஆஸ்பத்திரிகள் சிலவற்றில் தவம் இருந்தால்கூடச் சரியாகக் கவனிப்பதில்லை. சில இடங்களில் ஆஸ்பத்திரிகளையே மூடி விடுவதற்கு யோசனை செய்து வருகிறார்கள். ஆனால் பஞ்சாப் கிராமங்களிலோ டாக்டர்கள் வீடு வீடாகச் சென்று மக்களின் உடலைப் பரிசோதித்து மருந்து கொடுத்து வருகிறார்கள். அங்குள்ள சமூக நல ஸ்தாபனம் அப்படி வேலை செய்து வருகிறது!

அவர்கள் எவ்வாறெல்லாம் வேலை செய்து கிராமங்களை உயர்த்தி வருகிறார்கள் என்பதை இன்னும் சில கிராமங்களுக்குச் சென்று தெரிந்து கொள்வோம். (தொடரும்)

ஏலத்தில் எடுத்த பேனா

கோணல்



“அசல் அமெரிக்கன் மேக் பேனா! ஒன்னரை அணா, மிகவும் உயர்ந்த மேக், கீழே போடாதவரையில் உடையாது; வைத்து நசுக்காதவரையில் நசுங்காது; நெருப்பில் காட்டாதிருக்கும் வரையில் எரியாது; மேல் பாகம் அடிப்பாகம் எல்லாம் இருக்கின்றன; உயர்ந்த ரகம், நவீன மாடல்; ஒன்னரை அணா!......” என்று கையில் ஒரு பேனாவை வைத்துக் கொண்டு கூவிக் கொண்டிருந்தான் ஏலக் கடைக்காரன்.

எவ்வளவோ நாள் அந்த ஏலக்கடைப் பக்கம் நான் போயிருக்கிறேன். ஆனால் என் மனத்தைக் கவர்ந்து என்னை நிறுத்தி வைக்கக் கூடிய விதத்தில் அந்த ஏலக் கடைக்காரன் எந்தச் சாமானையும் ஏலம் போட்டதில்லை. அவன் ஒரு பௌண்டன் பேனாவை வைத்துக் கொண்டு ஏலம் கூவிய போது நான் அந்தக் கடை வாசலில் நின்றுவிட்டதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. வாழ்க்கையில் என் மனத்தைக் கவர்ந்த பல பொருள்களில் பௌண்டன் பேனாவும் ஒன்று. அதுவும் விலை மலிவான பேனாவென்றால் ஒரு பிரேமை. ஒன்றே முக்காலணா என்று கேட்டு வைப்போமா என்று மனத்தில் ஒரு ஆசை எழுந்தது. சட்டைப் பையில் போதுமான சில்லறை இருக்கிறதா என்று தடவிப் பார்த்தேன். இரண்டரை அணா இருந்தது. இரண்டரையணா வரையில் தாராளமாக ஏலம் கேட்கலாமென்ற தைரியம் ஏற்பட்டது.

அந்தப் பேனாவை ஒன்றரை அணா என்று ஏலம் கேட்ட புண்ணியவான் அந்தக் கூட்டத்தில் எங்கு நிற்கிறார் என்று எனக்குத் தெரியாது. என்னைப் போல் பேனா மோகம் கொண்ட அந்த உத்தமனைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல்தான் எனக்கு. கால் மணி நேரமாக அந்தப் பேனாவை வைத்துக் கொண்டு கதறும் அந்த ஏலக்கடைக்காரனிடம் சிறிது கருணை காட்டியாவது 'ஒன்றே முக்காலணா' என்று காலணா உயர்த்திக் கேட்பவர்கள் அந்தக் கூட்டத்தில் இருக்க மாட்டார்கள் போலிருந்தது. அதுவும் என்னுடைய அதிருஷ்டம் தான் என்று எனக்குப் பட்டது. 'ஒன்றே முக்காலணா' என்று கூட்டத்திலிருந்து குரல் கொடுத்தேன்.

'ஒண்ணே முக்காலணா, அபூர்வமான பேனா ஒண்ணே முக்காலணா. அமெரிக்கன் பேனா ஒண்ணே முக்காலணா. அழகான பேனா. கிளிப்பு இருக்கிறது. நிப்பு இருக்கிறது. இங்கி போடலாம். எழுதலாம். இவ்வளவு உபயோகமான பேனா ஒண்ணே முக்காலணா” என்று கூவிக் கொண்டே பேனாவை லாகவமாக எடுத்துக் காட்டினார் ஏலம் போடுகிறவர்.

“ஒண்ணே முக்காலணா” என்று துணிந்து ஏலம் கேட்ட என் முகத்தை அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களெல்லாம் மிகவும் வியப்போடு பார்த்தார்கள்.

கூட்டத்திலிருந்த அன்பர்களில் ஒருவர் எனக்குச் சமீபமாக வந்து நின்று, “இது அசல் அமெரிக்கன் பேனாதானா?” என்றார்.

“இருக்கலாம். முன்னெல்லாம் ஜப்பானிலிருந்து தான் இப்படிப்பட்ட சாமான்களெல்லாம் வருகிற வழக்கம். இப்பொழுதெல்லாம் அமெரிக்காவிலிருந்து வருகிறது” என்றேன் நான்.

“பேனாவின் பேரு என்னவாம்?” என்று கேட்டார் அவர்.

“ஏலம் போடுகிறவரையே கேளுங்கள்” என்றேன்.

“பேனாவின் பேரு என்னய்யா!” என்றார் என் பக்கத்தில் நின்றவர், ஏலம் போடுகிறவரைப் பார்த்து.

“இதிலே எந்தப் பேரும் எழுதல்லே. இதை ஏலம் எடுக்கிறவங்க அவங்க பேரையே அதில் எழுதிக்கலாம். அந்தச் சௌகர்யத்துக்காகத்தான் வேறு எந்தப் பெயரும் எழுதாமல் ஸ்பெஷலா வந்திருக்கு” என்றார் ஏலம் போடுகிறவர்.

இதைக் கேட்டதும் ஏதோ மன ஆறுதல் அடைந்து விட்டவர்போல், “இரண்டணா” என்று ஏலத்தைப் பக்கத்தில் நின்ற நண்பர் உயர்த்தினார்.

நான் இரண்டே காலணா கேட்கலாமென்று நினைத்தேன். ஆனால் பக்கத்தில் இருந்த நண்பர் நான் இரண்டே காலணாவென்றால் இரண்டரை அணா என்பார். அதற்கு மேல் இரண்டே முக்காலணா கேட்கக் கூடிய நிலையில் நான் இல்லை. என் கையில் இரண்டரையணாத்தானே இருந்தது? ஒரேயடியாக இரண்டரையணா என்று கேட்டுவிடத் தீர்மானித்தேன்.

என் பக்கத்திலிருந்த நண்பர் அதற்கு மேல் கேட்டு வேண்டுமானால் அந்தப் பேனாவை எடுத்துக் கொள்ளட்டுமே? "இரண்டரை அணா" என்றேன்.

பக்கத்திலிருந்த நண்பர் திகைப்படைந்து விட்டார். "என்ன சார்! இதற்கு இரண்டரையணா கொடுக்கலாமா...?" என்றார்.



"கொடுக்கக் கூடாது தான். பாவம், அரைமணிநேரமாக அந்த மனிதன் பேனாவை வைத்துக் கொண்டுகதறுகிறான்" என்றேன்.

நண்பர் ஒன்றும் பதில் பேசவில்லை. ஏலம் விடுபவர், "இரண்டரையணா. பேனா இரண்டரையணா. ஒரு தரம். இரண்டு தரம் இரண்டரையணா. மூன்றும் தரம் இரண்டரையணா விடப்பட்டது" என்று சொல்லி என்னிடம் பேனாவைக் கொடுத்தார்.

நீலநிறப் பேனா. அழகாகத்தானிருந்தது. மேல் மூடியைக் கழற்றினேன். உள் திருகைக் கழற்றினேன். "தேவலாம், தாராளமாய் இரண்டரையணா கொடுக்கலாம்" என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் உள் திருகைப் போட முயன்றேன். சுற்றிக் கொண்டே வந்ததே தவிரப் பொருந்தவில்லை. பக்கத்திலிருந்த நண்பர் இதைக் கவனித்து விட்டால் வெட்கக் கேடு என்று எண்ணி உள் திருகு பொருந்தி விட்டது போல் பாவனை பண்ணி மேல் மூடியைப் போட்டேன். உள் திருகு எப்படி இருந்ததோ அதே குணத்தைத் தான் மேல் மூடியும் அனுஷ்டிக்க ஆரம்பித்தது. எத்தனை திருகினாலும் பொருந்துவதா யில்லை. அதையும் பக்கத்திலிருந்த நண்பர் அறிந்து கொள்ளாத வண்ணம் மூடி மறைத்து எல்லாம் சரியாகி விட்டது போல் சட்டைப் பையில் வைத்துக் கொண்டேன்.

"என்ன ஸார், பேனா எப்படி இருக்கிறது?" என்றார் அந்த அன்பர்.

"பேஷாய் இருக்கிறது, தேவலாம்!" என்றேன் நான், என்னுடைய ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல்.

"அப்படியா? கொடுங்கள் பார்க்கலாம்!" என்றார் அவர்.

"பேனா விஷயத்தில் நான் ரொம்பக் கண்டிப்பு. எப்பொழுதுமே நான் என் பேனாவை யார் கையிலும் பார்க்கக்கூடக் கொடுப்பதில்லை" என்றேன் நான்.

"சரிதான், நல்ல பழக்கம்தான். இந்த மாதிரிப் பேனாவை மை போட்டபின் யார் கையிலிருந்தும் நான் சாதாரணமாகக்கூட வாங்கிப் பார்க்க மாட்டேன். இப்பொழுது மை போடாமல் புதிதாக இருக்கிறதே என்று கேட்டேன்" என்றார் அவர்.

"ஏன் இந்தப் பேனாவைப்பற்றி அவ்வளவு மட்டமாக நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்றேன்நான்.


"அனுபவப் பட்டதால் தான். நேற்று இதே போல் ஒரு பேனா ஒண்ணே முக்காலணாவுக்கு ஏலம் எடுத்தேன். ஒரு தடவை கழற்றிப் போடுவதற்குள் எல்லாம் கடகடத்துப் போய் விட்டது. அப்படியும் காகிதம், நூல் எல்லாம் சுற்றி மை போட்டு வைத்துக் கொண்டேன். கையிலே, பையிலே எல்லாம் ஒரே மை தான். ஏதோ நீங்க தெரியாத்தனமாகப் பேனா ஏலம் எடுத்து விட்டீர்கள். அதில் மை மாத்திரம் போட்டு விடாதீர்கள். ஜாக்கிரதை!" என்றார் அந்த மனிதர்.

"உங்களுக்கு இந்த அனுபவம் இருக்கும் போது ஏலத்தை ஏன் உயர்த்திக் கேட்டீர்கள்?" என்றேன் நான்.

"நான் எடுத்ததை விட அதிக விலைக்கு யாராவது அதுமாதிரி ஒரு பேனாவை ஏலம் எடுத்தால்தான் என் மனசுக்கு ஆறுதல் ஏற்படும் போலிருந்தது. அதனால் ஏலத்தைத் தூக்கிவிட்டேன். அவ்வளவுதான்" என்றார்.

ஏலக்கடைக்காரர் தொடர்ந்து ஏலம் கூறத் தலைப்பட்டார். "சகோதரர்களே! பார்த்துக் கேளுங்கள்! பௌண்டன் பேனாவுக்கு அப்புறம் இந்த பார்சோப்பை ஏலம் விடப் போகிறேன். நல்ல சோப். சட்டையிலோ, கையிலோ மைக்கறை பட்டால் ஒரு நொடியிலே எடுத்து விடும். கேளுங்கள். அருமையான சோப். காலணா..." என்றார்.


பக்கத்தில் நின்ற நண்பரைக் காணோம். நானும் மெதுவாக நகர்ந்தேன்.




ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்தரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2


20%க்கும்
மேற்கொண்ட அளவு
கட்டணத்தில் குறைவு!
லண்டனுக்கு டூரிஸ்ட்
வகுப்பில் பறந்து போங்கள் – போக
வரக் கட்டணத்தில்
ரூ. 599/- மீதப்படுத்துங்கள்
சிக்கனமான சீஸன் இப்பொழுது நடப்பிலிருக்கிறது!
ஐரோப்பாவிற்குப் பறந்து போக இதுவே தக்க தருணம்.
ஒவ்வொரு டிக்கெட்டின் பேரிலும் 20 சத விகிதம்
நீங்கள் மிச்சப் படுத்துவீர்கள்.
உங்களுக்கு வேண்டியபடி பிரயாணம் நிச்சயிக்க:
லண்டன் போக ஒரு வாரத்தில் 6 சர்வீஸ்கள்
கெய்ரோ போக ஒரு வாரத்தில் 4 சர்வீஸ்கள்
ஜெனிவா
ரோம்
பாரிஸ்
பேரூட்
டுஸ்ஸல்டார்ப்
ஜூரிக்
போக ஒரு வாரத்தில் 2 சர்வீஸ்கள்
இச்சலுகை ஆகஸ்ட் முதல் பிப்பரவரி வரை
அமுலில் இருக்கும்
ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல்

ரகுபதி ராகவ





[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

12

பூவுலகத்தில் அவதரித்து உபதேசித்த மகான்கள் அனைவரும் அன்புதான் வாழ்க்கை முறை என்பதைக் காட்டி வந்திருக்கிறார்கள். சிலர் இதை வற்புறுத்தியும், சிலர் வேறு விஷயங்கள் அதிகமாக வற்புறுத்தியும் வந்திருக்கிறார்கள். ஆனால் எல்லாரும் வாழ்க்கையின் அடிப்படை தர்மம் அன்பே என்று உபதேசித்து வந்திருக்கிறார்கள். அன்பு என்னும் வேகம் மனித குலத்தை நடத்தியிராவிட்டால் மனித ஜாதி அழிந்தே போயிருக்கும். காலனுக்குத் தினமும் தோல்வி தந்து வருவது அன்பின் வேகம். மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் மனிதன் தன் வாழ்க்கையில் பரஸ்பர அன்புக்குப் பிராதான்யம் கொடுத்து வருவதேதான். உலகத்தில் அவதரித்து வழிகாட்டி மறைந்த பெரியார்கள் எல்லாரும் அன்பே நல் வாழ்க்கையின் ரகசியம் என்று தங்கள் வாழ்க்கையில் நிதர்சனமாகக் காட்டியுள்ளார்கள். நம்முடைய உள்ளங்களுக்குள் இன்னும் மறைந்து நிற்கும் மிருக தத்துவம் அவ்வப்போது தலை தூக்கி வருகிறது. ஆயினும் அது அன்பின் ஆட்சியைப் பொய்யாக்கி விடாது. தருமம் உண்மையாயினும் நடத்துவது கடினம். கடினம் இல்லாவிடில் அதன் சிறப்பு என்ன? அனைவரும் அன்பின் ஆட்சியை ஒப்புக் கொண்டு அனைத்திலும் அதைச் செலுத்தி விட்டார்களாகில் பூவுலகமே ஆண்டவனுடைய தேவலோகம் ஆகிவிடும். இகமும் பரமும் நமக்குள்ளேதான் இருக்கின்றன என்பதை அறிவேன். ஆனால் நாம் அறிந்தது இகம். நமக்குள்ளே இருக்கும் பரத்தை நாம் காணவில்லை.

அன்பு வாழ்க்கையை ஒரு சிலர் நடத்துவார்கள் என்று ஒப்புக்கொண்டால் ஏன் மற்றவர்களால் முடியாது? அது முடியாது, அதற்கு முயற்சிப்பது வீண் என்று சொல்வது அகம்பாவம்ஆகும். மனிதர்கள் ஒரு காலத்தில் மிகவும் கோரமான வாழ்க்கை நடத்தியிருக்கிறார்கள். அப்போதுமே சிலர் அது வேண்டாம் என்று சொல்லி, அது காரணமாகப் பரிகாசத்துக்கு ஆளாகியும் வந்திருப்பார்கள். 'ஒருவரை ஒருவர் ஏன் கொன்று சாப்பிடக் கூடாது. நீ சொல்வது அதிசயமாக இருக்கிறது. உளறுதே' என்றும் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்தே இருப்பார்கள். அதுபோலவே நான் இப்போது அன்பைப் பற்றிச் சொல்வதை இது முடியாத காரியம் என்றும் விஷயம் தெரியாத பேச்சு என்றும் சிலர் ஆட்சேபிக்கிறார்கள்.

[ஹரிஜன் 26—9—36]

ராஜாஜி

ஆண்டவன் எங்கேயோ வானத்திலிருந்து கொண்டு ஆட்சி புரியவில்லை. நமக்குள் மறைந்து நிற்கிறான். நம்முடைய ஊனுக்குள், உயிருக்குள் அந்தரங்கமாக இருக்கிறான். நமக்குள் நாம் காணாத சக்தி எவ்வளவோ இருக்கிறது. ஆராய்ச்சியும் முயற்சியும் இடைவிடாது செய்து வந்தால் நமக்குள் இருக்கும் சக்தியை நாம் காண்கிறோம். அப்படியே நமக்குள் இருக்கும் ஆண்டவனையும் கண்டு கொள்ளலாம். அதற்கு வைராக்கிய

றும் விடா முயற்சியும் வேண்டும். நமக்குள் குடியிருக்கும் தெய்வத்தைக் காண்பதற்குப் பல துறைகள் உண்டு. அவற்றில் அஹிம்ஸை ஒரு துறை. ஈசன் நமக்குள் இருக்கிறான். ஒவ்வொருவருள்ளும் இருக்கிறான். எல்லா உயிரிலும் ஆண்டவனைக் கண்டு, எல்லா உயிரும் பகவான் சொரூபமே என்பதை உணர வேண்டும். அதுவே அஹிம்ஸையாகும். அனைத்தும் ஒன்று என்பதை பௌதிகத்தில் விசுவ ஆகர்ஷண சக்தியாக விஞ்ஞானிகள் காண்கிறார்கள். உயிர் உணர்ச்சிகளில் அந்த வேகத்தை நாம் அன்பு என்கிறோம். பௌதிகப் பொருள்களைக் கட்டிப் பிணைக்கும் க்ராவிடேஷன், கோஹிஷன் என்று பெயரிடப்பட்ட வேகங்களைப் போலவே உயிர்களை ஒன்றாகப் பிணைத்துக் கட்டும் சக்தி, அன்பு. அதுவே உயிர்களைக் கடவுளுடன் பிணைக்கிறது. அன்பு என்பதே அஹிம்ஸை, அஹிம்ஸை என்பதே அன்பு.

[1—6—42இல் எழுதிய ஒரு கடிதத்திலிருந்து]

வட்ட மேஜை

ஒரு வெற்றி!

ஒரு காரியத்திலே வெற்றி பெற்று விட்டால் மனம் மிகவும் குதூகலப்படும் அல்லவா! அத்துடன் அந்த வெற்றிக்கு உதவியவர்களை மனமார வாழ்த்திப் பல்லாண்டு பாடும்.

"ரகுபதி ராகவ" என்ற தொடரில் வரும் விஷயங்களை என் சிறு தம்பி முதல் பாட்டி வரை எல்லோரும் படித்துச் சந்தோஷம் அடைகிறார்கள். இதைக் காண்பதில் எனக்கு மிக மகிழ்ச்சி. ஆனால் ஒவ்வொரு வாரமும் எனது நண்பருடன் ராஜாஜியுடைய மேற்படி கட்டுரையைப் பற்றிச் சர்ச்சை செய்வேன்.

ஒரு நாளும் கடவுளைப் பற்றிய விவாதத்தில் என்னுடன் ஒத்துப் போகாதவர், ராஜாஜி எழுதுகின்ற "ரகுபதி ராகவ" என்ற கட்டுரையில் ஆறுவதாக வந்த "உளன் கண்டாய்" என்கின்ற விஷயத்தைக் கேட்ட பின்பு, "இப்படி அருமையாக விளக்கியிருந்தால் நான் எப்பவோ ஒத்துக் கொண்டிருப்பேனே" என்றார். புன்முறுவலுடன் இந்த வார்த்தைகளைக் கேட்டு நான் புளகாங்கிதமடைந்தாலும், 'ஏதுடா, இவ்வளவு சீக்கிரமாக ஒப்புக் கொண்டாரே! சர்ச்சைக்குச் சுமுகமாக முற்றுப் புள்ளி வைத்து என்னை மட்டம் தட்டப் பார்க்கிறாரோ' என்று சந்தேகித்தது என் பேய் மனம். ஆனால் உண்மையாகவே நண்பர் திசை திரும்பியிருக்கிறார் என்பதை அறிய மனம் ஆனந்த சாகரத்தில் ஆழ்கின்றது.

ராஜாஜியின் அரிய விளக்கத்தால்தான் எனது நாஸ்திக நண்பர் ஆஸ்திகத்தின் முதற் படியில் கால் வைத்திருக்கிறார். எனது நண்பர் போன்ற பலர் நாட்டில் இருக்கிறார்கள். ராஜாஜியின் விளக்கங்கள் அவர்கள் அனைவரையும் நல்வழிக்குக் கொண்டு வர ஈசன் தயவு செய்ய வேண்டும். காந்திஜியின் மெய்யான வார்த்தைகளை மகரிஷி ராஜாஜியின் வாயிலாக அறிந்து உண்மையான வழியைக் கடைப்பிடிப்போமாக!

வாழ்க, ராஜாஜி என்றும்! வளர்க, 'கல்கி' பல்லாண்டு!!

இலங்கை
27—12—55 பா. பகவான்

நமது வைத்தியம்

நீங்கள் எழுதும் "ரவிச்சந்திரிகா"வைப் படித்து மகிழும் அனேகரில் நானும் ஒருத்தி. புள்ளிகளை வைத்து நிமிஷத்தில், அழகான கோலங்களாகச் சித்திரிப்பது போல், சின்னச் சின்னத் தமிழ் மொழிகளை வைத்து அதியற்புதமான கதையைக் கல்கி அவர்களைப் போலவே சொல்கிறீர்கள். எங்களையே நேரில் திருச்சித் தெருவுக்கும் "நிலா மேடை"க்கும் அழைத்துச் செல்கிறீர்கள். நாங்கள், அழகிய நிலா பொழியும் அந்த நிலா மேடையும், தூரத்தே இலைகளால் நிலவைக் கோலமிட்டுக் காட்டும் பெரிய மரங்களும், அதில் சுற்றியுள்ள கொடிகளும் மட்டும் அல்ல, இதோ காலில் சிறிய கற்களுடன் கலந்த மணல்களும், சருகுகளையும்கூட, மிதிக்கின்றோம். இரவில் சிலிர்த்த காற்றும், நம் தேகத்தில் படுகிறது. கந்தப்பன், அகவல் மகன், இலஞ்சிச் சாமியார் எல்லாருமே இதோ சதையும், ரத்தமும் கொண்ட மனிதர்களாக "ரவீந்திரனுடன்" இங்கேயே கூடவே இருக்கிறார்கள். "சந்திரிகா" கதையைப் படிக்கிறோம், கேட்கிறோம், கூடவே ஓடிப்போய் அனுபவிக்கிறோம். அல்லது அந்த இடங்களே நம்மை வந்து சூழ்ந்து கொள்கின்றன.

உண்மையில் கதை சொல்வது போலவே, நம் நாட்டு மூலிகைகளின் குணங்களையும் அற்புதமான சக்தியையும் உயர்வையும், நம் நாட்டு வைத்தியர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே உணர்ந்து ஆடம்பரமும் பிரசாரமும் இன்றி அவைகளால் குணப்படுத்தியதையும் நீங்கள் எழுதியிருப்பதைக் கண்டு வியக்கின்றேன். சர்ப்பகந்தியையும் நம் நாட்டு மூலிகை வைத்தியங்களையும் நீங்கள் எவ்வளவு தூரம் நன்றாக அறிந்து வைத்திருக்கிறீர்கள்! தவிர, அவற்றை எவ்வளவு நன்றாகக் கதை மூலமாக மக்களுக்கு அறிவூட்டுகிறீர்கள். இதைப் படித்து நம் ஜனங்கள், நம் தேசச் சரக்கையும் நம் முன்னோர்கள் கையாண்ட வைத்தியங்களையும் அறிய வேண்டும்.

தியாகராயநகர் அலமேலு




பாக் செய்யப்படாத வில்லைகளை வாங்குவதில் ஜாக்கிரதையாய் இருங்கள்!

பாக் செய்யப்படாத வில்லைகள் வயிற்றுக் கோளாறு செய்யும் அமிலப் பொருள்களை உண்டாக்கக்கூடியதால், புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை தூசியினின்றும் நீர்த்திவலைகளினின்றும் பாதுகாக்கும் பொருட்டுத் தனித்தனியாக சீல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் புதிய 'ஆஸ்ப்ரோ' அபாயமில்லாதது. இது இருதயத்தையோ, வயிற்றையோ பாதிக்காது. துர்ப்பழக்கம் ஏற்படுத்தக்கூடிய மருந்துகள் இதில் கிடையாது.

நவீன முறையில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட புதிய 'ஆஸ்ப்ரோ' துரிதமாக வேலை செய்கிறது. அதனால் தலைவலி, உடம்புவலி, ஜலதோஷம், ஜுரம் முதலியவைகளினின்றும் நிவாரணமளிக்க, சாப்பிட்ட மூன்று வினாடிகளில், அதனுடைய வேலையைத் துரிதமாக ஆரம்பிக்கிறது.

அபாயமில்லாத துரித நிவாரணம் உங்களுக்குக் கிடைக்கும் — புதிய 'ஆஸ்ப்ரோ' விஞல்



'ஆஸ்ப்ரோ' ஸ்லைட் துண்டுகளையே வாங்குங்கள்.

★ வயிற்றுக் கோளாறு உண்டாக்கும் அமிலப் பொருள்களிலிருந்து காப்பாற்றும்.

★ எப்பொழுதும், எந்த சமயத்திலும், எந்த இடத்திலும் எளிதாக உபயோகிக்க கையில் எடுத்துச் செல்லக்கூடியது.

★ சுலபமான, ஆரோக்யமுள்ள மூன்று வில்லைகளின் விலை இரண்டு அணாதான்.

278

கடைகளில் விற்கப்படும் எல்லா 'ஆஸ்ப்ரோ' வில்லைகளும் புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகளே.



அத்தியாயம் 28

கப்பல் பயணம்

இரண்டு மூன்று நாட்கள்வரை என் மனம் ரொம்பக் கலங்கிப் போய் இருந்தது. கடல் பிரயாணம் எனக்குப் புத்தம் புதிய அனுபவமானாலும் என்னால் அதை அனுபவிக்கவே முடியவில்லை. இந்துமதியின் பீதி நிறைந்த முகம் என்னை வட்டமிட்டுக் கொண்டே இருந்தது. ஏதோ தவறு செய்து விட்டது போன்ற உணர்ச்சி என்னைப் பற்றிக் கொண்டது. இரவில் என் படுக்கையில் படுத்ததும் நினைவுகள் குமுறிக் கொண்டு எழும். கண்களில் நீர் கசியும். உள்ளத்தில் கல்லை வைத்து விட்டது போலிருக்கும். வேதனை பொறுக்க முடியாமல் நான் புரண்டு கொண்டே இருப்பேன்.

கப்பல் மேல் தளத்தில் உட்கார்ந்து கொண்டு இந்துமதியுடன் கழித்த ஒவ்வொரு நாளையும் மனக் கண் முன்னால் கொண்டு வந்து திரும்ப அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

பம்பாயில் நடந்த விஷயங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக நினைவுக்கு வந்தன. பேராசிரியர் கோதண்டராமனின் அன்பும், தலைமைப் பேராசிரியருக்கு என்னிடமிருந்த நம்பிக்கையும் சிரத்தையும் ஞாபகத்துக்கு வந்தன. நண்பர்கள் எல்லாம் சூழ்ந்து கொண்டு பிரிவுபசாரம் கூறியது நினைவு வந்தது.

பாஸ் போர்ட்டுக்காக அலைந்தது, புதிய துணிமணிகள் தைத்தது இப்படி விதம் விதமான எண்ணங்கள் அலையலையாக எழும்பி வந்து உள்ளத்தில் மோதிக் கொண்டிருந்தன.

அன்னை சந்திரமணி திடீரென்று இறந்து போனது நினைவுக்கு வந்து உள்ளத்தைக் கனக்கச் செய்தது.

அதே சமயத்தில் வெகு நாட்களாக நான் ஆசைப்பட்டுக் கொண்டிருந்த கனவு நிறைவேறுவதைக் குறித்து ஆனந்தமும் உண்டாயிற்று. அந்த ஆசையை ஊட்டிய என் அன்னை இருந்து பார்க்கவில்லையே என்று துயரமும் உண்டாயிற்று.

கப்பலின் மேல் தளத்தில் உட்கார்ந்து கொண்டு நாலா பக்கமும் தூய்மையான நீல நிறமுடைய வானத்தையும் கடலையும் பார்க்கும் போது உண்டாகும் பரிசுத்தமான உணர்ச்சிக்கு உதாரணமே கூற முடியாது. இறைவனை நீல வண்ணமுடையவராக உருவகப்படுத்துவதிலுள்ள பெரிய உண்மை அப்போது தெரிய வரும்.

எஸ். எஸ். விக்டோரியா என் எண்ணங்கள் ஒன்றையும் தெரிந்துகொள்ளாமலேயே, சமுத்திர ஜலத்தைக் கிழித்துக் கொண்டு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

கப்பலில் எனக்காகக் கொடுக்கப்பட்டிருந்த அறையில், மூன்று பேர் இருந்தோம். வங்காளி நண்பர் அரவிந்தும், இன்னொரு ஆங்கிலோ இந்தியரும் என்னோடு இருந்தார்கள். ரகு வேறு அறையில் இருந்தான். ரகுவோடு இன்னும் இரண்டு இந்தியர்களும் இருந்தனர். அவர்களில் ஒருவர் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவர். மற்றவர் பம்பாயிலிருந்து வருபவர். என் வாழ்க்கையில்

முதன் முறையாக நான் இத்தனை விதமான மனிதர்களுடன் பழக நேரிட்டது. நமது தேசத்து மனிதர்களையே நாம் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோமே என்று அவமானமாக வேறு இருந்தது.

அதைத் தவிர, கப்பலில் ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரர்களும், போர்த்துகீசியரும் இருந்தனர். அரேபியா தேசத்தைச் சேர்ந்தவர் ஒருவரும் இருந்தார். அவர் போகும் போதும், வரும் போதும் எல்லோரும் அவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவருடைய உடை அவ்வளவு விநோதமாக இருந்தது.

பம்பாய்த் துறைமுகத்தில் கப்பல் புறப்பட்ட தினத்தன்று நடந்ததெல்லாம் மறுபடியும் நினைவுக்கு வந்தது. ரகுவின் தந்தை கண்ணீர் விட்டு அழுதார். அரவிந்தினுடைய சகோதரி விம்மினாள். மற்றவர்கள் விடை கொடுப்பதும் விடை பெறுவதுமாக இருந்தார்கள். கப்பல் புறப்பட்டதும் துறைமுகத்தில் நின்றிருந்தவர்கள் எல்லாரும் கைக் குட்டைகளை வீசினார்கள். கப்பலில் இருந்தவர்களும் வீசினார்கள். நானும் என்னுடைய கைக் குட்டையை எடுத்தேன். உடனே எனக்குப் பிரியா விடை கொடுக்க யாரும் வரவில்லை என்பது நினைவுக்கு வந்தது. அதுவரையில் உற்சாகமாக இருந்த எனக்கு ஏதோ தொண்டையை அடைத்தது. இந்துவின் நினைவு என் இதயம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது. உடனே இந்துவிடம் ஓடிச் சென்றுவிட வேண்டும் என்று நெஞ்சம் துடித்தது.

இந்துவின் ஞாபகம் வந்தபோது கூடத் தொண்டையை அடைத்தது. இந்துவுக்கு மூன்று கடிதங்கள் எழுதினேன். எதற்கும் பதில் இல்லை. நான் பம்பாயிலிருந்து புறப்பட்ட தினத்தன்று தங்கபாண்டியனிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் பண்ணையாரையும், இந்துமதியையும் போய்ப் பார்த்ததாகவும், இந்துவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லாமலிருந்து இப்போது நன்றாகத் தேவலை என்றும் எழுதியிருந்தான். அவனுடைய சமாதானம் எனக்குப் போதவே இல்லை. இந்துவால் எழுத முடியாவிட்டால் பண்ணையாராவது விவரமாக எழுதியிருக்கக் கூடாதா என்று வருத்தமாக இருந்தது.

ஒரு வேளை இந்துமதிக்கு நோய் ரொம்ப அதிகமாக இருக்கிறதோ என்னவோ? எனக்குத் தெரிவிக்கக் கூடாதென்று தங்கபாண்டியன் இப்படி எழுதியிருப்பானோ? என்றெல்லாம் கவலையாக இருந்தது. இந்த வேதனையினால் எனக்கு ரொம்ப இன்ப மனித்



இருக்க வேண்டிய பிரயாணம் உற்சாகமே இல்லாம லிருந்தது. படிப்பதற்குக் கூட ஓடவில்லை. இந்துவைப் பற்றிய மனோ ராஜ்யங்களிலேயே பொழுதைக் கழித்தேன். அவளைப் பற்றி எண்ணிக் கொண்டே இருக்கும் போது நேரம் போவதே தெரியாது. திடீரென்று நான் இருக்கும் இடமும் சீமை செல்வதும் நினைவுக்கு வரும் போது தலையை ஒரேயடியாகக் கனப்பது போலிருக்கும்.

கப்பலின் ஓரத்தில் நின்று, கப்பல் ஜலத்தைக் கிழித்துக் கொண்டு போகும் அற்புதத்தைப் பார்த்துக் கொண்டே மனோ ராஜ்யங்களில் ஆழ்ந்திருந்தேன். தண்ணீர் சுழன்று சுழன்று பொங்குவதையும், கருமையான நீரில் கோடிக்கணக்கான வெண் முத்துக்கள் சொரிவதுபோல நீர்த்திவலைகள் விழுந்து மறைவதையும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தக் காட்சி என் உடலைச் சிலிர்க்கச் செய்தது. அந்த அழகிய காட்சி எனக்கு இந்து கலகலவென்ற இனிமையான ஒலியுடன் சிரிப்பதை நினைவூட்டியது. பொங்கி வரும் நீரிலிருந்து இந்து சிரித்துக் கொண்டே எழும்பி வருவது போன்ற பிரமை ஒரு கணம் ஏற்பட்டது.

'நேர்ந்தத் திரைகடலில் நின்முகம் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகம் கண்டேன்
தீர்ந்த நுரையினிடை நின்முகம் கண்டேன்
சின்னக் குமிழிகளில் நின்முகம் கண்டேன்''

என்று வாய்விட்டுப் பாடினேன்.

பின்னாலிருந்து, ''அடேயப்பா! நீ இவ்வளவு ஜோராகப் பாடுகிறாயே! உனக்குப் பாடத் தெரியும் என்றே எனக்குத் தெரியாதே! இந்தக் கப்பலில் தமிழ்ப் பாட்டைக் கேட்பது என்ன இனிமையாக இருக்கிறது, தெரியுமா?'' என்று ரகுவின் குரல் ஒலித்தது.

நான் பொங்கி வரும் நுரையிலிருந்து கண்களை எடுக்காமலேயே, '' அதற்குள் உனக்கு இந்தக் கப்பலும், புதிய மனிதர்களும் அலுத்து விட்டதா ரகு? மூன்று நாட்களுக்குள் 'ஹோம்ஸிக்' ஆகிவிட்டால் மூன்று வருஷங்கள் நீ எப்படிச் சீமையில் இருக்கப் போகிறாய்?'' என்றேன்.

'' ரங்கதுரை! உண்மையைச்சொல்லு. நானா வீட்டுக்காக அழுகிறேன்? நீ தான் எப்போது பார்த்தாலும் முகத்தைத் தூக்கிக் கொண்டிருக்கிறாய். பம்பாயிலிருந்த ஒரு வாரமும் எவ்வளவு கலகலப்பாக இருந்தாய்? கப்பலில் ஏறியதும் உன் தோற்றமே மாறிப்போய் விட்டதே, ஏன் அப்படி?'' என்று ரகு என்னையே மடக்கினான்.

அவன் கூறுவதில் உண்மை இருந்தபடியால், என்னால் உடனே அவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

பிறகு அவனே தொடர்ந்து, ''என்ன விஷயம் என்று தான் சொல்லேன். ஏன் இப்படி



ஏங்குகிறாய்? உனக்குத்தான் கவலைப்படும்படி யாரும் இல்லையென்று சொன்னாயே!'' என்றான்.

நான் சிரித்தேன். ''உன்னைப் பற்றிக் கவலைப்பட உன் தந்தை இருக்கிறார். உன் மனைவி இருக்கிறாள். ஆகவே நீ கவலைப்படவேண்டியதில்லை. என்னைப் பற்றி நான்தானே கவலைப்பட்டுக் கொள்ள வேண்டும்? அதுதான் கவலையாக இருக்கிறது'' என்றேன்.

''துரை! நீ இப்படிச் சொன்னால் நான் ஏமாந்துவிடுவேன் என்று நினைத்தாயோ? எனக்கு நன்றாகத் தெரியும், நீ எதற்காகக் கவலைப்படுகிறாய் என்று. எனக்குக் கொஞ்சம் ஜோஸியமும் தெரியும். நீ இப்போது உன் காதலியை நினைத்துக் கவலைப்படுகிறாய்.''

''ஆகா! பிரமாதமான விஷயத்தைச் சொல்லி விட்டாய். அடாடா!''

''எனக்கு இன்னும் கூடத் தெரியும். அவள் பெயர் இந்துமதி.''

எனக்கு மூச்சே ஒரு கணம் நின்று விட்டது. இந்துவின் பெயரை இன்னொருவன் சொல்லிக் கேட்பதே எனக்கு மகிழ்ச்சியை அளித்தது.

''உனக்கு எப்படித் தெரியும்?''

''அதுதான் ஜோஸியம் தெரியும் என்று சொன்னேனே!''

''விளையாடாதே ரகு. எப்படித் தெரிந்தது என்று சொல்லேன்.''

''என்ன ஆவல்? அவளைப் பற்றிப் பேசினாலே இனிக்கிறதாக்கும். சோர்ந்து கிடந்த முகம் மலர்ந்து விட்டதே. சற்று முன்னால் உன்னைத் தேடிக் கொண்டு உன் அறைக்குச் சென்றேன். ஒரு தமிழ் சஞ்சிகை உன் படுக்கைமீது கிடந்தது. அதை எடுத்துப் புரட்டினேன். இங்கே வேறு யார் தமிழ் படிக்கிறார்கள், உன்னைத் தவிர! அதில் நீ பக்கத்துக்குப் பக்கம் 'இந்துமதி, இந்துமதி' என்று எழுதி வைத்திருக்கிறாய்.''

''ரொம்ப கெட்டிக்காரன் தான், போ!''

''சந்தேகமென்ன? நானும்தான் என் மனைவியை விட்டுப் பிரிந்து வந்திருக்கிறேன். உன்னைப் போல் அழுது கொண்டிருக்கிறேனா? எனக்கு மாத்திரம் இதயம் இல்லையா? என் மனைவி சின்னஞ் சிறு பெண். அவள் கண்ணீர் ததும்ப விடை கொடுத்தது என் உள்ளத்தையும் தான் உருக்கியது. அதற்காக உன்மாதிரி இருக்கிறேனா?''

அவன் சொல்வது நியாயமென்று எனக்குப் பட்டது. பாவம்! கல்யாணமாகி ஒரு வருடம் ஆவதற்குள்ளேயே பிரிந்து வந்திருக்கிறான். அவனுக்கு இல்லாத வருத்தம் எனக்கு மட்டும் என்ன? நான் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு விடுகிறேன் போலிருக்கிறது. இனிமேல் திடமாக இருக்க வேண்டும்.

''ரகு! நீ சொல்வது உண்மைதான். ஆனால் உனக்கும் எனக்கும் ஒரே ஒரு வித்தியாசம். உனக்கு விவாகமாகி விட்டது. உன் மனைவியைக் கவனித்துக் காப்பாற்ற உன் தந்தையும் இருக்கிறார். அவளுடைய பெற்றோரும் இருக்கிறார்கள். ஆனால் இந்துவுக்கு அவளுடைய வளர்ப்புத் தந்தை ஒருவர் தான் இருக்கிறார். வேறு யாருமே கிடையாது. அவரும் வயதானவர். நான் திரும்பிப் போக இன்னும் இரண்டரை வருஷங்கள் ஆகும். அதற்குள் என்னென்ன வெல்லாம் நேருமோ யார் கண்டது? அதிலும் அவள் உலகமே அறியாதவள். குழந்தையைப் போன்ற கபடமில்லாத உள்ளம் படைத்தவள்.''

''ஆமாம்! என் மனைவியைப் பற்றியும் எனக்கு அதே அபிப்பிராயம்தான். நீ கவலைப்படக் காரணமிருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நீ கவலைப்படுவதனால் பிரயோசனம் இல்லை. உற்சாகமாக இருந்து சீக்கிரம் படிப்பை முடித்துக் கொண்டு திரும்பி ஊருக்குப் போய்ச் சேருவதற்கு வழியைப் பார்'' என்று கூறினான்.

அன்று முதல் நானும் ரகுவும் அடிக்கடி கப்பல் முனையில் சந்தித்துப் பேசுவது வழக்கமாகி விட்டது. தமிழ் பாஷையே தெரியாதவர்கள் மத்தியில் வாழும்போதுதான் நம்முடைய தாய் மொழியைப் பேசுவதில் நமக்கு ஏற்படும் இன்பம் தெரிகிறது. நானும் அவனும், அமுதத் தமிழ் மொழியில் பேசிக் கொள்வதற்காகவே அங்கே சென்று நிற்போம். மேலும் இந்துமதியைப் பற்றிப் பேசும்போது எனக்கு ஒருவித இன்பம் ஏற்பட்டது.

அத்தியாயம் 29


புதிய சூழ்நிலை

ரகுவின் நட்புக் கிடைத்த பிறகு எனக்குக் கடல் பிரயாணத்தில் உற்சாகம் உண்டாகி விட்டது. அவனுக்கும் மற்ற இந்திய நண்பர்களுக்கும் பாரதி பாடல்களைப் பாடிக் காட்டினேன். நான் பாடுவதைக் கேட்ட சில கப்பல் மாலுமிகள் என்னை இன்னும் பாடச் சொன்னார்கள். இப்படியே



மேலும் மேலும்
விற்பனை பெருகிக் கொண்டே போகும் சோப்

நூதனமானது-பெருமைப்படுத்துக் கொள்ள வேண்டியதும் கூட. ஒவ்வொரு வருஷமும் மேலும் மேலும் ஜனங்கள் ஹமாம் சோப்பை உபயோகிக்கிறார்கள். (ஹமாம் சோப் உபயோகிப்போரின் எண்ணிக்கை ஒவ்வொரு வருஷமும் அதிகரித்துக் கொண்டே போகிறது.) இனிய மணம், நன்றாக நுரைத்தல், சிக்கனமான விலை, அதிக நாள் நீடித்தல், ஸ்நானத்திற்குப் பிறகு அற்புதமான மறுமலர்ச்சி. இந்தக் காரணங்களால் ஹமாம் சோப் ஜன ரஞ்சகமாய் உள்ளது. இன்னும் என்ன வேண்டும்?



மாட்சிமை கூடிய புதுமலர்ச்சி தருவது—

டாடாவின்

ஹமாம்

டாய்லட் சோப்

டாடா ஆயில் மில்ஸ்

இந்தியாவில், இந்திய மூலதனம், நிர்வாகத்தில் தயார் செய்வது

LSTA'S TOM-3-TAM

5,00,000
கதிர்கள்

பருத்தி நூல்கள்

நெ. 80 வரை
நூல்கள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை

மில்கள் : **மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்**

○●○

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான
சகலவிதமான நூல்கள்

○●○

விசேஷ ரகங்கள் :

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான
விசேஷ நூல்கள்-தையல் நூல்-முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன

○●○

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

போன் : 420 (4 லைன்)   **மதுரை**   தந்தி : "ஹார்வி"

ஜாம்-பெக்கினால் அந்த எக்ஸிமா, மண்டை சருமநோய், மற்றும் சிரங்கை ஒழித்து விடுங்கள்



Zam-Buk



ஜாம்-பெக் உலகிலேயே மகோன்னதமான சருமக்களிம்பு. ஜாம்-பெக் புண்ணை ஆற்றி அரிப்பை நிறுத்தும். ஜாம்-பெக் சருமத்தினுள் புகுந்து, நோயுற்ற தசை நார்களை சுத்தம் செய்து விரைவில் சருமத்திற்கு அழகும் தசைக்கு ஆரோக்கியமும் ஊட்டும். விஷகாயங்கள், கொப்புளங்கள் சீப்பிடித்த புண்கள் முதலியவற்றை குணப்படுத்துவதிலும், பூச்சிக்கடிகளை பரிசுத்தமாக்குவதிலும், கால்வலி மற்றும் ரணங்களை ஆற்றி சமனமூட்டுவதிலும், ஜாம் - பெக்கின் சக்தி அற்புதமானது. அநேக மதிப்பு வாய்ந்த ஔஷதப் பொருள்களடங்கிய ஜாம்-பெக்கில் க்ளோரோபில்லும் சேர்ந்திருப்பதால் அதன் சமன குணமும் தசைநார் புஷ்டி மற்றும் இதர பயன்களும் கிடைக்கின்றன.

மிருகக் கொழுப்பு சேரவில்லை என்பதற்கு உத்திரவாதம்.

ஜாம் - பெக்கினால் குணம் பெறுவீர்கள்.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

FZY-35 TAM.

மதராஸிற்கு லோகல் ஏஜண்டுகள் : தாதா & கம்பெனி, பார்க் டவுன்

அவர்களுடைய நட்பையும் சம்பாதித்துக் கொண்டேன்.

இன்னொரு முக்கியமான பயனும் அப்போது அடைந்தேன். ஒரு நாள் அரவிந்தோடு பேசிக் கொண்டிருந்த போது விளையாட்டாக, "ரவீந்திர நாத் டாகூரின் புத்தகங்களை நான் பிரியத்துடன் படித்திருக்கிறேன். ஆனால் மொழிபெயர்ப்பில் எப்படி அவற்றின் பூரண எழில் பிரகாசிக்கும்? நீ எனக்கு வங்காளி பாஷை கற்றுக் கொடுத்தால் அவற்றை அந்த பாஷையிலேயே படித்து ரஸிக்க முடியுமல்லவா?" என்று கூறினேன்.

அரவிந்துக்கு ஒரே உற்சாகம் உண்டாகி விட்டது. "நீ நல்ல ரஸிகனாக இருக்கிறாயே. எங்கள் பாஷை ரொம்ப இனிமையானது. பாஷைகளின் ஒலி இனிமையை ரொம்பப் பேர் உணர்ந்து பாராட்டுவதில்லை. ஏதோ தங்கள் எண்ணங்களை வெளியிடுவதற்கு ஒரு கருவியாகவே உபயோகப்படுத்துகிறார்கள். இவ்வளவு தூரம் நீ அதன் ஒலியின் இனிமையைப் பற்றி உணர்ந்திருப்பது எனக்கு வெகு சந்தோஷமாக இருக்கிறது. இப்போதே கற்றுக் கொடுக்கிறேனே" என்றான்.

உடனேயே அவனிடம் வங்காளி பாஷை கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். வெகு சீக்கிரத்தில் பேசக் கற்றுக் கொண்டேன். இங்கிலாந்தில் கூட அதைத் தொடர்ந்து படித்து வந்தேன்.

எங்களைக் கவனித்துக் கொள்வதற்காக இருந்த கப்பல் 'ஸ்டுவர்ட்' ரொம்ப நல்லவராக இருந்தார். மாணவர்களாகிய எங்களிடம்கூட மிக மரியாதையோடு பேசினார். கப்பலில் ஏறியது முதல் நான் நினைத்து நினைத்து அதிசயித்த விஷயம் அவர்கள் காட்டும் மரியாதைதான். அதிலும் மாணவர்கள் என்றால் தனியான அபிமானத்துடன் பழகுவார்கள். இங்கிலாந்து தேசத்தில் அனைவரும் மாணவர்களுக் கென்று விசேஷ சலுகை காட்டுகிறார்கள்.'

இந்த 'ஸ்டுவர்ட்' கோவாவைச் சேர்ந்தவர். ரொம்பத் தமாஷாகப் பேசிக் கொண்டிருப்பார். கப்பல் தலைவரிடம் சொல்லி எங்களை யெல்லாம் கப்பலில் எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று காட்டினார்.

"எல்லோரிடமும் நீங்கள் எப்படி இவ்வளவு சுமுகமாகப் பழகுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"இது என்ன கஷ்டம்? வேறு விதமாக எப்படிப் பழகுவது?"

"கப்பலில் நீங்கள் எத்தனையோ விதமான மனிதர்களைச் சந்தித்திருப்பீர்கள் அல்லவா?" என்று கேட்டேன்.

"அடேயப்பா! அதற்குக் கணக்கு வழக்கே இல்லை. திருடர்கள், மோசடிக்காரர்கள், வியாபாரிகள், பணக்காரர்கள், மகாராஜாக்கள், பிரபல நடிகர்கள், மாணவர்கள் இப்படிப் பலதரப்பட்ட மனிதர்களோடு பழகியிருக்கிறேன். அதிலும் பல தேசங்களைச் சேர்ந்தவர்கள், பல பாஷைகள் பேசுகிறவர்கள், பல மதத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கப்பலில் செல்வார்கள். நான் இருபத்தைந்து வருஷங்களாகக் கப்பலில் வேலை பார்க்கிறேன். எவ்வளவு விஷயம் தெரிந்து கொண்டிருக்கிறேன் தெரியுமா?" என்றார்.

"அடேயப்பா! அவ்வளவு வருஷங்களா? உங்களுக்குக் குழந்தைகள் மனைவி எவரும் இல்லையா? அவர்களைப் பிரிந்து இருப்பது உங்களுக்குக் கஷ்டமாக இருக்குமே?"

"இருக்கிறார்கள். ஆனால் என்ன செய்வது? எங்கள் ஜீவனம் இதன் மூலம் தானே நடைபெற்று வருகிறது. மாதக் கணக்காகப் பிரிந்திருக்கும்படி தான் நேருகிறது. ஆனால் திரும்ப நாங்கள் ஒன்று கூடும்போது என்ன ஆனந்தமாக இருக்கும் தெரியுமா?"

"நீங்கள் ஏன் இந்த வேலைக்கு வந்தீர்கள்? நாட்டிலேயே செய்யக் கூடியதான வேறு ஏதாவது வேலையை ஏன்





தேடிக் கொள்ளவில்லை?'' என்று ரகு அவரிடம் கேட்டான்.

''இந்த வேலையையும் யாராவது செய்துதானே ஆக வேண்டும்? எல்லோரும் பயந்து கொண்டிருந்தால் நீங்கள் எல்லோரும் எப்படி இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் பிரயாணம் செய்வீர்கள்?'' என்று கேட்டார் அவர்.

''ஆம்! சிலர் கப்பல் ஓட்டவும், விமானம் ஓட்டவும் செய்வதால்தானே உலகத்தில் எத்தனையோ பேர் பிரயாணம் செய்ய முடிகிறது? அவர்களுக்கு மனித சமுதாயம் எவ்வளவு கடமைப் பட்டிருக்கிறது, தெரியுமா?''

எஸ். எஸ். விக்டோரியாவில் ஒரு நல்ல வாசகசாலை இருந்தது. அதில் எனக்குப் பொழுது நன்றாகப்போயிற்று. இன்னொரு அறையில் ஒரு ''பியானோ'' வாத்தியம் இருந்தது. ஐரோப்பியர்கள் சிலர் அங்கு வந்து அதை வாசித்துக் கொண்டும், பாடிக் கொண்டும் பொழுது போக்கினார்கள்.

நான் அவர்களிடமெல்லாம் சீக்கிரம் பேசிப் பழக ஆரம்பித்து விட்டேன். அவர்களில் மிஸ்டர் பிரெடிரிக் என்னும் பிரஞ்சுக்காரர் என்னிடம் சீக்கிரத்தில் பழகி விட்டார். அவரிடமிருந்து பிரான்ஸ் தேசத்து நாகரிகங்களைப் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டேன்.

கப்பல் 'ஏடன்' துறைமுகத்தை அடைந்தது. அரேபியா தேசத்தை நான் உலகப் படத்தில் பார்த்திருக்கிறேனே தவிர அதன் மண்மீது காலை வைப்போம் என்று எண்ணிப் பார்த்ததேயில்லை. துறைமுகத்தை அடைவதற்கு முன்பே உலகப் பிரசித்தி பெற்ற அரபிக் கதைகளின் நினைவு வந்தது. விதவிதமான வர்ணப் பட்டுக்கள் உடுத்திய அரசர்களும், அரசிளங் குமரிகளும் உலவும் கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கி விட்டேன். உண்மையில் ஏடனை அடைந்ததும் சற்று ஏமாற்றமாகக் கூட இருந்தது.

அங்கே கண்ட ஒரு அதிசயம் எனக்கு ரொம்ப வியப்பளித்தது. நாங்கள் ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்காகக் கப்பலிலிருந்து படகுகளில் கரைக்குப் போனோம். படகில் போய்க் கொண்டிருந்தபோது சில சிறுவர்கள் மீன்களைப் போல் நீந்திக் கொண்டு படகினருகில் வந்தார்கள். எங்களுடன் வந்த அரேபியா தேசத்து மனிதர் ஏடனில் இறங்கினார். அவர் இன்னொரு படகில் வந்து கொண்டிருந்தார். அவர் சில நாணயங்

களைக் கடலில் போட்டார். தெள்ளத் தெளிந்த ஸ்படிகம் போன்ற நீரில் அவை அமிழ்வது நன்றாகத் தெரிந்தது. அந்தச் சிறுவர்கள், காசுகள் அடிவாரத்தை அடைவதற்குள் ஒரு முங்கு முங்கி அவைகளைப் பற்றிக் கொண்டார்கள். அவர்களுடைய வேகம் என்னைப் பிரமிக்கச் செய்தது. எனக்கு நீந்தவே தெரியாது. ஆகவே பிரமிப்பு ரொம்ப அதிகமாக இருந்தது!

ஏடன் நகரத்தில் அப்படியொன்றும் பிரமாதமாகப் பார்ப்பதற்கு விசேஷமான வஸ்து இல்லை. எங்கு பார்த்தாலும் ஒட்டகங்கள் நின்றன. அதுதான் அதிசயமாக இருந்தது. ஒட்டகத்தின் பாலை அங்கே உணவுப் பொருளாக உபயோகிக்கிறார்களென்று தெரிந்து கொண்டேன்.

ஏடனிலிருந்து கப்பல் புறப்பட்டு 'ஸூயஸ்' கால்வாயைத் தாண்டிச் சென்றது. மத்திய தரைக் கடலின் வழியாக நாங்கள் சென்ற போது பெரிய புயல் அடித்தது. அடேயப்பா! அதிலிருந்து பிழைப்போம் என்ற நம்பிக்கையையே நாங்களெல்லாரும் இழந்து விட்டோம். 'சுழற் காற்றில் அகப்பட்ட மரக்கலம் போல' என்று உவமையணி கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். அதை அனுபவித்த போதுதான் அந்தக் கஷ்டம் என்னவென்று புரிந்தது.

சுழல் காற்று சுழன்று சுழன்று அடிக்கும் போது சாதாரணமாகக் கப்பல்கள் பல மைல் தூரம் வழியை விட்டு விலகிச் சென்று விடக் கூடும். சுழல் காற்று அடிக்கும் போது, ஒரு சூன்யப் பிரதேசம் நடுவில் உண்டாகும். அதைச் சுழலின் 'கண்' என்று கூறுவார்கள். அதில் போய்க் கப்பல் சிக்கிக் கொண்டு விட்டால், நாளா பக்கமும் காற்று அடித்துக் கப்பலைச் சின்னா பின்னப்படுத்தி விடும். எங்கள் கப்பல் அந்தக் 'கண்ணில்' அகப்பட்டுக் கொண்டு விட்டதோ என்ற சந்தேகம் கப்பல் தலைவருக்கு ஏற்பட்டு விடவே எல்லோருக்கும் ரொம்பக் கவலையாகப் போய் விட்டது.

அந்தச் சமயத்தில் ரகுதான் ரொம்பக் கலங்கிப் போனான். அவனை நான் தேற்றிக் கொண்டிருந்தேன். என்னைப் பரிகாசம் செய்த ரகுதானா என்று நான் சந்தேகப்படும்படி அவன் அன்று நடந்து கொண்டான். தெய்வாதீனமாக நாங்கள் எப்படியோ அந்தக் கண்டத்திலிருந்து தப்பி பிரான்ஸ் தேசத்தி

துள்ள "மார்ஸெயில்ஸ்" என்ற துறை முகத்தை அடைந்தோம்.

மார்ஸெயில்ஸ் நகரத்தி லிருந்து உலகப் பிரசித்தி பெற்றதான 'பாரிஸ்' நகருக்குச் சென்றோம்.

பாரிஸ் நகரத்தில் ஒரே ஒரு நாள் தான் இருந்தோம். அந்த ஒரு நாளில் சுற்றிப் பார்த்துவிட்டு பாரிஸ் நகரம் தான் பூலோக சுவர்க்கம் என்று எண்ணினேன். பூலோக நரகமும் அந்தப் பிரும்மாண்டமான நகரத்தில் இருக்கிறது என்பது பின்னால் தெரிந்த போது மனத்துக்கு ரொம்ப வருத்த மாக இருந்தது.

அங்கிருந்து 'கலே' என்ற ஊருக்குச் சென்று கப்பலில் இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டினோம். டோவர் என்ற துறைமுகத்தில் இறங்கி நாங்களெல்லோரும் லண்டன் மாநகரத்தை அடைந்தோம்.

*   *   *

நான் சீமை சென்ற விவரங்களையெல்லாம் இதில் எழுத வேண்டியது அவசியமா என்ற எண்ணம் என் உள்ளத்தில் எழுந்தது. சுருக்கமாக முடித்துவிட நினைத்தேன். ஆனால் என் இந்துவுக்கு விவரமாக எழுதித் தருவதாக வாக்களித்திருப்பதால் கூடியவரை எல்லாச் சம்பவங்களையும் எழுதி விடுவதென்று தீர்மானித்தேன்.

எனக்கும் அந்த நாட்களைப் பற்றி எழுதுவதற்கு ரொம்ப உற்சாகமாக இருக்கிறது. அங்கு நடந்த எல்லாச் சம்பவங்களையும் எழுதும் போதுதான் இந்துவுக்கு எவ்வளவு தூரம் அவள் என் வாழ்க்கையில் ஒன்றிப் போயிருக்கிறாள் என்பது தெரிய வரும். எத்தனையோ வேலைகள், புதிய புதிய மனிதர்கள், புதிய தேசம், புதிய நாகரிகம், புதிய படிப்பு இவைகளுக்கு மத்தியில் இந்துவின் நினைவு ஒன்றுதான் என்னைப் பழைய ரங்கதுரையாகப் பாதுகாத்து வந்தது என்பதை அவள் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? என் நடை யுடை பாவனைகள், பாஷை எல்லாம் மாறிவிட்ட போதும் இந்து என் இதயத்தை மாற விடவே இல்லை. என் இதயம் மட்டும் இந்துவுக்காகவே வாழ்ந்து வந்தது. (தொடரும்)

கல்கத்தாவில் நாட்டிய நாடகங்கள்

தமிழகத்துப் பேரரசர்களால் போற்றி வளர்க்கப் பட்ட நாட்டியக் கலைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எதிர்ப்பிருந்தது. அதன் விளைவாக பரத கலை குடத்து விளக்காகி விட்டது! ரஸிகமணி டி. கே. ஸி. யும், பேராசிரியர் கல்கி அவர்களும் பேச்சிலும் எழுத்திலும் இக் கலையின் உயர்வை எடுத்து இயம்பி வந்தார்கள். ஸ்ரீமதி ருக்மணி தேவியார், ஓர் நல்லாசிரியரைத் தேடி, தாமே அக் கலையைப் பயின்று பல மேடைகளில் நடனமாடி பரத கலைக்குப் படித்த மக்களிடையே புது அந்தஸ்தை உண்டாக்கித் தந்தார்.

அதைத் தொடர்ந்து கலா க்ஷேத்ரா என்ற கலைக்கூடத்தைத் தோற்றுவித்து சங்கீதம் நாட்டியம் முதலிய அருங்கலைகளை மாணவ மாணவிகளுக்குப் பயில்வித்து வருகிறார். பல பிரபல சங்கீத வித்வான்களின் உதவியைக் கொண்டும், கலா க்ஷேத்ரா மாணவ மாணவிகளைக் கொண்டும் குற்றாலக் குறவஞ்சி, குமார சம்பவம், ராமாயணம் முதலிய நிருத்ய நாடகங்களைத் தயாரித்துப் பல மேடைகளில் மிக அருமையாக நடித்துப் பல ரஸிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறார். சென்னைவாசிகள் இந்த அருமையான நிகழ்ச்சிகளைப் பன்முறை பார்த்துப் பெரிதும் ரஸித்திருக்கின்றனர்.



இத்தகைய அரிய வாய்ப்பு கல்கத்தாவாசிகளுக்குபெப்ருவரி 1ம் தேதி முதல் 9ம் தேதி வரை அளிக்க ஸ்ரீமதி ருக்மணி தேவியார் தீர்மானித்திருப்பதை அறிந்து மகிழ்கிறோம். கல்கத்தாவில் நியூ எம்பையர் தியேட்டரில் நடக்கும் ஸ்ரீமதி ருக்மணி தேவியாரின் பரத நாட்டியத்தையும் நிருத்ய நாடகங்களையும் கல்கத்தா வாழ் தமிழர்களும், மற்றவர்களும் ஏராளமாகப் பார்த்து ரஸித்து மகிழ்வார்கள் என்று நம்புகிறோம்.

NEW HAS A NEW MEANING IN THE


Plymouth '55

BELVEDERE 4-DOOR SEDAN

The car with the Forward Look

It's long, low and elegant – at least 10 inches longer front to back, at least 2 inches lower. The swept-back, wrap around "new horizon" windshield gives a wide view of the road.

For the tubeless tyres, fitted to your new Plymouth as standard equipment, you pay no extra charge.



IT'S LONGER
IT'S LOWER
IT'S WIDER

PROGRESSIVELY MANUFACTURED BY

THE PREMIER AUTOMOBILES LIMITED

Agra Road, Kurla, Bombay.

SISTA'S PAL-216

டீலர்கள் :

மெஸர்ஸ் சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட், மவுண்ட் ரோடு, மதராஸ்

மெஸர்ஸ் டி. வி. சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ், லிமிடெட், மேல வெளி வீதி, மதுரை

வினைப் பயன்

ரா. நா.

பிரிட்டிஷார் வியாபார நிமித்தம் இந்தியாவுக்கு வந்த சமயம் நமது நாட்டில் டாக்கா மஸ்லின் தலைதூக்கி நின்றது. சாய நெசவில் கனவு உலகத்தைச் சிருஷ்டிக்கும் திறமைவாய்ந்தவர்கள் இருந்தனர். இந்த நாட்டுத் துணிகள் சிறந்து விளங்கினால் லங்காஷயர் துணி வியாபாரம் தலைத் தோங்க முடியாது என்று கருதி நமது நூல் நூற்பவர்களின் கட்டை விரல்களை வெட்டி விட்டனர் என்று சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர்.

வினைப்பயன் என்பது தனிப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி சமூகங்களையும் பாதிக்கிறது என்பதற்கு இன்றைய லங்காஷயர் துணி ஆலைத் தொழிலின் பரிதாப நிலையே போதிய அத்தாட்சியாகும். அவர்கள் கஷ்டப்படுவதைப் பார்த்து நாம் ஆனந்தப் படவில்லை. ஆனந்தப்படவும் கூடாது. ஆனால் ஆண்டவன் ஆட்சிபுரிகிறான் என்று நம்புபவர்களுக்கு, வினைப்பயன் விடாது பிடித்துக் கொள்ளும் என்று காட்டுவதற்கே லங்காஷயர் நிலைபற்றியும், அதற்கான பரிகாரத்தைப் பற்றியும், ஜான்புல் எனும் பிரபல ஆங்கில வாரப்பத்திரிகையில் பின்வருமாறு தலையங்கம் எழுதியிருப்பதை மொழிபெயர்த்துத் தருகிறேன் :—

பிரிட்டனில் இன்று 5 லட்சம் பேருக்கு வேலை இருக்கிறது. ஆனால் அவைகளைச் செய்ய ஆள் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் வேலை பூரணமாக உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் சமூகத்தில் ஒரு இடத்தில் துயரக்கறை படிந்திருக்கிறது - அதுவும் பருத்தி நூல் தொழிலில்.

பருத்தி ராஜாவின் நாடாகிய லங்காஷயரின் நிலையைத்தான் குறிப்பிடுகிறோம். இந்தத் துயருக்குக் காரணமானவர்கள் ஜப்பானும் இந்தியாவும். அந்த நாடுகளில் வேலைக்கு ஆட்கள் சொற்பச் செலவில் கிடைப்பதால் லங்காஷயரை விடக் குறைவான விலையில் துணி உற்பத்தி செய்வது அவர்களுக்குச் சாத்தியமாயிருக்கிறது.

இந்தத் தகாத போட்டியினால் உலகச் சந்தைகளில் நெருக்கடி ஏற்படுகிறது என்று மட்டும் நாம் கூறவில்லை. குறைந்த விலைத் துணிகள் தினம் ஒன்றுக்கு 15 லட்சம் கெஜம் பிரிட்டனில் வந்து இறங்குகின்றன. லங்காஷயர் துணி உள்நாட்டில் விற்பனையாவதைக் கூட இந்தப் போட்டி பாதிக்கிறது.

இந்தப் போட்டி 1952-ல் கடுமையான நிலைக்கு வந்தது. இன்று அந்தப் போட்டி நம் கழுத்தை நெரிக்கிறது. இந்த வருஷத்தில் மட்டும் 50 ஆலைகள் மூடப்பட்டு விட்டன. 22,000 தொழிலாளர்கள் பருத்தி ஆலைகளை விட்டு வெளியேறி விட்டனர். மேலும் ஏழு ஆலைகள் தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைத்து விட்டன. பருத்தி நூல் ஆலைகளில் கூலி குறைந்து வருவதால் அதை அனுசரித்து நடந்து வரும் மற்றத் தொழில்களும் நசித்து வருகின்றன.

லங்காஷயரின் நாடி நம் கண் முன் இறங்கி வருகிறது.

நூல் நூற்பவர்கள் சங்க முன்னணித் தலைவரான சார்ள்ஸ் ஷோபீல்டு தொழிலாளர் சார்பாக எச்சரிக்கை செய்கிறார். "துணி ஆலைத் தொழிலாளர் வெளியேற்றம் நீடிக்குமானால் நாட்டின் துணித் தேவையைக் கூட இறக்குமதியின் மூலமே பூர்த்தி செய்ய வேண்டி வரும்."

மில் முதலாளிகள் சார்பில் லங்காஷயர் பிராந்திய அபிவிருத்தி சங்கத் தலைவர் ஸர் தாமஸ் பார்லோ கூறுகிறார் :

"லங்காஷயரில் புதுத் தொழில்கள் தொடங்குவதுதான் நம் பிரச்னை. ஆனால் வியாபார ஸ்தலங்கள் எல்லாம் தேம்ஸ் நதியை நோக்கிச் செல்கின்றன. நமக்குப் பெரிய விபத்து வரக் காத்திருக்கிறது."

1930-ல் ஒரே தொழிலை நம்பி வாழ்ந்த நகரங்கள் நசிந்தன. அதே நிலை இன்று பருத்தித் தொழிலுக்கு ஏற்படும் என்று தோன்றுகிறது.

ஆனால் லங்காஷயர் மீள்வதற்கான வழியைச் சர்க்கார் வகுக்கலாம். லங்காஷயருக்கு உதவ ஜான்புல் மூன்று முறைகளைச் சிபார்சு செய்கிறது. முதல் இரண்டும் அவர்கள் நாட்டைப் பொறுத்தவை. மூன்றாவது நமது துணித் தொழிலைப் பாதிக்கும். அந்த யோசனையை ஜான்புல்லின் வாசகத்திலேயே படியுங்கள்.

"மூன்றாவதும், மிக முக்கியமானதுமான யோசனை மலிவான கீழ்நாட்டுத் துணிகள் நம் நாட்டில் வந்து குவியாமல் தடுப்பது. இப்படித் தடுப்பதால் 'சர்வதேச, காமன் வெல்த் சிக்கல்கள்' ஏற்படும் என்று வாதாடுவதில் பயனில்லை. நமது மைக்கின்களுக்கெதிராக அமெரிக்கா வரி விதிக்கத் தயாராகவில்லை. அதுவும் கேவலம் 14,000 அமெரிக்கத் தொழிலாளர்களைக் காப்பாற்ற. ஒரு பெரிய கவுண்டி (லங்காஷயர்) யைக் காப்பாற்ற நமது நெஞ்சைக் கல்லாக்கிக் கொள்ள வேண்டும்.

அர்த்தபுஷ்டியான இவ் வாக்கியங்களின் பொருளை நம் நாட்டு அரசியல்வாதிகளும் மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.



சென்ற வாரத் தொடர்ச்சி

"பார்வதி, எல்லாம் சாவதானமாய்ப் பேசலாம். இங்கே அப்பா வீட்டில்தானே தங்கியிருக்கிறாய்! உன் கணவர் எங்கே! கணவர், குழந்தைகள் எல்லாம் சௌக்கியமா!" என்றாள் அம்பிகா.

"அப்பா வீட்டில்தான் இருக்கிறேன். அவருக்குச் சில காரியங்களால் வர முடியவில்லை. அம்பிகா! 'முதலில் பெண் பிறந்தால் என் பெயரை யிடு!' என்று சொன்னாயே, ஞாபகம் இருக்கிறதா! உன் பெயரைத்தான் வைத்தேன். அம்பிகா, அம்பிகா என்று உன் பெயர் எப்போதும் எங்கள் வாயில் முழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் என் கடிதங்களுக்குக் கூட நீ பதில் போடவில்லை."

"எல்லாம் சாவதானமாய்ப் பேசலாம். இங்கு இருக்கிற வரையில் என்னுடன் தங்கி விட்டுப் போ!" என்று சொன்னாள்.

* * *

சாந்தோமில் கடற்கரை அருகில் உள்ளது, அவள் இப்போது வசித்துக் கொண்டிருந்த அழகிய பங்களா. தூய வெண்ணிறம் உடைய தாய் அகன்றதொரு தோட்டத்தின் மத்தியில் அமைதி தழுவ நின்று கொண்டிருந்தது. அசோகம் என்று பெயரிடப்பட்டிருந்த அது. தோட்டம் முழுவதும் பூமரங்கள் வைத்துப் பயிர் செய்யப்பட்டிருந்தன. மாலை மலர்களின் நறுமணம் கம்மென்று வீசியது.

நான் போய்ச் சேர்ந்த சமயம் மாலை நன்றாக இருட்டிவிட்டது. என்னை வரவேற்று உபசரிக்கப் பெரிய ஏற்பாடுகள் எல்லாம் செய்திருந்தாள் அம்பிகா. வீட்டு மத்தியில் ஒரு பெரிய ஹால். அதை அடுத்துள்ள ஒரு அறையின் கதவைத் திறந்து, "இதுதான் நான் படிக்கும் அறை" என்றாள்.

கீழ் சுவர் நடுவில் புத்த பெருமானின் வெண் சிலை சாந்தியைப் பொழிந்து கொண்டிருந்த பெருமையை என்னென்பது! நாற்புறமும் கண்ணாடி பதித்த அழகிய அலமாரிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்கள்.

அந்த ஏற்பாடுகள் அனைத்தும், சூழ் நிலையும் பேரமைதியும் எதையோ ஒன்றை எனக்குச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தன.

இப்போதுதான் அம்பிகாவின் அருமைத் தாயாரும் தந்தையாரும் காலமாகி விட்டதை அறிந்தேன். அவளுக்குத் துணையாக இரு வேலைக்காரர்களும் ஒரு சமையல்காரியும் தவிர வேறு யாரும் இல்லை. வேலைக்காரர் இருவரும் தம்பதிகள். அவர்கள் தோட்டத்தின் மூலையில் இருந்த ஒரு சிறு வீட்டில் குடியிருந்தார்கள்.

அப்போதே அவளிடம் என்ன வெல்லாமோ கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எனக்கு ஆசை. கல்லூரி நாட்களில் நடந்த வேடிக்கை விசித்திரமான சங்கதிகளை ஞாபக மூட்டிக் கொண்டிருந்தேன்.

"அம்பிகா, உனக்கு ஞாபகமிருக்கிறதா, கடைசி வருஷ ஆரம்பத்தில் ஒரு விவாதம் நடந்ததே "காதல் மணம் வேண்டும்" "காதல் மணம் வேண்டாம்" என்று! அதில் காதல் மணம் வேண்டும் என்ற பெண்கள் கட்சிக்கு நீ தலைமை நின்று பேசினாயே, அதைப்போல வேடிக்கையான நிகழ்ச்சி வேறு எங்கேயாவது நடந்திருக்குமா! மாணவர்கள் முதலில் எவ்வளவு ஆரவாரம் செய்தார்கள்! பின்னால் நீ பேச ஆரம்பித்ததும் எப்படி அடங்கி விட்டார்கள்! ஞாபகமில்லை!"

"ஞாபகமில்லையே!" என்றாள் குறும்பாக.

"என்ன! ஞாபகமில்லை என்றா சொல்லுகிறாய்! நான் எதை மறந்தாலும் அதை மறக்க முடியாது."

"உன்னால் அதை எப்படி மறக்க முடியும்! அந்த விவாதத்துக்குத் தலைமை வகித்த மாணவத் தலைவரைத்தான் உன் வாழ்க்கைத் தலைவராக வலை போட்டுப் பிடித்து விட்டாயே!"

"வாஸ்தவம், அம்பிகா. ஆனால் அதற்காக அது என் ஞாபகத்தில் பதியவில்லை. என் அம்பிகா அன்று பேசிய ஆவேசமான பேச்சை என்னால் மறக்க முடியாது என்பதற்குச் சொல்ல வந்தேன்."

"ஆமாம். உன் கணவரைப் பற்றி நீ ஒன்றுமே சொல்லவில்லையே!"

"கிராமம் அவருக்கு ரொம்பப் பிடித்து விட்டது. விவசாயத்தில் புதுப்புது முறைகளைப் பரீட்சை செய்து கொண்டிருக்கிறார். கிராமத்தில் புதிதாக ஒரு உயர்தரப் பாடசாலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு இவர்தான் தலைவர். கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி சங்கம் ஒன்று நிறுவியிருக்கிறார்கள். அதன் காரியதரிசிப் பதவியையும் இவரே ஏற்றுக் கொண்டிருக்கிறார்."

"நீ!" என்று கேட்டாள் அம்பிகா.

"நான் நல்ல வேலையாக இப்படிப்பட்டவைகளில் ஈடுபடாமல்வந்த விருந்தினரைக் கணவர் முகங்கோணாமல் உபசரித்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"ஆகா, அப்படியல்லவா இருக்க வேண்டும் மனை அரசி. நீ படித்ததெல்லாம் ஏட்டைக் கட்டி வைத்து விட்டாயா!"

"நான் படித்தது நாவல்கள்; பத்திரிகைகள். படிக்கத்தான் பிரயோசனப்படுகிறது!"

"ஏன், பட்டண வாசம் பிடிக்கவில்லையா!"

"பட்டண வாசம் பிடிக்கவில்லை என்று சொல்லமுடியாது. ஆனால் அவர் மனம் கிராம வாழ்க்கையில் ஈடுபட்ட பிறகு என் மனத்தையும் அந்தப் போக்கிலேயே திருப்பிக்கொண்டு விட்டேன், அம்பிகா!"

"அதுதான் உத்தம மனைவிக்கு அழகு. மனை அறம் வழுவாமல் சிறந்த வாழ்க்கைத் துணை உத்தியோகம் செய்து வருகிறாயாக்கும்."

அவளுடைய இலக்கணம் வழுவாத உரையாடலைக் கேட்டு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. கல கலவென்று சிரித்து விட்டேன். பின்பு, "அம்பிகா! உண்மையில் வாழ்க்கையில் எனக்கு ஏமாற்றம் ஏற்படவில்லை. அவர் கிடைப்பதற்கு நான் போன ஜன்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்" என்றேன்.

"பார்வதி, இதைக் கேட்க என் மனம் குளிர்கிறது" என்றாள்.

சாப்பாடு முடிந்தது.

இருவரும் மொட்டை மாடிக்குப் போனோம். கடல் அலை ஒலி கீதம் இசைப்பதுபோல மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அங்கு போட்டிருந்த இரு கட்டில்களில் அமர்ந்தோம்.

"அம்பிகா, என் வரலாறு முழுவதையும் கேட்டுவிட்டாய். உன் கதை!" என்றேன்.

"ஆம். அதைச் சாவதானமாகத் தான் சொல்ல வேண்டும்" என்றாள்.

நான் எதுவும் பதில் பேசவில்லை. ஆனால் அவள் சொல்லப் போவதைக் கேட்க ஆவலோடு அமர்ந்திருந்தேன்.

அம்பிகா சுற்றி வளைக்காமல் பேசலானாள்.

"பார்வதி! அந்தக் காலத்தில் உயிருக்கு உயிராய்ப் பழகினோம். ஒரு தாய் வயிற்றுச் சகோதரிகள் கூட அவ்வாறு பழகி இருக்க மாட்டார்கள். நமக்குள் ஒளிவு மறைவு கிடையாது. உன் உள்ளத்தில் தோன்றியதெல்லாம் என்னிடம் சொல்லுவாய். சிரிக்க வேண்டிய தற்குச் சிரிப்போம். சிந்திக்க வேண்டியதைச் சிந்திப்போம். ஆனாலும் சில விஷயங்களை உன்னிடம் நான் சொல்லச் சரியான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அதற்காக நீ என்னை மனப் பூர்வமாக மன்னிக்க வேண்டும்......" என்று சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

மேலும் அவள் சொல்லப் போவதை ஆவலோடு கேட்க இருந்தேனே அல்லாமல் அதற்குப் பதில் ஏதுவும் நான் சொல்ல விரும்பவில்லை, அவசியமும் இல்லை.


"என்ன பேசாமல் இருக்கிறாய், பார்வதி!"

"ஏன், அம்பிகா! பெரிய கதை சொல்லப் போகிறாயா!" என்று கேட்டேன்.

"பெரிய கதைதான். உனக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கப் போகிறது. நீ உன்னுடைய மணப் பத்திரிகையை என்னிடம் கொடுத்து விட்டு 'முதல் அழைப்பு உனக்குக் கொடுத்திருக்கிறேன். அதைப் போல உன் கல்யாணத்துக்கு முதல் அழைப்பு எனக்குத்தான் நீ அனுப்ப வேண்டும்' என்று சொன்னாயே, ஞாபகம் இருக்கிறதா!" என்றாள்.

"ஆம், சொன்னேன்! நன்றாய் ஞாபகம் இருக்கிறது" என்று சொன்னேன்.

"'எனக்குக் கல்யாணம் இனி மேல் இல்லை, பார்வதி!' என்று





படித்துப் பட்டம் பெற்ற ஒருவர் விவசாயத் துறையில் ஈடுபட்டு வருகிறார் என்பது வியக்கத் தக்க விஷயம். அதிலும், சட்டம் படித்த திரு எம். வி. சேதுராய் மதுரை ஜில்லாவிலுள்ள மார்க்கயம்கோட்டையில் விஞ்ஞான முறைகளைக் கையாண்டு அதிக நெல் சாகுபடிப் போட்டியில் மாகாணத்திலேயே வெற்றி பெற்றிருக்கிறார் என்றால் அவரைப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டியதுதானே. சென்னை மாகாண விவசாய மந்திரி திரு எம். பக்தவத்சலம் வெற்றி பெற்ற திரு எம். வி. சேதுராய் அவர்களுக்குப் பரிசு வழங்கும் காட்சியை மேலே உள்ள படத்தில் காணலாம்.

உன்னிடம் அப்போதே உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் ஏனோ அதை உன்னிடம் சொல்ல விரும்பவில்லை. அந்தச் சமயத்தில் அதை உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று நினைத்திருப்பேன்."

"ஏனெனில் எனக்கு முன்னமேயே — எனக்குச் சரியாக விவரம் தெரிவதற்கு முன்னாலேயே கல்யாணமாகிக் கைம் பெண்ணாகவும் ஆகி விட்டேன்."

என் மனம் துணுக்குற்றது. என்னால் அதை நம்பவே முடியவில்லை.

அது நாள் வரை அப்படியும் இருக்குமோ என்ற ஐயப்பாட்டுக்கு என் மனத்தில் கொஞ்சம் கூட இடமில்லாமல் இருந்தது, அவள் நடையுடை பாவனை எல்லாம். என் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அம்பிகா மேற்கொண்டு சொல்லப் போவதைக் கேட்கலானேன்.

"அதனாலேயே என் தந்தை என்னைப் படிக்க வைத்தார். படிப்பிலேயே என் மனம் எப்போதும் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது தந்தையின் எண்ணம். படித்து ஒரு சிறந்த ஆசிரியர் பதவிக்கு நான் செல்ல வேண்டும் என்பது அவருடைய கனவு. ஆனால் அம்மாவுக்கு இது பிடிக்கவே இல்லை.

"என் நிலை இப்படி ஆகிவிட்டதே என்று உள்ளுக்குள் உருகிக் கொண்டிருந்தாள் அன்னை. நான் விதம் விதமாய் அலங்காரம் செய்து கொள்வதும் பொட்டிட்டுக் கொள்வதும் மலர் சூடிக் கொள்வதும் அவளுக்கு அடியோடு பிடிக்க வில்லை. எதை அவள் மனம் ஒப்புக் கொண்டாலும் நான் பொட்டிட்டுக் கொள்வதை அடியோடு விரும்பவில்லை.

"'வேண்டாம், அம்மா. உனக்கு நான் பொட்டிட்டு அழகு பார்க்கக் கடவுளுக்கு இஷ்டமில்லை' என்று மெதுவாகச் சொல்லுவாள். அவள் கண்களில் நீர் படர்ந்து ததும்பும்.

"தமையன்மார் இருவருக்கும் கல்யாணமாகி அவர்கள் வேறாகப் போய் விட்டார்கள். பெற்றோர்களுக்கு நான்தான் துணை. அவர்கள் மனத்தில் என்ன எண்ணம் ஊடாடிக் கொண்டிருந்தது என்பதைப் படிப்படியாக நான் அறிந்து கொண்டேன். தங்கள் இமைக்குள் வைத்துக் காப்பாற்றுவது போல என்னைப் பேணிக்காக்கும் பெற்றோரின் மனம் எவ்வகையிலும் புண்படாத வாறு நடந்து கொள்வதென்று உறுதி கொண்டேன்.

"இந்தச் சமயத்தில்தான் அந்தக் கடிதம் என் கையில் கிடைத்தது. முக்கியமாக, வேடிக்கையான ஒரு விவாதத்தில் கலந்து கொண்டு பேசினேனே, அதன் விளைவு என்றே இதைச் சொல்லலாம்.

"என்னை அவர் சந்தித்துப் பேச விரும்பினார். அவர் நம்முடன் படித்தவர். என் உண்மை நிலையை அறியாதவர். அவருடைய அன்பு களங்கம் இல்லாதது. ஊசலாடியது என் மனம். அவரைச் சந்தித்துப் பேசவேண்டும் என்ற எண்ணத்தின் முளை என் மனத்தில் வேர்விட்டது. அதை அந்தக்ஷணமே கிள்ளி எறிந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்ய எனக்குத் துணிவு ஏற்படவில்லை. என் பொல்லாத மனம் அவரைச் சந்தித்துப் பேசத் தீராத ஆசை கொண்டது.


"நாங்கள் சந்தித்தோம். ஆனால் காதல் பேச்சு பேசவில்லை. இலக்கியத்தைப் பற்றிப் பேசினோம். நான் அவர் வாழ்க்கைத் துணையாகிவிடச் சம்மதித்து விட்டேன் என்று அவர் முடிவு செய்து விட்டார்.

"பரீட்சைக்குப் பின்னர் மேல் நாடுகளுக்குச் சென்று இன்னும் சில பட்டங்கள் பெற்றுத் திரும்ப விரும்பினார். அவர் வீடு எப்படி அமைய வேண்டும், வாழ்க்கை எந்தத் துறையில் செல்ல வேண்டும், சமூகத்துக்கு எந்த வழியில் உதவியாக இருக்க வேண்டும் என்ற அவரது லட்சியங்களை எல்லாம் என்னிடம் அப்போதுக்கு அப்போது சொல்லுவார்.

"அவருடைய தலைசிறந்த ஒழுக்கமே என்னை அதிகமாகக் கவர்ந்து விட்டது. அவர் எப்பொழுதும் என் அருகிலேயே இருக்க வேண்டும் என்ற பித்து எனக்குப் பிடித்து விட்டது.

"இந்தப் பித்து ஒரு நாள் நானே அவரை எங்கள் வீட்டுக்கு வரும்படி அழைக்கச் செய்தது. அம்மா இதைச் சம்மதிப்பாளா, அப்பா இதை விரும்புவாரா என்பதைப் பற்றி நான் கொஞ்சமும் எண்ணிப் பார்க்கவில்லை. என் மன மயக்கத்தில் எதுவும் தோன்றவில்லை.

"அவர் வந்த போது சில அருமையான புத்தகங்கள் பரிசாக வாங்கி வந்தார். அவைகளைப் பற்றி அவருடைய அபிப்பிராயங்கள். அவைகள் ஏன் நான் கட்டாயம் படிக்க



வருஷத்திற்கு வருஷம், முன்னைவிட, மேலும் மேலும்

அதிகப் படியான மோட்டார்காருடையவர்கள்

ஸ்டாண்டர்ட்

பாட்டரிகளையே வாங்குகின்றனர்

ஏன் என்றால் . . .

அவையாவும் நவீனமுறையில், சிறந்த விஞ்ஞான நிபுணரின் கட்டுப்பாட்டில் ஒரு நல்ல பாட்டரிக்கு இன்றியமையாத தேவைக்குகந்தபடி எல்லா பாகங்களையும்கொண்டு அமைக்கப்படுகின்றன. நாங்கள் அமோகமான அளவு பாட்டரி தயாரிப்பு செய்வதால் எங்கள் அமைப்புகளை இன்றைய தேவைக்குகந்தபடி வைத்திருக்க இயலுகின்றது.

சமீபகாலத்து—தொழில் நுணுக்கம்

உலகிலேயே சிறந்த அநுபவம் வாய்ந்த பாட்டரி தயாரிப்பாளர்களின் முன்னணியில் நிற்கும் ஸ்வீடன் தேசத்து ட்யூடர்ஸ் அவர்களுடன் நாங்கள் 'டெக்னிகல்' தொடர்பு கொண்டிருப்பதால் அவர்களின் தொழில் நுணுக்கங்களையும், சொந்த 'பேடண்டு'களையும் நாங்கள் உபயோகிக்க முடிகிறது. நீங்கள் வாங்கும் எங்களின் ஒவ்வொரு பாட்டரியும் எங்களிருவர்களின் கூட்டு அநுபவத்தின் சின்னம் என்று கூறுவது மிகையல்ல. நியாயமான விலையில், நாடெங்கும் இவை விற்பனை, சர்வீஸ், செய்யப்படுகின்றன.

பற்பலவிதமான கார்கள் மற்றும் டிரக்குகளில் முதல் ஆரம்பத்தில் அமைத்தவை பெரும்பாலும் ஸ்டாண்டர்ட் பாட்டரிகளே.



ஸ்டாண்டர்ட் பாட்டரீஸ் லிமிடெட்
43, போர்பெஸ் ஸ்டிரீட், போர்ட், பம்பாய் 1

STB. 2.2

இந்தியாவில் லெட் - ஆஸிட் பாட்டரிகள் தயாரிப்பவர்களில் **மிகப் பெரிய** சுதேசி கம்பெனி

வேண்டுமென்ற காரணங்கள், இப்படிப்பட்ட இலக்கிய சம்பந்தமான உரையாடல்களில் அன்று நேரம் போனது கூடத் தெரியவில்லை.

"என் நிலையையும் அம்மாவின் மன நிலையும் நான் அறிந்திருந்தும் என்னையும் அவரையும் சேர்த்தே எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருந்தது என் மனம்.

"ஒரு நாள் நான் மாடிப்படி ஏறிக் கொண்டிருந்தபோது அம்மாவுடன் அப்பா என்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது என் காதுகளில் விழுந்தது.

'அந்தப் பங்களா விஷயம் முடிந்தது. அம்பிகா பேருக்கே பத்திரம் எழுதத் தீர்மானித்து விட்டேன்' என்றார் அப்பா.

'அம்பிகா பேருக்கே எழுதுவதுதான் நல்லது. அது இருக்கட்டும். யார் அந்தப் பையன் அடிக்கடி இங்கே வந்து கொண்டிருப்பது!'



இது விளம்பர யுகம். இந்த யுகத்திலே விளம்பரத்தில் கலையம்சமும் நுட்பமாகச் சேர்த்து விடப்படுகிறது. 'மக்ளீன்ஸ்' பற்பசை தயாரிக்கும் க்ரூப் லபோரேடரீஸ் ஸ்தாபனத்தார் மக்ளீன்ஸ் பற்பசைக் குழாய் மாதிரியே ஒரு விளம்பர மோட்டார் நிர்மாணித்துத் தமிழ் நாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்த வண்டியைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பு முன் மேற்படி கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ ஏ. பி. காடன், பம்பாயில் பத்திரிகை நிருபர்களுக்கு அறிமுகப்படுத்தினர்.

'அம்பிகாவின் வகுப்பில் படிக்கும் பையன். ஏன் என்ன சமாசாரம் !'

'எனக்கு அதெல்லாம் பிடிக்காது என்று உங்களுக்குத் தெரியாதா !' என்று சொல்லி விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். அதற்கு மேலும் எனக்கு அங்கு நின்று கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. கீழ் இறங்கி வந்து விட்டேன்.

"அவர்கள் பேசிக் கொண்டிருந்த பங்களா இந்தப் பங்களாதான். எனக்காக இதை வாங்க வேண்டுமென்று அப்பாவும் அம்மாவும் தீர்மானித்த விஷயம்.

"அன்று முழுவதும் என் மனம் அதிக சஞ்சலம் அடைந்து ஒரு முடிவுக்கும் வராமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. பெற்றோர்கள் நான் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ அப்படியே இருப்பதா ! இல்லை, அவருடன் வாழ்வதா !

"முடிவில் அவரிடம் உண்மை நிலையைச் சொல்லி அவர் எண்ணம் என்னவென்று கேட்கத் தீர்மானித்தேன். ஆனால் இரண்டு நாட்களுக்குள் என் மனம் வேறு பல விஷயங்களைப் பற்றித் தீவிரமாய்ச் சிந்தித்தது.

"அவர் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். வாழ்க்கையில் பெரிய நிலையை அடைவதற்கு நான் குறுக்கே நிற்க விரும்பவில்லை. எனவே ஒருநாள் அவரைச் சந்தித்தபோது நான் ஏற்கனவே எழுதி வைத்திருந்த ஒரு கடிதத்தைக் கொடுத்து இதைப் பின்பு படித்துப் பாருங்கள் என்று சொல்லிவிட்டு 'என் கல்யாணத்துக்குப் பெற்றோர்கள் ஏற்பாடு செய்து எல்லா முடிவுகளையும் செய்து விட்டார்கள்' என்று கண் கலங்கிய வண்ணம் சொன்னேன்.

'அப்படியா ! சந்தோஷம். என்னுடைய பாராட்டுதல்கள்' என்று மட்டும் சொன்னார். நான் எதிர்பார்த்தபடி அவர் வேறு எதுவும் பேச வில்லை.

"ஆனால் அவருடைய முகத்தில் அவர் மனத்தில் அப்போது தோன்றிய எண்ணம் மிக நன்றாகப் பிரதிபலிக்கக் கண்டேன்.

'உன்னுடைய மண வாழ்க்கை மிகவும் சந்தோஷகரமாய் அமைய வேண்டும் என்பது என் பிரார்த்தனை, அம்பிகா !'

'அந்த வாழ்வு எப்படி அமைந்தால் உங்களுக்கு என்ன ! என்னை நீங்கள் ஏமாற்றி விட்டீர்கள்' என்றேன் மிகத் துணிவுடன்.

'நான் ஏமாற்றி விட்டேனா, அம்பிகா !'

'ஆம், உங்கள் மனசைக் கேட்டுப் பாருங்களேன் தெரியும். உங்கள் பெற்றோர்கள் என்னை உங்களுக்குப் பெண் கேட்டு வருவார்கள் என்று எப்படி நான் எதிர்பார்த்திருந்தேன் ! அவர்கள் மட்டும் அதைச் சீக்கிரமாகச் செய்திருந்தால்......!'

'ஏன் ! இப்போதுதான் என்ன முழுகிப் போய் விட்டது ! நான் எண்ணுவது போல் நீயும் எண்ணுவதானால் வருத்தப்படுவதற்கு ஒன்றும் இல்லை.'

'இல்லை. அது அணைகடந்த வெள்ளம். நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்' என்று நான் சொல்லுவதற்குள் என் கண்களிலிருந்து நீர் வழிந்தது. ஒரு நிமிஷம் அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்று விட்டுத் திரும்பி வேகமாக நடந்தேன்.

"எவ்வளவு தூரம் இந்த நாடகத்தை நான் நடித்து வெற்றி பெற்றேன் என்பது அப்போது எனக்குத் தெரியாது. என் பெற்றோர்களுக்காக இந்தக் காரியத்தை நான் செய்தேன். அதைச் செய்ய வேண்டுமென்ற வேகத்தில், நான் எப்படியோ அகப்பட்டிருந்த ஒரு சிக்கலிலிருந்து மீள வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் அவ்வாறு செய்து விட்டேன்.

"இதுதான் என் காதலின் கதை. அதற்கு அப்புறம் எல்லாம் பெற்றோர்கள் திட்டமிட்டபடி நடந்தது. இவ்வளவுதான்."

அம்பிகா இவ்வாறு சொல்லி முடித்தாள். ஒரு அசாதாரண மௌனம் எங்கள் மத்தியில் நிலவியது. அவளிடத்தில் என்ன சொல்வது என்றே எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

அவனுடன் எவ்வளவு நெருங்கிப் பழகினேன். அவன் கல்யாணம் எவ்வளவு சிறப்பாக நடைபெறும் என்று கனவு கண்டேன். அவன் வாழ்வு எவ்வளவு பிரகாசமாக அமையும் என்று எதிர்பார்த்தேன். ஒவ்வொரு சமயமும் என் வாழ்க்கையின் போக்கோடு அவனுடைய வாழ்க்கையைக் கற்பனை செய்து அதோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தவறியதில்லை. ஆனால் என் வாழ்வில் நடந்ததெல்லாம் நிஜம். அவன் வாழ்வில் அவ்வாறெல்லாம் நடக்கவில்லை. எல்லாம் என் கற்பனையில்தான் நடந்தது.



"அம்பிகா! நான் கொஞ்சமும் எதிர்பாராத ஒரு கதையைச் சொல்லி விட்டாய். இதை எல்லாம் என்னிடம் நீ சொல்லாமல் இருக்க வேண்டுமானால் உனக்கு மனம் எவ்வளவு கல்! என்னை நம்பவில்லை நீ'' என்றேன்.

அம்பிகா ஒன்றும் பதில் பேசவில்லை. இலேசாகச் சிரித்தாள். பின்பு, "இதை எல்லாம் கேட்டால் நீ எனக்காக ரொம்பவும் வருந்த மாட்டாயா! அந்த வருத்தத்தை உனக்குக் கொடுக்கக் கூடாதென்பதுதான். வேறு இல்லை'' என்றாள்.

"இன்னும் ஒன்று. நீ நாடகம் நடித்ததெல்லாம் சரி. உன் நடிப்புக்கு முன்னால் அவரிடம் ஒரு கடிதம் கொடுத்து இதைப் பின்பு படித்துப் பாருங்கள் என்று சொன்னதாகச் சொன்னாயே. அந்தக் கடிதத்தில் நீ என்ன எழுதியிருந்தாய்!'' என்று வியப்புடன் கேட்டேன்.

"என் உண்மை நிலையை ஒன்றும் அந்தக் கடிதத்தில் கூறவில்லை. ஆனால் அதில் என்ன எழுதியிருந்தேன் என்பதை அறிந்தால் உனக்கு ஒரு வேளை ஆச்சரியமாக இருக்கும். இவ்வளவு அறிவும் திறனும் படைத்த ஒரு இளைஞரை, ஒழுக்கம் தவறாத உத்தம சீலரை, ஒரு பெண் அடையக் கொடுத்து வைத்தால் அவள் உண்மையில் பெரிய பாக்கியசாலிதான். ஆகவே என் உயிர்த் தோழியான உன்னை அவர் மணந்து கொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். நான் அவரிடமிருந்து கேட்கும் அன்புப் பரிசு இது, என்று கேட்டிருந்தேன்''. என்று கூறி முடித்தாள் அம்பிகா.

டி. கே. சி. யின் கடிதங்கள்

சென்னை

29—12—48

யுத்த காண்டத்தை ஆரம்பித்த போது எனக்கு மிக்க தயக்கம் ஏற்பட்டது. கடவுள் வாழ்த்துச் செய்யுளை என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது. செய்யுளோ கம்பரது பொன் முத்திரையுள்ளது. ஆனால் விஷயம் இருக்கிறதே அது பொல்லாத விஷயமாக இருக்கிறது. புஸ்தக ரூபமாக வரும்போது விஸ்தாரமான விளக்கம் கொடுத்துப் போட்டுக் கொள்வோம் என்று எண்ணினேன்.

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தேன். நேயர்கள் கம்பரையும், என்னையும் மன்னித்து விடட்டுமே, எல்லாம் ஒரு செய்யுள் தானே என்பதாக எண்ணி எழுதிய விளக்கத்தை ஒரு இளைஞரன்பருக்கு (B. A. Honours) கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னேன். விளங்கிவிட்டது என்று அவர் சொன்னார். அதன்பேரில் தைரியம் வந்தது. அச்சுக்குத் தைரியமாகக் கொடுத்து விட்டேன்.

செய்யுளின் கதி எப்படியோ போகட்டும் என்று எண்ணித் தீர்த்து விட்டேன்!

* * *

பொதுவாக நம்மவர்கள் பாடப் புஸ்தகங்களிலிருந்து அவதரித்தவர்கள் தான். உண்மையைக் கேள்வித்தான் மூலமாய்த்தான் பார்க்க முடியும். நேருக்கு நேர் பார்க்கிற பார்வைக்கு "Cataract" வந்து விட்டது.

என்னுடைய விளக்கமோ பாடமோ அவர்களுக்கு விளங்குவதில்லை!

லகுவாய் இருப்பதே ஒரு கஷ்டமாய்ப் போய் விடுகிறது. இது பொதுவான உண்மை!

இங்ஙனம்
டி. கே. சிதம்பரநாதன்

மிகவும் ருசியுள்ள சமையலுக்கு

வடிகட்டின, கண்ணைக் கவரும் ஒளி பெற்ற மனோரம்மியமான 'ஸ்வஸ்திக் நல்லெண்ணெய்' ருசிகரமான சமையலுக்கு முதல்தரமானதோர் சாதனம். இந்த எண்ணெயுடன் சாப்பிடும்போது இட்டிலி மிகவும் ருசியாக இருக்கும். இந்த எண்ணெய் இனிமையாக இருப்பதுடன், எள்ளின் தனிச் சுவையும் பெற்றிருக்கிறது!

ஸ்வஸ்திக்
வடிகட்டிய நல்லெண்ணெய்

3½, 5, 7, 10, 35 பவுண்டு டின்களிலும் 42 பவுண்டு டிரம்களிலும் கிடைக்கிறது.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட்
பம்பாய்



பூக்காரன்



ராமணன்.

படிக்கட்டின்மீது நின்ற வண்ணம் தெருவைப் பார்த்துக்கொண்டிருந்த கனகத்துக்குத் தெருக்கோடியில் முருகன் வருவது தெரிந்தது. "பூ. பூ" என்று இரண்டு மூன்று வீடுகளில் கூப்பிட்டும் காதில் விழாதது போல் முருகன் அவள் வீட்டையே நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"உனக்குக் காது சரியாகக் கேட்கவில்லையா? கூப்பிடுகிறவங்க வீட்டுக்குப் போகாமல் இருந்தால் எப்படித் தாத்தா உன் பூ விற்கும்?"

"அவங்க கிடக்கறுங்க, கொளந்தே! நேற்று உன் கையாலே போணி பண்ணினே பாரு, கூடைப் பூவும் அஞ்சே நிமிஷத்திலே விற்றுப் போச்சு. அதுதான் எங்கும் போகாமல் முதலிலே இங்கே வருகிறேன்" என்று தன் செய்கைக்கு விளக்கம் கூறியபடி ஒரு முழம் பூவை அளந்து கொடுத்தான் முருகன். பிறகு, அவள் கொடுத்த அரையணாவைக் கூடைக்கு ஒரு முறை சுற்றி விட்டுத் தன் பையில் போட்டுக் கொண்டான்.

கனகம் நல்ல கை ராசிக்காரி என்று சொல்லித் தினமும் அவளுக்கு ஒரு முழம் பூ கொடுத்து விட்டுத்தான் முருகன் மேற்கொண்டு வியாபாரம் தொடங்குவான். கனகமும் அவன் வரவைத் தினமும் ஆவலோடு எதிர்பார்த்து வந்தாள். அதற்குக் காரணம் அவன் கதம்பம் மட்டுமல்ல, என்ன விலை விற்றாலும் அவளைப் பொறுத்த வரையில் முழம் பூ அரையணாதான். நல்ல சரக்கைக் கேட்கும் விலைக்குக் கொடுக்கும் வியாபாரியைக் கண்டால் எவருக்குத்தான் பிடிக்காமல் இருக்கும்?

மல்லிகைப் பூ காலமும், சாமந்திப்பூ காலமும் மாறி மாறி வந்தன. மல்லிகை, முல்லை, சாமந்தி, ரோஜா இப்படியாக முருகன் விற்ற பூக்கள் காலத்துக்கேற்ப மாறி மாறி வந்தாலும், மாறாமல் நிலையாக நின்றது கமலா முழம் பூவுக்குக் கொடுக்கும் விலையான அரையணா ஒன்றுதான். முருகன் அதிகமாகக் கேட்டால் "இந்த வயசிலே உனக்குப் பணத்தாசை இருக்கக் கூடாது, தாத்தா!" என்பாள். அவனும் சிரித்துக் கொண்டே போய் விடுவான்.

கனகத்தின் கணவர் கூடச் சில சமயங்களில் முருகனைப் பார்த்து, 'கனகம் உனக்கு நல்ல சொக்குப் பொடி போட்டிருக்கிறாள்!" என்று வேடிக்கை செய்வார்.

"சொக்குப் பொடி கொளந்தை கையில் மிச்சம் ஏதுங்க? எல்லாவற்றையும்தான் உங்களுக்கே போட்டுத் தீர்த்துவிட்டதே!" என்பான் முருகன்.

தன் கை ராசிக்காகத்தான் முருகன் தினமும் பூ தருவதாகக் கனகம் முதலில் நினைத்தாள். ஆனால் நாட்கள் வருடமாக மாறியும், நாள் தவறாமல், பரிவு மாறாமல், அவள் விரும்பிய மலர்களைக் கொண்டு வந்து அவன் கொடுக்கவே, தான் கொடுக்கும் அரையணா காசுக்காக அவன் அங்கு வருவதில்லை. இனம் தெரியாத அன்பு காரணமாகத்தான் அப்படிச் செய்கிறான் என்பதை அவள் உணர்ந்தாள்.

"என் கையாலே நட்ட செடியில் பூத்த பூ, கொளந்தே!" என்று அவன் வாஞ்சையோடு மல்லிகையும் ரோஜாவும் கொடுக்கும்போது கனகத்துக்கு முருகன் வியாபாரியாகத் தோன்றுவதில்லை. புதுப் புது பாவாடைகளையும் சட்டைகளையும் தைத்துப் போட்டு, உள்ளம் மகிழ, கண்குளிரக் கண்டு ரசிக்கும் பெற்றவனாகத்தான் அவள் பார்வைக்குத் தோன்றினான். பண்டிகை நாட்களில், "இந்தா, தாத்தா! உனக்காக எடுத்து வைத்தேன்!" என்று சொல்லிச் சில சமயங்களில் அவள் அவனுக்குப் பக்ஷணங்கள் கொடுப்பாள். அப்போது பார்க்க வேண்டுமே முருகனின் மகிழ்ச்சியை! யாருக்கும் கிட்டாத அமிர்தமே தன் கையில் வந்து கொட்டுவதாக எண்ணிப் பூரிப்பான். ஐந்து வருடங்களாக நாள் தோறும் அவள் வீட்டுக்குப் போய்க்கூட முருகனுக்கு அலுப்போ சலிப்போ ஏற்படவில்லை. 'இப்படியும் ஒரு பூக்காரன் இருப்பானா?' என்ற வியப்பு கனகத்துக்கு.

ஐந்து வருடங்களாக மாற்றமின்றி ஓடிய முருகனின் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. முருகன் சாலையில் போய்க் கொண்டிருந்தபோது யாரோ அவன்மீது சைக்கிளை ஏற்றி விட்டான். அவனால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. சைக்கிள்

ரிக்ஷாவில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டான். கால் எலும்பு முறிந்திருப்பதாகக் கூறிக் காலுக்குக் கட்டுப் போட்டுக் கட்டிலில் படுக்கவைத்துச் சிவப்புச் சால்வையைப் போர்த்தி விட்டார்கள்.

“இன்னும் ஒரு மாதம் கனகத்தைப் பார்க்க முடியாது. அவளுக்குப் பூ கொடுக்க முடியாது” என்ற வேதனை அவனைக் கால் வலியோடு சேர்ந்து வாட்டியது. தூக்கம் வராமல் புரண்டு படுத்த அவன் தன் கடந்த கால வாழ்க்கையைப் புரட்டிப் பார்த்தான். அவனது வாலிபப் பருவம் அவன் கண்முன்னால் திரைப்படமென நிழலாடியது.

ஏழையாக இருந்தாலும் இளமைப் பருவம் வராமல் நிற்கிறதா? கட்டிளங் காளையாகத் திரிந்து கொண்டிருந்த முருகனுக்கு ஒரு கால் கட்டைப் போட்டு விட்டு அவன் பெற்றோர்கள் இம்மண்ணுலகை விட்டு மறைந்தார்கள்.

ஏழைமையின் துன்பம் அவனை இல்லாதபடியெல்லாம் சக்கையாக வாட்டி விட்டது. ‘ஏழையாகப் பிறந்தவனுக்கு இல்லற சுகமே கூடாது!’ என்று சொல்லும் அளவுக்கு அவன் இன்னல்களை அனுபவித்தான்.

அவன் இன்னல்களை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்றுதானோ என்னவோ, அவன் மனைவி செல்வி அருமையாக ஒரு பெண் மகவை ஈன்றுவிட்டு ஆஸ்பத்திரியிலேயே கண்களை மூடிவிட்டாள். பூம்பிஞ்சை எப்படி வளர்ப்பது என்ற பிரச்னை அவன் எதிரில் மலையாக நின்றது.

அவன் செய்வதறியாமல் திகைத்துக் கொண்டிருந்த சமயம்.

“இந்தப் பச்சைக் குழந்தையை நீ எப்படிக் காப்பாற்றப் போகிறாய்? உனக்கும் கஷ்டம்; அதற்கும் கஷ்டம். நான் சொல்வதைக் கேள். குழந்தைக்காக ஏங்கித் தவம் கிடக்கும் யாரிடத்திலாவது சேர்ப்பித்தால் ஒரு குறையும் இல்லாமல் உன் குழந்தை வளரும்” என்றார் டாக்டர்.

முருகனும் யோசித்துப் பார்த்தான். டாக்டர் சொல்வது சரியென்றே பட்டது. ஆனால் தன் குழந்தையை அப்படி யார் வாங்கிக் கொள்ளப் போகிறார்கள் என்ற சந்தேகமும் கூடவே முளைத்தது. தயாள குணமுள்ள அந்த டாக்டரே அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து விட்டார். முருகனும் மனநிம்மதி பெற்று விட்டதாக நினைத்துக் குழந்தையை டாக்டரிடமே ஒப்படைத்து விட்டு வெளியேறி விட்டான்.

அவன் மனம் நிம்மதி பெற்றதா என்றால் இல்லையென்றுதான் சொல்ல



வேண்டும். பின்னைப் பாசம் அவனைப் பிழிந்து எடுத்தது. கஷ்டமோ, நிஷ்டூரமோ, நாமே நம் குழந்தையை வைத்துக் கொண்டிருக்கக் கூடாதா என்று எண்ணினான். தன் குழந்தையைத் திரும்பிப் பெறுவதும் இனி இயலாத காரியம். குழந்தையைப் பற்றி ஸ்மரிப்பதில்லை என்று வாக்கு அளித்து விட்டு வந்த பின் அவன் எந்த முகம் கொண்டு தன் குழந்தையைத் திரும்பிப் பெறச் செல்ல முடியும்? எத்தனைதான் மறக்க முயன்றும் முருகனால் தன் குழந்தையை மறக்க முடியவில்லை.

இருபது ஆண்டுகள் இடையில் உருண்டு ஓடி விட்டன. இருந்தாலும் தன் குழந்தையைப் பற்றிய செய்தியை அறிய அவன் துடித்தான். குழந்தை பிறந்த ஆஸ்பத்திரிக்குச் சென்று விசாரித்தான். அதிர்ஷ்ட வசமாகக் குழந்தையைப் பற்றிய விவரங்களை அவனால் சேகரிக்க முடிந்தது.

வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல் முருகன் நேராக வேலூர் வந்து சேர்ந்தான். அங்குதான் அவன் மகள் கனகம் வசித்து வந்தாள். பச்சைக் குழந்தையாக ஆஸ்பத்திரியில் பார்த்த தன் குழந்தையை இருபது வயது மங்கையாகப் பார்த்தான். அங்கே தாயையே உரித்து வைத்திருந்தது அவள் தோற்றம். அது வரையில் மண்டிக் கிடந்த பாசமெல்லாம் பீறிட்டு எழுந்தது முருகனுக்கு. காது குளிர அவள் 'அப்பா' என்று அழைத்துக் கேட்க வேண்டும்போல இருந்தது. நிறைவேற முடியாத அந்த ஆசையை அவன் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாலும், தன் குழந்தையைத் தினம் ஒரு தடவையாவது காண வேண்டும், அவளுடன் பேச வேண்டும், அவள் சந்தோஷம் அடையும்படி ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. இவற்றை மனத்தில் கொண்டுதான் முருகன் பூ வியாபாரத்தில் இறங்கினான்.

பொன்னையும் பொருளையும் கொடுக்க முடியாத அவன் தன் குழந்தைக்குப் புதுப் புது வகையான பூக்களைக் கொடுத்து மகிழ்ந்தான். அவள் விரும்பும் பூக்களைத் தன் தோட்டத்திலேயே வளர்த்தான். விலை கொடுத்து வாங்க முடியாத அன்பை அம்மலர்கள் ஏந்தி வருகின்றன என்பதைக் கனகம் எங்கே அறிவாள்?

• • •

முருகன் தூக்கம் வராமல் புரண்டு படுத்தான். இன்னும் ஒரு மாதத்துக்குக் கனகத்தைப் பார்க்க முடியாது என்ற வேதனை உள்ளத்தில் மேலோங்கி நின்றது. தனிமையில் மனம் குமைந்து கொண்டிருந்த முருகனின் கால் எலும்புகள் ஒன்று கூடி ஆஸ்பத்திரியிலிருந்து எப்படியோ அவனுக்கு விடுதலை வாங்கி யளித்தன.

உள்ளத்தில் கனகத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை வளர்த்துக் கொண்டு, ஒரு மாத காலமாகக் கேட்பார், பார்ப்பார் அற்றுக் கிடந்த தன் தோட்டத்தை அடைந்தான். ஒவ்வொரு செடியும் பூக்களால் நிறைந்து வழிந்த வண்ணம் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. அவ்வளவு பூக்களையும் ஒரே மூச்சில் கொய்து கை வலிக்க வலிக்க அவைகளைக் கட்டி முடித்தான். தூசி படிந்து கிடந்த பூக் கூடையைக் கீழே தட்டிச் சுத்தம் செய்து விட்டுப் பூச்செண்டை அதில் வைத்து ஈரத் துணியால் மூடிய பிறகுதான் மற்ற வேலைகளைக் கவனித்தான்.

மாலை வந்ததும் பூக்கூடையுடன் கிளம்பினான். இவ்வளவு நாட்களாக அவளைக் காணாத ஏக்கம், அவளை மீண்டும் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சி இரண்டுமாகச் சேர்ந்து அவனைக் கற்பனையில் ஆழ்த்தின. அவளை மீண்டும் பார்க்கும்போது கனகம் திகைத்து விடுவாள். சைக்கிள் மோதி விட்டது என்று கூறியதும் அந்தப் பையனைத் திட்டுவாள். "உனக்குத்தான் தாத்தா,

ஜாக்கிரதை போதவே போதாது, இனி மேல் பார்த்து நடக்கணும்'' என்று எச்சரிப்பான். இப்படியெல்லாம் யோசித்தவாறே முருகன் நடந்தான்.

கனகம் வழக்கம் போல வாயற்படியில் நின்று கொண்டிருக்கவில்லை. 'தினம் தினம் காத்து காத்து ஏமாந்து போயிருக்கும், பாவம்!' என்று எண்ணினான்.

"அம்மா! பூ, அம்மா! பூக்காரன் வந்திருக்கிறேன்!''

ஆவலை அடக்க அடியாமல் உரக்கவே கத்தினான் முருகன். கதவு சாத்தியிருந்தது.

"உன்னை யாரும் இங்கே கூப்பிடவில்லை. ஏன் சும்மாக் கத்தி உயிரை எடுக்கிறாய்? வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போ!'' ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னாலிருந்தபடியே கனகம் கத்தினாள்.

"ஒரு மாசமாக ஆஸ்பத்திரியில் கிடந்தேன், கோளங்தே! அதுதான் வரவில்லை. இனிமேல் தவறாமல் வந்து விடுவேன். இதற்குப் போய்க் கோவிச்சுக்கிறியே!''

"போ வென்று சொல்வது புரியவில்லை?'' என்று கூறிப் படீரென்று கதவைச் சாத்தி விட்டாள் கனகம்.

முருகனுக்கு வானமே இடிந்து தலையில் விழுந்தாற் போல் இருந்தது. ஒரு மாதத்தில் கனகம் இப்படி மாறி விடுவாளா? அவன் என்ன தவறு செய்தான்? தன்னாடியபடி குடிசையை அடைந்தான்.

மகன் என்ற பாசம் அவனுக்குத்தானே? கனகத்துக்கு அவன் ஒரு வியாபாரிதானே? இதை அவன் அறிவு எடுத்துக் காட்டியது. "ஏதோ கோபத்தில் கூறி இருப்பாள். நாளை போய்ப் பார்க்கலாம்'' என்று தன்னையே சமாதானம் செய்து கொண்டான்.

முருகனை மீண்டும் வீட்டில் கண்ட போது எரிமலையாக வெடித்தாள் கனகம். "நேற்றே சொன்னேனே, ஏன் மறுபடியும் வந்தாய்?'' என்றாள்.


"அட, சும்மாக் கத்தாதே, கோளங்தே! உன் காசு எனக்கு வேண்டாம்'' என்று முருகன் ஒரு முழம் பூவை மேஜை மேல் எடுத்து வைத்தான்.

"உன்னுடைய தருமம் எனக்கு வேண்டாம்'' என்று கூறியபடி அந்தப் பூவை எடுத்து வீசி எறிந்தாள் கனகம். முருகனுக்குத் தன் இருதயத்தையே வெட்டி எறிவது போல் இருந்தது. அவனால் கோபித்துக் கொள்ள முடியவில்லை. கண்கள் நீரைக் கொட்டின. "நான் இனிமேல் வரவில்லை'' என்று கூறி அவன் வீட்டை விட்டு வெளியே வந்தான்.

கூடையில் இருந்த பூ இரும்பாகக் கனத்தது. அவன் தன் தோட்டத்துக்கு ஓடினான். கனகத்துக்காக வளர்த்திருந்த செடிகளைக் கண்டதும் வெறி பிடித்து விட்டது. ஒவ்வொரு செடியையும் வெறி அடங்கு மட்டும் இலை இலையாக வெட்டித் தீர்த்தான். இனி அவன் பூ வியாபாரம் செய்யப் போவதில்லை. அவன் யாருக்காக அந்தப் பூ வியாபாரத்தைத் தொடங்கினானோ அந்தக் கனகம், அவன் கூடை கூடையாகப் பூவைக் கொட்டினாலும் கண் எடுத்துப் பார்க்க மாட்டாள். ஆம், ஒரு பூவைக் கூடக் கையால் இனித் தொட மாட்டாள்.

ஏன்? ஏன்?

இனி, கனகம் விதவை!



● டில்லி மக்கள் சபை அங்கத்தினர் திரு பி. நடேசன் அவர்கள் சமீபத்தில் மண்ணுலகிலிருந்து மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டுத் துணுக்குற்றோம். திரு நடேசன் அவர்கள் சென்னையில் பல பொது ஸ்தாபனங்களில் ஈடுபட்டுப் பல நற்பணிகள் புரிந்தவர். கௌரவ மாஜிஸ்திரேட்டாகவும், கார்ப்பரேஷன் கவுன்சிலராகவும், சென்னை சட்ட சபை அங்கத்தினராகவும் பதவிகள் வகித்துப் பணியாற்றியிருக்கிறார். தொழில் துறையில் 1931-ம் ஆண்டில் தென்னாட்டு மின்சார விநியோகக் கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக இருந்து வந்தார். மின்சார இன்ஜினீயரிங் கம்பெனியொன்றையும், மின்சாரச் சாமான்கள் உற்பத்தி செய்யும் கம்பெனியையும் தோற்றுவித்தார். பிரிட்டன், ஐரோப்பா, ருஷ்யா முதலிய மேல்நாடுகளில் இருமுறை சுற்றுப்பிரயாணம் செய்து, நல்ல அனுபவம் பெற்றிருந்தார். இப்படிப் பல துறைகளில் ஈடுபட்ட திரு நடேசன் அவர்களின் மறைவு ஒரு பெரு நஷ்டம். அவர்கள் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்! ●

பாமர் பகுதி



ஞான சமுத்திர தேசிகரிடம் ஒரு சிஷ்யர் வந்து உபதேசம் பெற்று சாஸ்திரங்கள் கற்ருர். மிகப் பெரிய வித்துவான் ஆனுர். முறைப்படி ஸ்நானம், ஜபம் எல்லாம் செய்து வந்தார். சிலகாலம் கழித்து அவர் தனக்கென்று காவேரிக் கரையில் ஒரு ஆசிரமம் கட்டிக் கொண்டு மக்களுக்கு உபதேசம் செய்தும் திருநீறு வழங்கியும் வந்தார். கபில தேசிகர் என்று தனக்குப் பெயர் வைத்துக் கொண்டார்.

ஒருநாள் பரதேசிப் பித்தர் ஒருவர் வந்து, கபிலதேசிகரைவணங்கி "சுவாமி! இந்த எண்ணெயைத் தேகத்துக்குப் பூசி ஸ்நானம் செய்யுங்கள்" என்று சொல்லி, ஒரு தைலம் கொடுத்தார்.

"எதற்கு நல்லது இந்தத் தைலம்?" என்று தேசிகர் கேட்டார்.

"உடலைக் காக்கும் தோலுக்கு இது மிக நல்லது. இதைத் தாங்கள் அவசியம் பூசி நான்கு நாள் ஸ்நானம் செய்ய வேண்டும். ஏழை அடிமையின் ஆசையை நிறைவேற்ற வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

பித்தருடைய அன்பை தேசிகர் பாராட்டி எண்ணெயை வாங்கிக் கொண்டார்.

அவர் சொல்லிய வண்ணம் தைலத்தை உபயோகித்தார்.

ஐந்தாவது நாள் தேசிகருடைய ஆசிரமத்துக்கு வந்த ஊரார் என்ன காரணமோ அவரை வணங்கிய பின் அவரை உற்றுப் பார்த்துவிட்டு உடனே திரும்பிப் போய் விட்டார்கள். உபதேசத்திற்காகவாவது திருநீற்றுக்காவது நிற்கவில்லை. இப்படியே மறுநாளும் அதற்கு மறுநாளும் நடந்தது. எல்லாருக்கும் அவரிடம் வெறுப்பு உண்டாகி விட்டது என்பதை தேசிகர் கண்டார்.

'ஆண்டி கொடுத்த எண்ணெய் ஏதோ கெட்ட மந்திரவாதத் தைலம் போல் இருக்கிறது. அவன் ஒரு அருவைக்காரன் போலிருக்கிறது. அதனுல்தான் தன்னிடம் மக்களுக்கு இருந்த பக்தி குறைந்து போயிற்று' என்று எண்ணினுர்.

சுதரிசனத் தைலம்

ஜனங்கள் தன் பேரில் வெறுப்புக் கொண்டிருப்பதைப் பார்த்த தேசிகருக்கு இன்னது செய்வது என்று தோன்றாமல் தம்முடைய குரு ஞான சமுத்திர தேசிகரிடம் சென்றார்.

விஷயத்தைச் சொன்னார். "அந்தத் தைலத்தைக் காட்டு" என்றார் ஞான சமுத்திரர்.

வாங்கி மோந்து பார்த்ததும், "அப்பனே! இதுதான் காரணம். இந்தத் தைலம் சுதரிசன மந்திரம் ஓதி வடித்த தைலம். இதைப் பூசிக்கொண்டு ஸ்நானம் செய்தால் தோலும் சதையும் உள்ளே கிடக்கும் கருத்துக்கள் வெளியே பார்க்கிறவர்களுக்குத் தென்படும்படி செய்து விடும். தோலும் சதையும் உள்ளே இருப்பதை மறைக்கும் சக்தியை இழந்து, பார்ப்பவர்களுடைய பார்வை ஊடுருவிச் செல்லும் நீர்மையை அடைந்து விடுகிறது. இதைச் சில யோகிகள் பூசிக் கொண்டு நியமத்துடன் இருக்கப் பயில்வார்கள். நமக்கு இது உதவாது" என்றார்.


கபில தேசிகர் வெட்கப்பட்டார்.

அவர் போன பிறகு, "பக்குவமாகாதவன் சாஸ்திரம் படித்து விட்டுக் குளித்தும் ஜபம் செய்தும் வந்தால் மட்டும் போதாது. உள்ளம் நல்ல சுத்தியடையும் வரையில் ஆபத்துதான்" என்று ஞான சமுத்திர தேசிகர் தம்முடைய மற்றச் சிடர்களுக்குச் சொல்லி விளக்கினார்.

"இந்த சுதரிசனத் தைலம் பொல்லாத தைலம்" என்று சில சிடர்கள் தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள்.

"எவ்வளவு படித்தாலும் மனத்தைக் காப்பது கஷ்டம். இந்தத் தைலத்தைப் பூசிக் குளிக்கும் தகுதி நமக்கு எப்போது வரப்போகிறது!" என்று வேறு சிலர் பேசிக் கொண்டார்கள்.

"நல்லெண்ணெயே போதும். இந்த ஒளியூடித் தைலங்கள் எல்லாம் நமக்கு வேண்டாம்!" என்றார்கள் மற்றும் சிலர்.





அரித்து, எரிந்து, கொப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுயாசமாக வைத்துக் கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்துபோவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழுவழுப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழ வழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி - நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) ஆயிரக் கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் *R. K.* கூறுகிறார். "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்.

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாதவரை நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப் படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (*Nixoderm*) வாங்குங்கள். அதந் களித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.



30. ரமணியேதான்!

அவரது பெயர் சிற்சபேசன். அவரது மனைவி பெயர் காமாட்சி அம்மாள்; பெண் பெயர் மாலதி. அவர்களது சொந்த ஊர் மதுரை. சிற்சபேசனுக்குப் பர்மாவிலே ஏராளமான சொத்து இருக்கிறது. இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்பு அங்கிருந்து நிறையப் பணம் வந்து கொண்டிருந்தது. ஆனால் யுத்தம் நடந்தபோது, பணம் வர வழியில்லை. யுத்தம் முடிந்த பிறகும் பர்மா நாடு சுதந்திர நாடாகி விட்டதால், இந்தியர்கள் அங்கிருந்து முன்போல் பணம் கொண்டு வராதபடி பர்மா சர்க்கார் செய்து விட்டார்கள்.

'மாதாமாதம் நாற்பது ரூபாய் அனுப்பலாம். அதற்கு மேல் அங்கிருந்து அனுப்ப முடியாது' என்று உத்தரவிட்டனர். பர்மாவில் ஏராளமான வீடுகள், நிலங்கள், நிறையப் பணம் எல்லாம் இருந்தும் இந்தியாவுக்குக் கொண்டுவர முடியவில்லையே என்று சிற்சபேசன் எண்ணினார். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். குடும்பத்துடன் பர்மாவுக்குப் புறப்பட்டுப் போய், அங்கேயே கொஞ்ச காலம் இருப்பது என்று முடிவு செய்தார். அயல் நாட்டுக்குப் போவதென்றால் "பாஸ்போர்ட்' வேண்டுமல்லவா? ஆதலால் 'பாஸ்போர்ட்'டுக்கு ஏற்பாடு செய்யச் சென்னைக்கு எல்லோருமாக வந்தார்கள். சென்னையிலிருந்து திரும்பும்போது காஞ்சிபுரத்துக்கு வந்தார்கள். அங்கே அவர்களது நெருங்கிய உறவினர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் பார்த்துவிட்டு, பெயர் பெற்ற காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளையும் வாங்கிக் கொண்டு மதுரைக்குப் போகத் தீர்மானித்தார்கள்.

அன்று காலையில் உறவினருடைய காரிலே புறப்பட்டு வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சற்று முன்னாலுள்ள ஒரு பட்டு வியாபாரி வீட்டுக்கு வந்தார்கள். அங்கே இறங்கிக் கொண்டு ஏதோ ஒரு வேலையாகக் காரை அனுப்பி வைத்தார்கள். புடவைகளை வாங்கிக் கொண்டு கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்து விட்டு எதிரேயுள்ள மண்டபத்தில் காத்திருப்பதாகவும், பத்து மணி சுமாருக்குக் காரைக் கொண்டு வரும்படியும் டிரைவரிடம் சொல்லி அனுப்பினார் சிற்சபேசன். அப்படியே பத்து மணிக்குக் கார் திரும்பி வந்தது. சுவாமி தரிசனம் செய்து விட்டுக் காத்துக்கொண்டிருந்த சிற்சபேசன் குடும்பத்தார் காரிலே ஏறிச் சென்றார்கள். அப்போது அவசரத்தில் மறந்துவைத்துவிட்டுப் போன புடவைப் பொட்டணம் தான் அந்தப் பையன் மூலமாக இப்போது கிடைத்தது!

பட்டுப் புடவைகளைக் காப்பாற்றிக் கொடுத்த அந்தப் பையனை மோட்டாரில் ஏற்றிக்கொண்டு உறவினர் வீட்டுக்குப் போனார் சிற்சபேசன். அங்கே போனதும், அவனைப் பற்றிய முழு விவரங்களையும் அவனிடமிருந்து அவர் தெரிந்து கொண்டார்.

அந்தப் பையன் யார்? வேறு யாருமல்ல; ரமணிதான்! ஆம்; ரமணியேதான்! ரமணி எப்படிக் காஞ்சிபுரத்துக்கு வந்தான்?

நாடக சபா முதலாளி அவன் பட்டுத் துணியைத் திருடி விட்டதாகக் கூறி வெளியே பிடித்துத் தள்ளினாரே, அன்றே சென்னையை விட்டு அவன் புறப்பட்டு விட்டான். கால் போனபடி

உறுதி கொள்வோம்!

தமிழமகன்

அண்ணல்காந்தி நெறியுண்டு: வளமு முண்டு:
ஆற்றல்மிகும் பணிகள்செயத் திறமு முண்டு!
நண்ணுதிசை யுலகனைத்தும் நற்பே றுண்டு!
நவபார தம்உலகு அமைதிக் கேதான்
எண்ணரிய பணிசெயும்என் றெண்ணமும் உண்டு!
ஏமாறு வதற்கில்லை. இனியும்: தியாகப்
புண்ணெடுத்த நெஞ்சினிலே சுதந்தி ரத்தின்
புதுவாழ்வும் காண்பதென்றே உறுதி கொள்வோம்!

காந்திபுகழ் திசையெட்டும் எதிரொ லிப்போம்:
கனிந்துருகிப் புதுப்புதுவாம் கருத்து கொள்வோம்!
சாந்தியெனும் பெரும்கடலின் அமுதம் தேக்கிச்
சந்திரனின் தண்ணிலவில் குமுறிப் பொங்க
வாய்ந்தகடல் அலைபோலும் ஆக்கம் செய்ய
விரிந்தெழுவோம்! துணிந்துவிட்டோம்! இடர்கள் தூள்!தூள்!
மாந்தருய்ய விதியொன்று வகுப்போம் என்று
மறமுரைத்துக் காந்திநெறி செல்க, நெஞ்சே!

நடந்தான், நடந்தான் நடந்து கொண்டேயிருந்தான். நன்றாக இருட்டி விட்டது. அதற்காக அவன் நிற்க வில்லை. நல்ல பசி எடுத்தது. எதுவும் சாப்பிடவில்லை. ஏதாவது வாங்கிச் சாப் பிடுவதற்குப் பணமும் இல்லை. இரவு முழுவதும் சாப்பிடாமல் நிற்காமல் நடந்தான். விடியும் சமயம். 'நாம் எங்கே இருக்கிறோம்?' என்று நிமிர்ந்து பார்த்தான். எதிரே பெரிய பெரிய கோபுரங்கள் தெரிந்தன. 'இது எந்த ஊராக இருக்கும்?' என்று யோசித் தான். சிறிது நேரத்தில் அது காஞ்சி புரம் என்பது தெரிந்து விட்டது.

'சரிதான். நாம் ஒரு புண்ணிய ஸ்தலத்துக்குத்தான் வந்திருக்கிறோம்' என்று நினைத்து ஆறுதல் அடைந் தான். அப்போது அவனுக்கு நல்ல பசி. கையிலே காசிருந்தால் ஏதேனும் வாங்கிச் சாப்பிடலாம். 'என்ன செய் வது?' என்று யோசித்தான். அப்போது ஒரு ஹோட்டல் அவன் கண்ணுக்குத் தெரிந்தது. உடனே அந்த ஹோட்டலை நோக்கிச் சென்றான். தயக்கத்துடன் ஹோட்டல் முதலாளியின் அருகே போய், "ஐயா, நேற்று மத்தியானம் சாப்பிட்டது. எனக்கு ஒரே பசியா யிருக்கிறது. ஏதாவது வேலை கொடுங் கள். செய்து முடித்த பிறகு, பசி தீரக் கொஞ்சம் பலகாரம் கொடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டான்.

ரமணியின் பேச்சைக் கேட்டதும், ஹோட்டல் முதலாளிக்கு ஆச்சரியமா யிருந்தது. எத்தனையோ பேர் நன்றா கச் சாப்பிட்டு விட் டுப் பணம் கொடா மலே நழுவப் பார்ப் பார்கள். வேறு சிலர் கையிலே காசில்லா மல் வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டு அவரிடம் வந்து, "ஐயா! கையிலே தம்படி இல்லை. பசி அபாரமாயிருந்தது. சாப்பிட்டு விட் டேன், ஏவ் ....!" என்று ஒரு பெரிய ஏப்பம் விடுவார் கள். அவர்களைப் போல் செய்யாமல், 'வேலை கொடுங்கள், செய்து முடிக்கி றேன். பிறகு ஆகா ரம் தாருங்கள்' என்று ரமணி கேட்டதுபோது அவருக்கு ஆச்சரிய மாகவே இருந்தது.

உடனே அவர் ரமணியைப் பார்த்து, "தம்பி! உன்னைப் பார்த்தால் மிகவும் களைத்திருப்பதாகத் தெரிகிறது. முதலில் சாப்பிடு. வேலையைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி விட்டு, ஒரு சிப்பந்தியிடம் ரமணிக்குப் பசி தீரப் பலகாரம் கொடுக்கச் சொன் னார். நாலு இட்டலிகள் சாப்பிட்டதுமே போதும் என்று கூறி, ஒரு 'கப்' காப்பி யைக் குடித்துவிட்டு ரமணி எழுந்திருந் தான். நேராக ஹோட்டல் முதலாளி யிடம் போய், "ஐயா, சாப்பிட்டு விட் டேன். வேலை கொடுங்கள். செய்து முடித்து விட்டுப் போகிறேன்" என்றான்.

ஹோட்டல் முதலாளிக்கு ரமணியை வேலை வாங்க இஷ்டமில்லை. "இப்போது வேலை ஒன்றும் இல்லை. வேலைக்காக நான் ஆகாரம் தரவில்லை. உன் நல்ல குணத்துக்காகத்தான் தந்தேன். போய் வா!" என்று கூறினார். ரமணி அவ ரிடம் விடைபெற்றுக் கிளம்பினான்.

சிறிது தூரம் சென்றதும், அவன் கண்களில் வரதராஜப் பெருமான் கோயில் தென்பட்டது. கோயிலுக்குள் சென்று சாமி கும்பிடவேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனாலும், இரவெல் லாம் நடந்து வந்ததால் களைப்பாக இருந் தது. அதனால் கோயிலுக்கு எதிரேயுள்ள மண்டபத்தின் ஒரு தூணில் சாய்ந்து கொண்டான். சிறிது நேரத்தில் நன்றா கத் தூங்கிப்போய் விட்டான். (தொடரும்)





மதிப்பில் சிறந்த ப்ளேட் எதுவென்று நீங்கள் எளிதில் சொல்லமுடியும்

ஒரு ப்ளேடின் மேன்மையை நிர்ணயிக்க உறுதியான பரீக்ஷை அதைக்கொண்டு க்ஷவரம் செய்துகொள்வதுதான்! ஒரு சிறந்த, கூர்மையான ப்ளேட் சுக க்ஷவரத்தை ஒரு தடவையல்ல, அநேகம் தடவைகள் அளிக்கிறது.

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளை எது தயாரிப்பான வேறெந்த ப்ளேடுகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். உங்கள் முகத்தில் எவ்வளவு சுலபமாக வழுக்கிக்கொண்டு செல்லுகிறது. அதற்குப் பிறகு எவ்வளவு மழுமழுப்பாக உங்கள் முகம் ஆகிறது என்பதையும் கவனியுங்கள். அதே போல் அதன் கூர்மை எவ்வளவு காலத்திற்கு நீடித்திருக்கிறதென்றும் பாருங்கள், நாளுக்கு நாள் அதன் சுக க்ஷவரத்தை அனுபவிப்பீர்கள்.

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள் எவ்வளவு நேர்த்தியாக இருக்கின்றன என்பதை, அவைகளைக்கொண்டு க்ஷவரம் செய்துக்கொண்டு பாருங்கள். இதில் தவறுதலுக்கு இடமேற்படுவதில்லை. ஸெவன் ஓ'க்ளாக்தான் உங்கள் பணத்திற்குப் பெறுமானம் கொடுக்கிறது என்று தெரிந்துகொள்ளுவீர்கள்.

7 o'clock



BLADES

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள்



43. குழலில் ஒரு துரும்பு!

“சந்திரிகா காணாமல் போனதற்கும் உங்களுடைய துயரத்துக்கும் என்ன சம்பந்தம் டாக்டர்? நீங்கள்தான் அதற்குப் பொறுப்பாளி என்று ஏன் நீங்கள் வருத்தப்பட வேண்டும்?”

இவ்வாறு கேட்டாள் அல்லவா சாவித்திரி அம்மாள் சுரேஷிடம். இந்தக் கேள்வியைத்தான் அப்புலிங்கமும் கேட்டான் டாக்டரைப் பார்த்து!

சாவித்திரி அம்மாளுடைய இந்தக் கேள்விக்குச் சரியானபடி பதில் சொல்லாமல் அன்று தப்பித்துக் கொண்டார் சுரேஷ். ஆனால் இன்று அப்படியில்லை. அப்புவின் கேள்விக்குப் பதில் சொல்வது என்று உறுதியாகத் தீர்மானித்து விட்டார்.

ஆமாம்; சந்திரிகாவின் வாழ்க்கை வரலாற்றை அப்புலிங்கத்திடம் முழுவதும் சொல்லித் தன்னுடைய திட்டங்களுக்கு அப்புவின் பூரண ஒத்துழைப்பையும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் டாக்டர் சுரேஷ் அன்று அவனிடம் அந்தப் பேச்சை ஆரம்பித்திருந்தார்.

சவுக்கடிப் பால்வண்ண நாதர் எனப் புகழ்பெற்ற அந்த ஸர்க்கஸ் இன்ஸ்பெக்டரைப் பற்றியும், இலஞ்சி என்ற அழகான கிராமத்தில் ஸர்க்கஸ் இன்ஸ்பெக்டரின் மைத்துனருடைய மகளுக்குக் கல்யாணம் நடைபெற்றபோது, அந்தக் கல்யாண வீட்டில் இன்ஸ்பெக்டரின் அருமைக் குமாரி காணமற் போன சம்பவத்தைப் பற்றியும் டாக்டர் சொல்லி முடித்ததும், அப்பு அந்த ஆணித்தரமான கேள்வியைக் கேட்டான், டாக்டருக்கு ஏன் அது விஷயத்தில் அத்தனை துயரம் என்று!

“அப்பு! உன்னிடம் சொல்வதில் தவறு இல்லை. யோசித்துப் பார்த்தால் அந்த விவரத்தை உன்னிடம் சொல்ல வேண்டியது அவசியம் என்றே தோன்றுகிறது. ஏனென்றால் சந்திரிகாவின் வாழ்க்கையில் எனக்கு இத்தனை தூரம் அக்கறை ஏற்பட்டுள்ள இரகசியம் அப்பொழுதுதான் உனக்குப் புரியும்.”

இவ்வாறு சொன்னார் சுரேஷ். அப்பு கேட்டான்:

“அப்படியானால் டாக்டர், உங்களுக்கும் சந்திரிகாவின் குடும்பத்துக்கும் ஏற்கனவே தொடர்பு உண்டா?”

டாக்டர் புன்முறுவல் செய்தார். அடுத்த விநாடி பதில் சொல்ல ஆரம்பித்தார்.

“அப்பு! அந்தக் காலத்தில் நான் அம்பா சமுத்திரம் ஆஸ்பத்திரியில் டாக்டராக இருந்தேன். அப்பொழுது நான் ஒரு பிரும்மச்சாரி, உன்னைப் போல! அதன்பிறகு தான் கிருகஸ்தனானேன்!”

“அப்படியானால்?”

“பால்வண்ணநாதர் தம்முடைய மைத்துனரின் மகளுக்கு வரன் பார்த்தது வேறு யாரையும் இல்லை. இந்த சுரேஷைத்தான்!”

அப்புலிங்கம் அப்படியே திகைத்துப் போய் நின்றான்.

“டாக்டர் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? இலஞ்சியில் கல்யாணம் நடந்தது என்று சொன்னீர்களே, அது—”

“ஆமாம். அது எனக்குத்தான். பால்வண்ணநாதரின் மைத்துனருடைய மகளைக் கைப் பிடித்தவன் நான்தான். இலஞ்சியில் என்னுடைய கல்யாணத்தின் போதுதான் சந்திரிகா காணமற் போனாள்! அதன் பிறகுதான் பால்வண்ணநாதருமே காணமற் போனார். வாழ்க்கையில் இந்த ஒரு சம்பவம் என்னுடைய அமைதியையும் மனசாட்சியையும் எத்தனை தூரம் பாதித்திருந்தது என்பதை

சோமு

யாரும் பூரணமாக உணர்ந்து கொள்ளவே முடியாது. உண்மையில் அன்று ஒரு நாள் திருச்சி ஆஸ்பத்திரியில் ரவீந்திரனுடைய இதயக் கதவு திறந்து, அந்த இதய அந்தரங்கத்திலே உள்ள உணர்ச்சிகளை யெல்லாம் நான் கண்டு தெளிகிறவரை என் உள்ளத்திலும் நிம்மதி என்பது இல்லாமல்தான் இருந்தது. கடைசியில் ரவீந்திரன் ரயிலில் சந்தித்துத் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்த அந்தச் சிறுமியைப் பற்றித் தெரிந்து கொண்ட பிறகுதான் நான் ஒருவாறு நிம்மதி பெற்றேன்!''

இவ்வாறு டாக்டர் சுரேஷ் சொன்னதும் அப்பு கேட்டான்:


"அது சரி; ரயிலில் ரவீந்திரன் சந்தித்த சிறுமிதான் இலஞ்சிக் கல்யாணத்தில் காணமற் போன பெண் என்று எப்படி யூகித்தீர்கள்?''

"அது ஒன்றும் கஷ்டமில்லை, அப்பு! அந்தப் பிச்சைக்காரக் கிழவி இலஞ்சி என்ற பெயரைக் கேட்டதும் நடு நடுங்கிய காரணமும், மறுநாள் இலஞ்சிக் கோயிலுக்கு வந்து ரவீந்திரனிடம் பணம் வாங்கிப் போகச் சம்மதித்தவன், திரும்ப அந்தப் பக்கமே வராமல் மறைந்து போனதும் சேர்ந்து என் யோசனையைக் கிளறின. ஒரு வகையாகப் பால்வண்ணரின் மகள்தான் அந்தச் சிறுமி என்று யூகித்து விட்டேன். பிறகு சந்திரிகாவை நான் முதன் முதல் பார்த்ததும், என் யூகம் ஊர்ஜிதம் ஆகிவிட்டது. மிகச் சிறு வயதில் பார்த்த முகத்தின் சாயல் மங்கலாகத்தான் தெரிந்தது என்றாலும், அந்த மூக்கும் விழியும் பால்வண்ணரை அப்படியே நினைவுக்குக் கொண்டு வந்தன. அந்தக் காலத்தில் பால்வண்ணரின் குழந்தைக்குக் காந்திமதி என்று பெயர். காந்தி வீசிய அந்த மதிதான் - அந்தச் சந்திர பிம்பம்தான்-இன்று சந்திரிகாவாக ஒளி வீசுகிறது என்பதை உடனே முடிவு செய்து விட்டேன்! இன்று ரவீந்திரனுடைய வாழ்க்கையில் சந்திரிகா செய்த மகத்தான சாதனைகளை எண்ணும் போது, சந்திரனுடைய பெயரே அவளுக்கு அமைந்து விட்ட பொருத்தத்தை எண்ணி எண்ணி வியக்கிறேன்! ஏனென்றால் சர்ப்பகந்திக்கு 'சோடாசாந்த்' என்றும் 'சந்திரிகா' என்றும் வட நாட்டிலே அவர்கள் பாஷையில் இரண்டு பெயர்கள் உண்டு.''

அப்புலிங்கம் டாக்டர் சுரேஷின் வார்த்தைகளை ஒரே கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந்தான். ஐந்து நிமிஷம் மௌனம் நிலவியது. பிறகு டாக்டர் மேல் கண்டவாறு மெதுவான குரலில் பேசினார்:

"அப்பு! இலஞ்சியில் நடந்த என்னுடைய கல்யாணத்தில் சந்திரிகா காணமற் போனாள். பிறகு அதே இலஞ்சியில் நடைபெற்ற வேறொரு கல்யாணத்துக்கு ரவீந்திரன் வந்தபோது, அந்தக் கலைஞனுடைய சந்திப்புக்கு உள்ளாகி அவனுடைய அன்பிலே அவள் வளர்ந்தாள். இனி அதே இலஞ்சிக்கு அருகில் பொதிகை மலைக் காட்டிலே நடக்கப் போகும் மற்றொரு கல்யாணத்திலே அவள் பூரணமாக மீட்கப்பட்டு உரிய இடத்திலே சேரப் போகிறாள்.

இதுதான் வளர்ந்தும் தேய்ந்தும், தேய்ந்தும் வளர்ந்தும் இதய வானிலே தவழ்ந்து வருகிற அந்தச் சந்திரிகாவின் வாழ்க்கை வரலாறு!''



இப்படிச் சொல்லி விட்டு டாக்டர் சுரேஷ் அப்புலிங்கத்திடம் பொறுப்பான சில கல்யாண ஏற்பாடுகளை முழு நம்பிக்கையோடு ஒப்படைத்தார்.

* * *

சோலை குடியில் இலஞ்சிச் சாமியாரின் ஆசிரமத்துக்கு வெளியே பளிஞர்கள் நான்கு பேர்—வாலிபப் பிள்ளைகள்—உல்லாசமாகப் பாடிக் கொண்டு சென்றார்கள். கந்தப்பனுக்குச் சம வயதுப் பிள்ளைகள் அவர்கள். அவனுடைய தோழர்கள்!

புளிய மரத்துக் கிளி
  பூவெடுத்துத் தின்னும் கிளி
உன்னை அடுத்த கிளி - கந்தையா
  உனக்கேத்த பச்சைக்கிளி!

அரச மரத்துக் கிளி
  அத்திப் பழம் கொத்தும்கிளி
பஞ்ச வர்ணக் கிளி - கந்தையா
  பாட்டிலே பேசும் கிளி!


ஆல மரத்துக் கிளி
  ஆறு தாண்டி வந்தகிளி
சோலை மரத்துக் கிளி - கந்தையா
  சொந்தமாகி வந்த கிளி!

இந்தப் பாடல் ரவீந்திரனுடைய கவனத்தைக் கவர்ந்தது. கல்யாணியிடம் தன்னுடைய மூளைக் கோளாறு பற்றிப் பேச ஆரம்பித்த ரவீந்திரனுக்கு இந்தப் பாடல் அடி யெடுத்துக் கொடுப்பது போல இருந்தது.

"கல்யாணி! அந்தப் பாடலைக் கவனித்தாயா? இரவு இந்த நேரத்திலும் கூட உறக்க மில்லாமல் பளிஞர்கள் கந்தப்பனையும் சொக்கியையும் எண்ணிப் பரிகாசப் பாடல் பாடிக் கொண்டு செல்கிறார்கள். பாதிரி மரத்தில் பால் வடிய ஆரம்பித்ததிலிருந்து இவர்களுக்கு வேறு நினைப்பே இல்லை. இரவும் பகலும் இவர்கள் அடுத்த பௌர்ணமி யன்று நடக்கப் போகும் கல்யாணத்தைப்பற்றியே கற்பனை செய்து கொண்டு, அந்த மகிழ்ச்சியில் காட்டிலே உற்சாகமாகச் சுற்றிக் கொண்டு திரிகிறார்கள். தங்களுடைய தலைவனின் மகளுக்கும் தங்கள் நண்பனுக்கும் கல்யாணம் என்பதில் அவர்களுக்கு அத்தனை களிப்பு! வயதான பளிஞர்களையுந்தான் பாரேன்! முருகனைப் பற்றியும் முருகனுடைய இரண்டு தேவியர்களான வள்ளி, தெய்வயானையைப் பற்றியும் இன்று பகலிலே பாடிக் குதித்துக் கொண்டு இங்கே வந்தார்களே கவனித்தாயா?"


இப்படி ரவீந்திரன் சொன்னபோது கல்யாணி அம்மாளுக்குச் சுருக்கென்று உள்ளத்திலே முள் தைத்தது. ரவீந்திரன் இதைக் கவனித்தான்.

"முருகனுக்கு இரண்டு தேவியர்கள் என்று சொன்னதும் நீ முகத்தை ஏன் சுருக்கினாய் கல்யாணி. இந்தப் பளிஞருடைய குடியிருப்பில் இது அனாதிகாலமாக இருந்து வருகிற ஒரு பழக்கம் அம்மா. பளிஞர்களுடைய தலைவனுக்கு இரண்டு மனைவியர்கள் இருப்பதுபோல, இவர்கள் வழிபடும் தெய்வமாகிய முருகனுக்கும் இரண்டு தேவிமார்கள். குறிஞ்சி நிலம் என்று நம்முடைய தமிழ் நூல்களில் வர்ணிக்கப்படுகிற மலைநாட்டுத் தெய்வம் முருகன். குறிஞ்சிக் கடவுள் என்றே முருகனுக்குப் பெயர். அவனுக்கு இரண்டுமனைவிமார்கள். மற்றத் தெய்வங்களுக்



குந்தான் எப்படி என்கிறாய்? மருத நிலத்தின் கடவுளான திருமாலுக்கும் இரண்டு மனைவிமார்கள், ருக்மிணி, சத்தியபாமை என்று! பார்த்தாயா, இன்னும் முகத்தைச் சுருக்குகிறாயே — ஐயய்யோ இது என்ன! உன்னுடைய கண் கலங்குகிறதே! கல்யாணி, கல்யாணி!"

கண் கலங்கியது கல்யாணிக்கு. நின்று கொண்டிருந்தால் கலக்கம் அதிகமாகத் தெரியும் என்று நினைத்தாளோ என்னவோ, கல்யாணி குடிசைத் திண்ணையிலே இப்பொழுது உட்கார்ந்து கொண்டான். இரண்டு துளி கண்ணீர் அவளுடைய விழிகளிலே அரும்பிக் கீழே சிதறுவதற்காகத் தயங்கி நின்றது. ரவீந்திரன் புன்முறுவல் செய்தவாறு பேச்சை மேலே தொடர்ந்தான்.



"கல்யாணி, ஒரு மனிதனுக்கு எத்தனை மனைவியர்கள் இருக்கலாம் என்பது இன்று நேற்று ஏற்பட்ட பிரச்னையில்லையம்மா! தெய்வங்களுக்கு மத்தியிலும் இதே பிரச்னைதான். சொக்கி, கந்தப்பன், பளிஞர்களின் உலகம்—இங்கும் இதே பிரச்னைதான். ரவீந்திரன், கல்யாணி, சந்திரிகா—இந்த மூன்று பேருடைய உலகத்திலும் இதே பிரச்னைதான். ஒன்று தெய்வ உலகம். இன்னொன்று நாகரிகம் படராத வன உலகம். மூன்றாவதோ நாகரிகம் என்ற பெயரில் மிக மிக முன்னேறி யிருப்பதாகச் சொல்லும் நகரத்து மக்களுடைய பட்டண வாழ்க்கை உலகம். இந்த மூன்று உலகிலும் எல்லாரையும் குழப்பியடிக்கிற இந்தப் பிரச்னை இப்பொழுது உன்னுடைய கண்களைக் கலங்கச் செய்கிறது. கண்ணீர்த் துளிகள் கீழே விழுவோமா, வேண்டாமா என்று என்னைப் பயமுறுத்துகின்றன. அப்படித்தானே?"

இவ்வாறு கேட்டு விட்டு ரவீந்திரன் குறும்புத்தனமாகக் கல்யாணியைப் பார்த்தான். அவளுடைய கபடம் இல்லாத முகத்தில் எல்லையற்ற சோகம் பாசிபோலப் படர்ந்து நின்றது.

"கல்யாணி, ஆதியிலிருந்தே நீ என்னுடைய உள்ளத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தினால்தான் இத்தனை குழப்பங்களும் நேர்ந்தன. உன்னைச் சொல்கிறேன், அது தவறு. உண்மையில் நானே என்னுடைய உள்ளத்தைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை. நான் மட்டும் என்ன, சந்திரிகாவுமே அப்படித்தான். அவளுமே அவளுடைய உள்ளத்தைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை. இந்த மனச் சிக்கலின் காரணமாக ஏதேதோ குழப்பங்கள் நடந்தன. இப்பொழுது இத்தனை குழப்பங்களின் பயனாக நம்முடைய உள்ளம் தெளிய ஆரம்பித்திருக்கிறது. அந்தத் தெளிவிலிருந்து பேசுகிறேன். என்னுடைய வார்த்தையை நம்பம்மா கல்யாணி!"

இவ்வாறு சொல்லி விட்டு ரவீந்திரன் கல்யாணியைப் பார்த்துக் கேட்டான்:

"கல்யாணி! நீயே சொல். ஒரு பூப் பூத்த இடத்தில் இரண்டு கனிகள் எங்காவது உண்டாகுமா? இதை ஏன் நீ புரிந்து கொள்ளவில்லை? கண்ணன் பல கோபிகையர்களோடு விளையாடினான் என்றால் அது கண்ணனுடைய தெய்வப் பண்புக்கு ஒரு விளக்கம். சாதாரண மனித இதயம் படைத்த மக்களின் உலகிலே உள்ளத்தைத் துண்டு போடுவது என்பது உண்டா? மலை ஜாதி மக்களுடைய சமூக அமைப்புக்குச் சில பழக்க வழக்கங்கள் பொருத்தமாக இருக்கலாம். அதே வழக்கங்களை நாகரிக சமூகத்தோடு பழகி, குடும்பம் என்றும் உரிமை என்றும் கட்டுப்பாடுகளை வளர்த்துக் கொண்ட ஒரு கந்தப்பனுடைய வாழ்க்கையிலேயே கூட நாம் இன்னும் எதிர்பார்க்க முடியாது. நிச்சயமாகச் சொல்கிறேன். தன்னுடைய அன்பை ஒரே மாதிரி இரண்டு பெண்களுக்குப் பிரித்துக் கொடுப்பது என்பது கந்தப்பனால்கூட முடியாத காரியம் என்றுதான் நான் நினைக்கிறேன். இரண்டு மனிதர்களிடத்தில் ஒருவன் ஒரே மாதிரி எப்படி அன்பு செலுத்த முடியும்? ஏற்றத்தாழ்வு இருந்தே தீரும். இரண்டுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கவே இருக்கும். அப்படியானால் சந்திரிகாவுக்கும் எனக்கும் இருந்த தொடர்பு என்ன? அது ஏன் இத்தனை பெரிய சிக்கல்களுக்குக் காரணமாயிற்று?

"கல்யாணி, மீண்டும் மீண்டும் உன்னிடமே கேள்விகளைப் போடுகிறேன் என்று நினைக்காதே. உன்னைக் கேட்கிற கேள்விகள் எல்லாம் என்னையே பார்த்து நான் கேட்டுக் கொள்ளும் கேள்விகள். என்னுடைய இரத்த வேகமும் என் நரம்புகளின் துடிப்பும் இப்பொழுது சமனாகி இயங்குகின்றன. ஒவ்வொரு நாளும் சாமியாருடைய மருந்து வேலைசெய்து வருகிறது. படிப்படியாக என் மூளையில் ஒரு குளிர்ச்சி பரவிக்கொண்டு வருகிறது. இப்பொழுது

ஜம்மியின் லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டிகளுக்கு



பிரதி மாதாந்திர விஜயம்

நோயாளிகளின் சௌகரியத்தை முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க் குறித்த ஊர்களுக்கு அதனதன் எதிரே குறித்த தேதிகளில் பிரதி மாதமும் விஜயம் செய்வதால் அவரிடம் ஆலோசனை பெறலாம்.

○●○

ஆலோசனை நேரம் :

காலை 9 - லிருந்து 11 மணி வரை ; மாலை 3 - லிருந்து 5 மணி வரை

இடம்	தேதி	
கரூர்	1	காலை 10½ - 12
சேலம்	2	காலை & மாலை
ஈரோடு	3	காலை 10½ - 12
திருப்பூர்	3	மாலை
கோயமுத்தூர்	4	காலை & மாலை
பாலக்காடு	5	காலை
திண்டுக்கல்	6	காலை
பெரியகுளம்	6	மாலை 2½ - 4½
மதுரை	7 & 8	காலை & மாலை
கோவில்பட்டி	9	காலை 10½ - 12
தூத்துக்குடி	9	மாலை
திருநெல்வேலி ஜங்ஷன்	10	காலை & மாலை
திருநெல்வேலி ஜங்ஷன்	11	காலை மட்டும்
ஸ்ரீவைகுண்டம்	11	மாலை
அம்பாசமுத்திரம்	12	காலை
தென்காசி	12	மாலை
திருவனந்தபுரம்	13	காலை & மாலை
ராஜபாளையம்	14	காலை

இடம்	தேதி	
காரைக்குடி	15	காலை & மாலை
சிவகங்கை	16	காலை
புதுக்கோட்டை	16	மாலை
தஞ்சாவூர்	17	காலை & மாலை
பட்டுக்கோட்டை	18	காலை
திருத்துறைபூண்டி	18	மாலை
மன்னார்குடி	19	காலை & மாலை
திருவாரூர்	20	காலை & மாலை
நாகப்பட்டினம்	21	காலை
நன்னிலம்	21	மாலை
மாயூரம் டவுன்	22	காலை & மாலை
சீர்காழி	23	காலை
சிதம்பரம்	24	காலை & மாலை
கடலூர் என். டி.	25	காலை & மாலை
விழுப்புரம்	26	காலை & மாலை
விருத்தாசலம்	27	மாலை
காஞ்சிபுரம்	28	காலை & மாலை
வேலூர்	29	காலை & மாலை


○●○

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை—4 ★ (தெப்பக்குளம்) திருச்சிராப்பள்ளி ★ (பெரிய தெரு) கும்பகோணம்

அந்தச் சம்பவங்களை யெல்லாம் நினைத்துப் பார்க்கிறேன். எனக்கே திகைப்பாக இருக்கிறது. அன்று ஒருநாள் ஆஸ்பத்திரியில் டாக்டர் சுரேஷிடம் என் இதயத்தைத் திறந்து பேசினேன். அப்பொழுது எனக்கே என்னைப்பற்றி ஒரு தெளிவு இல்லை. என்னிடமே எனக்கு ஒரு நம்பிக்கை இல்லை. என் உணர்ச்சிகளைப் பற்றியே எனக்கு உறுதி யில்லாமல் இருந்தது. அதிகம் சொல்வானேன்? அன்று சந்திரிகா காணாமற் போனபோது, அவன் எழுதி வைத்துச் சென்ற கடிதத்தைக் கையில் எடுத்துப் பார்த்தேனே நினைவிருக்கிறதா? அப்பொழுது என் மனம் அடைந்த குழப்பமும் வேதனையும்!

"கல்யாணி, அந்தக் கடிதம் சந்திரிகாவின் முதலாவது கடிதம். ஆற்றிலே போய் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வது என்ற தீர்மானத்தில் அவன் அதை எழுதியிருக்கிறான். அதைப் படித்ததும் என் உள்ளம் துடித்தது. நான் கற்ற கலை, என்குடும்பத்தில் வழிவழியாக வந்த பிதிரார்ஜிதச் சொத்து, அந்த அற்புதமான சங்கீதச் செல்வம்— இத்தனையும் காவேரி நதியோடு போய் விடுவதா! எத்தனை கனவுகள் கண்டேன்! என்னவெல்லாம் கற்பனை செய்தேன்! என் உள்ளத்தில் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்த சங்கீதத்தை யெல்லாம் காவேரியிலே கொண்டு கொட்டி முழுகடிப்பதற்காகவா அத்தனை வாஞ்சையோடு சந்திரிகாவுக்குப் பயிற்சி அளித்தேன். ஐயோ! அந்தக் கடிதத்தைப் படித்ததும் என் இதயம் வெடித்தது. என் உள்ளத்திலிருந்து உதிரம் கொட்டியது. ஆறாகக் கண்ணீர் வடிந்தது. ஆனால் அதை நீ புரிந்துகொள்ளவில்லை. அது உன் குற்றமில்லை. என் குற்றமில்லை. யாருடைய குற்றமும் இல்லை. அது இதயத்தின் குற்றம். நீ ஒரு மனைவியாக நின்றதின் குற்றம். நான் ஒரு கணவனாக அமைந்ததன் குற்றம். இல்லை இல்லை. அதுகூடத் தவறு. அது அன்பின் குற்றம். ஒரு மனைவிக்கும் கணவனுக்கும் இடையே ஓடுகிற பாசத்தின் குற்றம். இன்னும் யோசித்துப் பார்த்தால் அது குற்றமேயில்லை. அதுதான் நியாயம். ஆனால் அந்த நியாயத்தை நியாயம் என்று புரிந்து கொள்வதற்கு வேண்டிய மனநிலை நமக்கு இல்லை. எனக்கு இல்லை. அந்த மன நிலை எனக்கு இல்லை என்பதைப் புரிந்து கொண்டு அநுதாபப் படக்கூடிய பொறுமை அல்லது மனத்திட்பம் உனக்கு இல்லை. அதுமட்டும் இருந்திருந்தால், நீ ஏன் அந்தக் கடிதத்தை வெடுக்கென்று என் கையிலிருந்து பிடுங்கி யிருக்க வேண்டும்? பிடுங்கி அதைக் கிழித்துப் போட முனையும் போது, நானாவது பொறுமையோடு இருந்திருக்கலாம் அல்லவா? நான் திமிறினேன். நீ விடவில்லை. மாடிப் படிகளில் ஓடினாய். எனக்கு ஆவேசம் வந்தது. அந்தக் கடிதத்தைப் பலவந்தமாக வாங்கிப் படித்து விட்டு நீ என்ன சொன்னாய்? 'இவன் முழுகி விட்டால் குடியே முழுகிவிடுமோ! யாரை இப்படிப் பயமுறுத்துகிறான்!' என்றாய். ஞாபக மிருக்கிறதா? கல்யாணி, அந்த



வார்த்தைகளை என்னால் தாங்க முடியவில்லை. என்னுடைய சங்கீத பரம்பரையை நிலை நாட்ட வேண்டும் என்ற என் உணர்ச்சியை நீ புரிந்து கொள்ளாதது மட்டு மில்லை, அதை ஏளனப் படுத்தினாய் என்று நினைத்தேன். சந்திரிகாவுக்கும் எனக்கும் இடையே இருந்த அந்த எல்லையற்ற பாசத்தை நீ நிந்தித்தாய் என்று எண்ணினேன். கையும் காலும் எனக்குப் பதறின. அப்படியே உன் மேல் பாய்ந்தேன். உணர்ச்சி வேகத்தில் நீ சற்று விலகியதும், என் கால் இடறிற்று. மாடிப் படிகளிலே கால் சறுக்கி விழுந்தேன். பிறகு? பிறகு? பிறகு என்ன நடந்தது? ஒரே குழப்பந்தான்! உண்மையில் அதே இரவில் ஆற்றில் விழுவதில்லை என்று தீர்மானித்த சந்திரிகா, மறுபடியும் வீட்டு வரை வந்து, தன்னுடைய இரண்டாவது கடிதத்தை ஜன்னலோடு உள்ளே போட்டிருக்கிறான். அதை நீயும் கவனிக்கவில்லை. நானும் கவனிக்கவில்லை. ஒரு வாரம் கழித்து அது டாக்டரின் கையில் அகப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தை ஸ்டதஸ்கோப் வைத்துப் பார்த்துக் குழம்பினார் அவர்!"

கல்யாணி அம்மாள் விம்மி விம்மிக் கண்ணீர் வடித்தாள். ரவீந்திரன்



எழுந்து சென்று தன்னுடைய மேல் துண்டினால் கல்யாணியின் கண்களைத் துடைத்தான்.

"கல்யாணி, அழாதே! இதெல்லாம் சென்று போன விஷயங்கள். இவற்றிற்காக அழக்கூடாது. இந்த விஷயங்கள் சம்பவித்த போது எத்தனை அழுதோம் நாம்! அந்த அழுகை போதாதா? இப்பொழுது அவற்றை நினைத்துப் பார்க்கும் போதுகூட அழ வேண்டுமா? உண்மையில் இவற்றை இப்பொழுது நினைத்துப் பார்க்கும் போது சிரிக்க அல்லவா வேண்டும்!"

இப்படிச் சொல்லிவிட்டு ரவீந்திரன் மறுபடியும் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். அவனுடைய கண்களிலே பழைய குறுகுறுப்பு இருந்தபோதிலும், அந்தக் குறு குறுப்புக்கு ஊடாக ஒரு காரண காரியத் தொடர்பு இழையோடிக் கொண்டிருந்தது. விழி மையத்திலே சூன்யம் விலகி, பிரகாசமான ஒளி ஒன்று ரத்தினக் கல்லின் ஜொலிப்பைப் போல மின்வீச்சு வீசிக்கொண்டிருந்தது.

கல்யாணி அம்மாள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஒரே துக்கத்தில் ஆழ்ந்திருந்தவள் சற்று நேரத்திற்கெல்லாம் முந்தானையினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு ரவீந்திரனைப் பார்த்துச் சொல்லுவாள்:

"ஏது எப்படியிருந்தாலும் நான் ஒரு பெண்தானே. என்னுடைய புத்திக்கு எட்டாத விஷயங்களைக் கொண்டு நான் உங்களுடைய மனத்தைப் புண்படுத்தியிருந்தால் அதைப் போலப் பாவம் வேறொன்றும் இல்லை. அப்பா அந்தக் காலத்தில் அடிக்கடி சொல்லுவார்கள், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று. ஆனால் என் விஷயத்திலோ நான் எவ்வளவோ பெருமைப்பட வேண்டிய புருஷனைப் பார்த்துத்தான் எனக்கு மாலையிட்டார்கள். கல்லுக்கும் புல்லுக்கும் என்னை வாழ்க்கைப்படச் சொல்லவில்லை எங்கள் அப்பா! அப்படியிருந்தும் நான்தான், என்னுடைய அறிவுக் குறைவினால்......"

"இல்லவே இல்லை கல்யாணி. குற்றம் என்று ஒன்று உன்னிடம் சொல்ல வேண்டும் என்றால், அது நீ ஒரு பெண்ணாகப் பிறந்து, மனைவியாக வாழ்க்கைப்பட்டு, மனைவியாகவே வாழ நினைத்ததுதான்! அதைக் குற்றம் என்று சொல்லலாமா? அப்படிச் சொல்வது தவறு!"

"அதற்குச் சொல்லவில்லை. உங்களுடைய கலைத் திறமையை ஊரும் உலகமும் எல்லாம் கொண்டாடிற்று. அந்தப் பெருமையெல்லாம் எனக்கு அப்பொழுது தெரியாமல் போய் விட்டது. இப்பொழுது இத்தனை நாளும் அந்தப் பெருமை இல்லாமல் இருப்பதால், நீங்கள் எப்பொழுதாவது மறுபடியும் புல்லாங்குழல் வாசித்துக் கேட்பேனா என்று இருக்கிறது! உண்மையாகவே உங்களுடைய சங்கீதத்தைக் கேட்க வேண்டும், கேட்க வேண்டும் என்று என் மனது துடிக்கிறது."

இப்படிக் கல்யாணி சொன்னபோது மீண்டும் அழுதுவிட்டாள்.

ரவீந்திரன் சொன்னான்: "கல்யாணி! சங்கீதம் என்பது புல்லாங்குழலுக்குள்ளேயா இருக்கிறது. இல்லை. வாசிப்பவனுடைய உள்ளத்துக்குள்ளே இருக்கிறது அது. அந்த உள்ளம் சரிப்பட்டு விட்டால் புல்லாங்குழலும் பேச ஆரம்பித்துவிடும். அது சரியில்லாதவரையில் புல்லாங்குழல், புல்லாங்குழலில்லை. வெறும் மூங்கிற் குழல்தான். அடுப்பு ஊதத்தான் பயன்படும்! இல்லை. அன்று உண்டியற் கடைச் செட்டியார் சொன்னாரே அது போல அடுப்பு ஊதக் கூடப் பயன்படாது. ஒரு பக்கம் அடைத்திருக்கிறது!"

இப்படிச் சொல்லிவிட்டு ரவீந்திரன் சிரித்தான். சிரித்துக்கொண்டே சொல்லுவான்:

"கல்யாணி! என்னுடைய மனம் என்ற குழலில் துவாரங்கள் எல்லாம் இப்பொழுது அடைப்பு நீங்கிச் சரியாகி விட்டன. ஆனால் உதட்டிலே பொருத்திக் காற்று ஊதுகிறோமே, அந்தப் பெரிய துவாரத்திலேதான் ஏதோ ஒரு சிறு துரும்பு சிக்கி நிற்கிறது. அந்தத் துரும்பை எடுத்து விட்டால் இந்த உள்ளம் என்ற குழலிலிருந்து இசை வெள்ளம் மீண்டும் ஊற்றெடுத்து ஓடும். சந்தேகம் இல்லை. ஆனால் அந்தத் துரும்பை எப்படி எடுப்பது? டாக்டர் சுரேஷ்தான் அதற்கும் ஒரு மருந்து கண்டு பிடிக்க வேண்டும்—"

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே வெளியே ஒரு பலமான கூக்குரல் கேட்டது.

(தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram



ஓ! எவ்வளவு விசனமடைந்த தாயாராயிருந்தாள் அவள்! அவளுடைய குழந்தை ஏன் வெளுத்துப் போய் பார்க்க நோயுற்றும் சதா அழுகையுமாயிருக்கிறதென்பதை அவள் தெரிந்து கொள்ள வில்லை.



அவள் சகோதரிக்கு அதன் காரணம் புரிந்தது அவள் சொன்னாள் "நீ தவறான முறையில்" ஆகாரம் கொடுத்தாய். விரைவில் அவனுக்கு 'க்ளாக்ஸோ' கொடுக்க ஆரம்பிக்கவும். எவ்வளவு விரைவில் அவன் குணமடைகிறானென்பதைக் கண்டு நீயே ஆச்சரியப்படுவாய்!



"லக்ஷக்கணக்கான தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளின் திடமான வளர்ச்சிக்கு நம்பியிருப்பது புஷ்டியுள்ள பால் - உணவு, 'க்ளாக்ஸோ'. உறுதியான எலும்பும் பற்களும் வளருவதற்காக 'க்ளாக்ஸோ'வில் விடமின் 'டி'யும் ரத்தத்தை வளம் செய்ய இரும்பு சத்தும் சேர்க்கப்பட்டுள்ளன."



உண்மையில் ஒரு சில வாரங்களிலேயே அவன் ஒரு முற்றிலும் மாறிய குழந்தையாய் தோன்றினான். இதற்கு முன் என்றுமேயில்லாத ஆனந்தம்! அயர்ந்து தூங்கினான்! பின் வெகு விரைவில் குழந்தை வளர ஆரம்பித்து எடையும் அதிகரித்தது 'க்ளாக்ஸோ'வுக்கு நன்றி

Glaxo

'க்ளாக்ஸோ' குழந்தைகளின் மிகச் சுத்தமான பால் உணவு

D-25

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



S. 236-50 TM